

# ஞான விளக்கு





திருமூலதேவ நாயனார்



ஆறுமுகநாவலர்

சிவத்தமிழ்வித்தகர்

சிவ மகாலிங்கம்

# ஞான விளக்கு

சிவத்தமிழ் வித்தகர்

சிவ. மகாலிங்கம்

இந்து சமயப் பேரவை
ஒன்ராறியோ
கனடா

நூல்: ஞான விளக்கு

ஆசிரியர்: சிவ. மகாலிங்கம்

முதற்பதிப்பு: செப்டம்பர், 2003

வெளியீடு: ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

எழுத்தமைப்பு: மா. கனகசபாபதி

அச்சடிப்பு: விவேகா அச்சகம்

Title: GNANA VILAKKU

Author: Siva Mahalingam

First Edition: September, 2003

Published by: Ontario Hindu Religious Society, Canada

Typesetting: M. Kanagasabapathy

Printed and Bound in Canada by: Viveka Printers

உ

# ஞான விளக்கு

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | II |
| முன்னுரை | III |
| அணிந்துரை | V |
| விநாயகர் வழிபாடு | 1 |
| சக்தி வழிபாடு | 8 |
| முருக மந்திரம் | 18 |
| வைரவர் வழிபாடு | 25 |
| திருமுறையில் சைவ சித்தாந்தம் | 30 |
| சித்தர்கள் கண்ட சமய நெறி | 48 |
| திருமந்திரத்தில் சைவம் | 54 |
| சைவத்தின் காவலர் | 68 |
| இதயத்தை புனிதமாக்கும் எங்கள் சமயம் | 83 |

ஓம் நமசிவாய

# பதிப்புரை

இந்து சமயப் பேரவை நடத்திய சேக்கிழார் விழாவிலும், பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவிலும் கலந்து கொள்வதற்காக சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள் (வடபிராந்திய உதவிப் பணிப்பாளர், இலங்கை, இந்து கலாச்சார அமைச்சு) பேரவையினால் அழைக்கப்பட்டார். சிறந்த சொற் பொழிவாளரான அவர் இங்கே எமது நிகழ்ச்சிகளிலும், மற்றும் ஆலயங்களிலும், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிலும் சொற்பொழிவுகளையும் பேட்டி களையும் நிகழ்த்தியுள்ளார். சிவத்தமிழ் வித்தகரின் வருகையினால் கனடாவில் சைவசமய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே இவரின் வருகையை முன்னிட்டு ஞாபகார்த்தமாக பல சந்தர்ப்பங்களில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'ஞானவிளக்கு' என்ற தலைப்பில் இந்நூலை வெளியிடுகிறோம்.

நூலாசிரியரின் திருமுறைச் செல்வம் என்ற நூலையும் 2001ம் ஆண்டு ஒக்ரோபர் 6ம் திகதி இந்து சமயப் பேரவை மறு வெளியீடாக வெளியிட்டு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

விநாயகர் வழிபாடு, சக்தி வழிபாடு, முருக மந்திரம், வைரவர் வழிபாடு, திருமுறையில் சைவ சித்தாந்தம், சித்தர்கள் கண்ட சமய நெறி, திருமந்திரத்தில் சைவம், சைவத்தின் காவலர் நாவலர், இதயத்தை புனிதமாக்கும் இந்து சமயம், என்ற ஒன்பது தலைப்புகள் இந்நூலில் இடம்பெறுகிறது.

இந்நூலைப் படிப்பவர்கள் அளவிடமுடியாத சமயக் கருத்துக் களை பெற்றுக்கொள்வார்கள் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

இந்நூலை அச்சிட்டு உதவிய விவேகா அச்சகத்தினருக்கும், வடிவமைப்புச் செய்த திரு. மா. கனகசபாபதி அவர்களுக்கும் நூல் வெளியிடுவதற்கு பல வழிகளிலும் உதவி புரிந்த சிவனடியார்களுக்கும் சைவச்சான்றோர் களுக்கும் எல்லாம் வல்ல ஆடல்வல்லானின் இறைகடாச்சம் கிடைப்பதாகுக.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

ந. பரராசசிங்கம்
தலைவர்
ஒன்ராறியோ, இந்து சமயப் பேரவை

சிவ. முத்துலிங்கம்
நூல் வெளியீட்டுப்
பொறுப்பாளர்

# முன்னுரை

இந்து சமயம் உலகத்திலே தோன்றிய சமயங்களிலே பழமையும், பெருமையுமு வாய்ந்த சமயம் ஆகும். தொன்றுதொட்டு வரும் வாழ்க்கை நெறியை விளக்குவதால் இந்து சமயத்திற்கு சனாதன தர்மம் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. எங்களுடைய சமயத்துடன் பண்பாடு, கலை, தத்துவம், ஆகிய அனைத்தும் பின்னிப் பிணைந்துள்ளன. "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற வாக்கிற்கு அமைய இன்று எமது சமய நெறி உலகமெல்லாம் பரவியுள்ளது. புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற எமது மக்கள் தாம் சென்று வாழும் இடம் எல்லாம் எங்களது சமய நெறியினைப் பரப்பி வருகிறார்கள். ஆலயங்களை அமைத்து எமது வழிபாட்டு மரபினைப் பேணி வருகிறார்கள். பக்தி சிந்தனையோடு ஆத்மீகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

வடஅமெரிக்கா கண்டத்திலே உள்ள கனடா தேசத்தில் புலம்பெயர்ந்த சைவத்தமிழர்கள் இலட்சக்கணக்கில் வாழ்கிறார்கள். சைவத்தமிழ் மக்கள் செறிந்து வாழும் மாநிலங்களில் ஒன்ராறியோ மாநிலமும் ஒன்றாகும். இந்த ஒன்ராரியோ மாநிலத்தில் ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிறுவனமே இந்து சமயப் பேரவை ஆகும். இப்பேரவையினர் சைவத்தமிழர்களின் பொக்கிஷமாகத் திகழும் பன்னிரு திருமுறைகளை வளர்க்கும் பணியில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டு வருகிறார்கள். திருமுறைகளை முற்றோதும் நிகழ்வினை வருடாவருடம் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். மணிவாசகப் பெருமான் தந்த ஞான வாசகமாகிய திருவாசகத்தினை ஒன்ராரியோ மாநிலத்தின் பல ஆலயங்களிலும் முற்றோதல் செய்து வருகிறார்கள்.

இந்த வருடம் இவர்களால் நடத்தப்படுகின்ற சேக்கிழார் விழாவிலும், பன்னிரு திருமுறைப் பூர்த்தி விழாவிலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்ற வாய்ப்பு திருவருள் துணையினால் அடியேனுக்கும் கிடைத்தது. இவர்கள் எனது கனடா வருகையின் ஞாபகார்த்தமாக ஒரு நூலினை வெளியிட விரும்பினார்கள். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் 1999ஆம் ஆண்டு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் வெளியிடப்பட்டு வைக்கப்பட்ட 'திருமுறைச் செல்வம்' என்ற எனது நூலினை

2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ம் திகதி கனடாவிலே இந்து சமயப் பேரவையினர் வெளியிட்டு வைத்தனர்.

இப்பொழுது வெளியிடப்படும் 'ஞான விளக்கு' என்ற நூலிலே எனது ஒன்பது கட்டுரைகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் ஆலய மலரிலே எழுதப்பெற்ற விநாயகர் வழிபாடு, நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக மலரிலே எழுதிய சக்கி வழிபாடு, வைரவர் வழிபாடு, நல்லைக்குமரன் மலரிலே எழுதிய முருக மந்திரம், இரண்டாவது உலக இந்து மாநாட்டு மலரிலே வெளிவந்த திருமந்திரத்தில் சைவம், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய நினைவு நாள் பேருரையிலே நிகழ்த்திய திருமுறைகளில் சைவசிததாந்தம், பேராதனைப் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் வெளியீட்டிலே எழுதப்பெற்ற மனிதனைப் புனிதனாக்கும் இந்துமதம், இலங்கை இந்து சமயப் பேரவையின் உபதலைவராக இருந்த திரு. ஆ. மகாலிங்கம் அவர்களுடைய நினைவு மலரில் வெளியிடப்பட்ட சைவத்தின் காவலர் ஆகிய ஒன்பது கட்டரைகளின் தொகுப்பு நூலினை "ஞான விளக்கு" என்ற பெயரில் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை வெளியிடு கின்றது.

இந்நூல் வெளிவருவதற்காக அயராது உழைத்த இந்து சமயப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவ. மகாலிங்கம்

# அணிந்துரை

'ஞானவிளக்கு' என்னும் இவ்வரிய நூலிலே ஒன்பது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் எட்டுக் கட்டுரைகள் சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ மகாலிங்கம் அவர்களால் அவ்வப்போது பல சஞ்சிகைகளில் எழுதப்பட்டவை. 'திருமுறை களிற் சைவ சிததாந்தம்' என்பது இள்வாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அவர் நிகழ்த்திய நிறுவுநர் நினைவுப் பேருரையாகும்.

நூல் மிகப் பொருத்தமாகவே 'விநாயகர் வழிபாடு' என்ற கட்டுரையுடன் தொடங்குகின்றது. விநாயகப் பெருமானைத் தோத்திரங்களாற் காட்டுவதிலும் தத்துவ விளககங்களாற் காட்டியிருக்கின்றார் ஆசிரியர். 'தென் இந்தியாவிலே பெரும்பாலும் பிரமச்சாரியாக விளங்கும் விநாயகர் வட இந்தியாவிலே சக்தியுடன் வீற்றிருக்கிறார். இதற்கு எதிர்மாறாக முருகப் பெருமான் வடநாட்டிலே பெரும்பாலும் பிரமச்சாரியாகவும் தென் நாட்டிலே இரு சக்திகளுடனும் விளங்குகிறார்' என்ற கருத்துக்கான காரணங்களை விளக்க இக்கட்டுரை இடந்தராது என்று போலும் ஆசிரியர் அவற்றைத் தவிர்த்து விட்டார். தனியான ஒரு கட்டுரையில் இந்தக் கருத்தை அவர் விளக்குதல் சாலவுந் தேவையானதொன்றாகும்.

அடுத்து வரும் 'சக்தி வழிபாடு' என்ற கட்டுரையும் ஆசிரியரின் ஆய்வுத் திறத்தை நன்கு புலப்படுத்துகின்றது. சக்தியும் சிவனும் ஒன்றாதலால் சத்தி வழிபாட்டைச் சிவவழிபாடாகவே கொள்ளுதல் வேண்டும். மேலும் சாக்த சமயத்தவர் பலர் சத்தியுடன் சிவனையும் சேர்த்தே வழிபடுகின்றனர்.

பனிதரும் திங்களும் பாம்பும்ப கீரதி யும்படைத்த
புனிதரும் நீயுமென் புந்தியெந் நாளும்பொ ருந்துகவே

என்று அபிராமிப்பட்டர் வணங்குவதைக் கவனித்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் தாய்மீது ஒரு பிள்ளை அதிக பற்று வைத்திருக்கிறது என்பதற்காக அதனைத் தள்ளிவைப்பாரும் உளரோ? சைவ சித்தாந்திகள் இது பற்றிச் சிந்தித்தல் வேண்டும். பழந்தமிழர்கள் சக்தியை வெவ்வேறு வடிவில் வழிபட்ட மரபை

ஆசிரியர் ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியிருப்பதுங் கவனிக்கத் தக்கது.

முருக மந்திரம், வைரவர் வழிபாடு ஆகிய கட்டுரைகளைத் தொடர்ந்து இடம்பெறும் மூன்று கட்டுரைகளும் சைவசித்தாந்தம் சம்பந்தமானவை. அவை ஆழமான ஆய்வின்வழி பெற்ற தரவுகளைக் கொண்டுள்ளன. திருமுறைகளிலும் சைவசித்தாந் தத்திலும் ஆசிரியருக்கு இருக்கும் ஆன்ற அறிவு காரணமாகவும் கற்றதை உணர விரித்துரைக்கும் திறமை காரணமாகவும் படிப்போர்க்கு அவை நல்ல விருந்தாக அமைந்துள்ளன.

'சைவத்தின் காவலர்' என்பது நாவலர் பெருமானது வரலாற்றுக் கட்டுரை. பரந்த சமுத்திரம் ஒன்றிற் பக்குவமாகவே முத்துக்குளித்திருக்கின்றார் ஆசிரியர். இறுதியாகவுள்ள 'இதயத்தைப் புனிதமாக்கும் எங்கள் சமயம்' என்ற கட்டுரை வித்தியாசமானது - பொதுவானது. இந்து சமயத்தின் பொதுவியல்புகளையும் சிறப்பியல்புகளையும் விளக்குவது.

எமது சமயத்தின் பெருமையை அடிக்கடி எமது மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டிய தேவை ஒன்று தொடர்ந்து இருக்கவே செய்கின்றது. அதனை எழுத்தாலும் பேச்சாலும் செய்துவரும் சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கம் அவர்களின் தொண்டு போற்றுதற்குரியது.

எம்மவர் பலர் இன்றும் பிற சமயத்தைத் தழுவுவதற்கு எமது சமயத்தின் பண்பையும் பயனையும் நன்கு அறிந்து கொள்ளாமையும் ஒரு காரணமாகும். இரண்டாவது காரணமாக எமது சமயவாதிகளின் போலித்தனங்களைக் கூறுதல் வேண்டும். போலிச் சமயிகளைத் திருத்த வேண்டிய கடமைகளும் உண்மைச் சமயிகளுக்கு உண்டு. இக்கட்டுரைகள் மூலம் சிவத்தமிழ் வித்தகர் தமது கடமையைச் செய்துள்ளார்.

எல்லாக் கட்டுரைகளிலும் இலங்கையை அவர் தொடர்புபடுத்தி எழுதியிருப்பது ஒரு சிறப்பு. சொற்பொழிவுகளிலே விளங்கு தமிழில் அவர் முழங்குவது போல கட்டுரைகளிலும் இனிய தமிழில் பல அரிய தத்துவங்களைக் கனிய வைத்துள்ளார்.

மாந்தி மகிழ்ந்து உண்மைச் சமயிகளாவோமாக!

வி. கந்தவனம்

# விநாயகர் வழிபாடு

## விநாயகர் வழிபாட்டின் முக்கியத்துவம்

இந்து சமயத்தவர்கள் மத்தியில் விநாயகர் வழிபாடு மிகவும் முக்கிய இடம்பெற்றுள்ளது. இந்துக்கள் தாம் எக்காரியத்தை ஆரம்பிக்க முன்பும் விநாயகப் பெருமானை வழிபாடு செய்தே காரியங்களை ஆரம்பிப்பார்கள். இடையூற்றை நீக்குபவரும் எடுத்த கருமங்களைக் கைகூடச் செய்பவரும் கணபதியே என்பதனால் நாம் முதலில் அவரை வணங்குகிறோம். இதனாலேயே அவருக்கு விக்கினேஸ்வரன் என்ற பெயர் உண்டாயிற்று. பிரணவம் என்ற ஓங்கார வடிவினர் கணபதி என்றும் அவருடைய துதிக்கை ஓங்காரத்தையே குறிக்கிறது என்றும் காணாபத்திய மதத்தினர் கொள்வார்கள். கணங்களுக்குத் தலைவர் ஆகையால் கணபதி என்றும், துதிக்கையோடு சேர்ந்து ஐந்து கரங்களை உடையவர் ஆகையால் ஐங்கரன் என்றும் தமக்கு மேலே வேறொரு தலைவர் இல்லாதவராகையால் விநாயகர் என்றும் பிரபஞ்சம் முழுவதையும் தம்முள் அடக்கிக் கொள்வதால் லம்ப உதரர் (லம்போதரர்) என்றும் பல பெயர்கள் அவருக்கு வழங்கப்படுவதுண்டு.

இந்து சமயக் கிரியைகள் அனைத்தையும் ஆரம்பிக்கும் சிவாச்சாரியார்கள் விநாயகரை வணங்கியே ஆரம்பிப்பார்கள். பின்வரும் மந்திரத்தைக் கூறி கிரியைகளை ஆரம்பிப்பார்கள்.

"சுக்கிலாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்ன வதனம் த்யாயேத் சர்வவிக்னோப சாந்தயே". உலகில் வாழும் இந்துக்கள் அனைவரும் விநாயகப் பெருமானை முதற் தெய்வமாக வழிபடுகிறார்கள். சகல மங்கல காரியத்தின் ஆரம்பத்திலும்

முதலில் விநாயகரை வழிபட்டே காரியத்தை ஆரம்பிப்பார்கள். எழுத ஆரம்பிக்கும் போதும் பிள்ளையார் சுழியிட்டு கணபதியை வழிபட்டே ஆரம்பிப்பர். எளிமையான அமைப்பில் வணங்கக்கூடிய ஞானத் தெய்வமாக விநாயகப் பெருமான் காணப்படுகிறார். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பிள்ளையார் உருவங்கள் அரச மரங்களினடியிலும் குளத்தங்கரைகளிலும் வயலோரங்களிலும் வைத்து வணங்கப்பட்டு வருகின்றன. வழிபடும் விநாயகர் அரசன் ஆகிவிடுகிறார். மகாயான பௌத்தம் விநாயகர் வழிபாட்டை ஏற்று சீனா, யப்பான் போன்ற நாடுகளில் நிலைபெறச் செய்துள்ளது.

## விநாயகர் உருவத்தின் தத்துவம்

கணபதி என்ற பெயருக்கும் கணபதியின் தோற்றத்துக்கும் தத்துவ விளக்கங்கள் கூறப்படுகின்றன. ககரம் மனோவாக்கு களையும் ணகரம் அவற்றைக் கடந்த நிலையையும் குறிக்க கணபதி கணேசன் ஆகிறார். ககரம் அறிவையும் ணகரம் வீட்டின்பத் தையும் குறிக்கும் என்பது இன்னொரு விளக்கமாகும். பிள்ளை யாரின் துதிக்கையில் இருக்கும் மோதகம் இன்பத்தைப் பயக்கும் ஞானமாகும். வாகனமான பெருச்சாளியானது நமக்குள் இருந்து நம்மை அழிக்கும் கள்ளத்தனமான உலகப்பற்றின் உருவகமாகும். கணபதி மடிமேல் சக்தியை வைத்துக் கொண்டு வல்லப கணபதியாக எழுந்தருளியுள்ளார். கணபதி அறிவையும் பயனையும் தருவதால் அவருக்கு புத்தி சித்தி என்று இரு தேவியர்கள் இருக்கிறார்கள். பிள்ளையாரும் சிவனைப் போலவே ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்காகப் பஞ்சகிருத்தியங்களைச் செய்கிறார்.

ஐந்து முகம் உள்ள விநாயகரின் வடிவம் பஞ்சமுக விநாயகர் வடிவமாகும். நாலுதிசைகளை நோக்கியும் மேல் நோக்கியும் உள்ள இத்திருமுகங்கள் இறைவனின் எல்லையற்ற ஆற்றலைக் குறிக்கும். பாசம் படைத்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும், அங்குசம் அழித்தலையும், துதிக்கை மறைத் தலையும் மோதகம் அருளலையும் குறிக்கும் என்பர். இவருடைய திருவுருவத்தில் யானைத்தலையும் மனித உடம்பும் கலந்து விளங்குகின்றது. யானை முகத்தை உடைய விநாயகப் பெருமான் கருணையெனும் மதநீரைப் பொழிந்து கொண்டு இருக்கிறார் எனவும் அவரது துதிக்கை மும்மலமாகிய காட்டினை ஒழித்து நம்பிக்கை ஊட்டுகிறது எனவும் ஞானிகள் கூறுவர்.

## வேத உபநிடதங்களில் பிள்ளையார் வழிபாடு

வேத இலக்கியங்களில் யானைமுகன் வழிபாடு நேரடியாகக் குறிக்கப்படவில்லை. இருக்கு வேதத்தில் இடம்பெற்றுள்ள பிரஹ்மனஸ்பதி பற்றிய பாடலிலும் இந்திரனைக் குறித்துப் பாடப்பெற்ற பாடல் ஒன்றிலும் காணப்பட்ட சில அடைமொழிகள் பிற்காலத்தில் கணபதிக்குரியனவாகக் கூறப்பட்ட இயல்புகளுடன் ஒத்துக் காணப்படுகின்றன. கிருஷ்ணயசுர் வேதத்திலுள்ள சத்ருத்திரீயம், வாஜசனேயி சம்ஹிதை ஆகியவற்றிலும் கணபதி பற்றிய சில குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சத்ருத்திரீயம் கணபதிக்கு வணக்கம் என்று உருத்திரனையே வணங்குகிறது. உருத்திரன் கணங்களுக்குத் தலைவனாக இங்கு கூறப்பட்டபோதும் புராணங்களில் இவ்வியல்பு கணபதிக்கு உரியதாகவே குறிக்கப்படுகிறது. கணேஷ காயத்திரி மந்திரத்தில் கூறப்படும் பாடல் விநாயகப் பெருமானை நோக்கித் துதிக்கப்படும் அனுபூதி நிறைந்த பிரார்த்தனையாக அமைந்துள்ளது. (தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய கீமஹி).

அதர்வசிரஸ் உபநிடதம் விநாயகரை உருத்திரனுடன் சேர்த்துக் கூறுகிறது. கணபதி உபநிடதம் ஏரம்ப உபநிடதம் என்பனவும் விநாயகரையே முழுமுதற் கடவுளாகக் கூறுகின்றன. கணபதியைக் குறிப்பதாகக் கருதப்படும் சில குறிப்புகள் வேத இலக்கியங்களில் காணப்பட்டபோதும் வேத காலத் தெய்வக் குழுவில் கணபதி என்ற பெயரிலோ அல்லது அவனுக்குரிய வேறு எந்தப் பெயரிலோ தனித் தெய்வமாக அவன் இடம்பெறவில்லை. மனுதர்ம சாஸ்திரத்தில் இடம் பெற்றுள்ள குறிப்பு ஒன்று சிவனைப் பிராமணர்களின் தெய்வமாகவும், கணேசனைச் சூத்திரர்களின் தெய்வமாகவும் குறிப்பிடுகிறது. கணபதி முக்கியமற்ற கிராமத் தெய்வமாகவும் கீழ் வகுப்பினரால் வழிபடப்பட்டவனாகவும் இருந்ததனால் அவன் வேதகாலத் தெய்வக் குழுவில் தனியாக இடம்பெறவில்லை.

## இதிகாச புராணங்களில் கணபதி வழிபாடு

இதிகாசங்கள் கூறும் தெய்வக் குழுவிலும் கணபதி இடம்பெறவில்லை. அவற்றிற் காணப்படும் சம்னுஷ் கணேஷ்வர்

ஆகிய பெயர்களும் சிவனையே குறித்தன. வியாசரின் வேண்டுகோளுக்கு இணங்கி மகாபாரதத்தினை விநாயகப் பெருமானே தமது திருமருப்புக் கொண்டு எழுதினார் என மகாபாரத வரலாறு கூறுகிறது. புராணங்களில் விநாயகப் பெருமான் கணபதி, விநாயகன் என்றே குறிப்பிடப்படுகிறார்.

ஸ்கந்தபுராணம் பார்வதியை மட்டும் அவனுடை படைப்புடன் தொடர்புபடுத்திக் கூறும். ஆனால் பிரமவைவர்த்தம் போன்ற புராணங்களில் சிவன் பார்வதி ஆகிய இருவரும் கணபதியின் படைப்புக்கு காரணகர்த்தாக்கள் என்று கூறப்பட்டுள்ளது. சிவன் உமாதேவியார் ஆகியோரின் மூத்த குமாரராக விநாயகப் பெருமான் புராணங்களில் சித்திரிக்கப்படுகிறார். விநாயக புராணம் விநாயகப் பெருமானின் அருட்சிறப்புக்களையும் அவரின் வீரதீரச் செயல்களையும் எடுத்து விளக்குகிறது. கயமுகாசுரன் ஆகிய அசுரன் தேவர்களைப் பெரிதும் துன்பப்படுத்தினான். கயமுகாசுரன் தேவர்கள் தன்னைக் காணும் போதெல்லாம் கரங்களைப் பொத்திப் பிடித்து நெற்றியிலே மூன்று முறை குட்டி கைகளை மாறிச் செவிகளைப் பிடித்து மூன்று முறை இருந்தெழுதல் வேண்டும் என்று கட்டளையிட்டான். கயாமுகாசுரனின் அக்கிரமங்கள் அளவு கடந்த நிலையில் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் அவர்களின் முறையீட்டுக்கு இரங்கி "உங்கள் துயரை விரைவில் துடைப்போம்" என்று உறுதியளித்தருளினார். சிவனிலிருந்து வேறாகாத சக்தியாகிய விநாயகப் பெருமான் தோன்றி கயமுகாசுரனை வதம் செய்தார். கயமுகாசுரன் எலிவாகனமாகி விநாயகப் பெருமானைத் தாங்கிக் கொள்ளும் பேற்றினைப் பெற்றான் என வரலாறுகள் கூறுகின்றன. கயமுகாசுரனுக்கு முன்பு தோப்புக்கரணம் போட்டு வழிபட்ட தேவர்கள் அசுரனை அழித்த நன்றிக்காக விநாயகப் பெருமான் முன்னிலையில் தோப்புக்கரணம் போட்டு வழிபட்டார்கள். இதனால் இன்றும் விநாயகரை வழிபடும் அடியவர்கள் அனைவரும் தோப்புக்கரணம் போட்டு வழிபாடு செய்து வருகிறார்கள்.

## விநாயக வடிவத்தின் வேறுபாடுகள்

ஆரம்ப காலத்தில் விநாயகப் பெருமானுக்கு அமைக்கப்பட்ட சிலைகளில் அவருக்குத் துதிக்கையும் இரு திருக்கரங்களும் பெரிய வயிறும் காணப்படுகின்றன. கி.பி. 4ம் நூற்றாண்டைச்

சேர்ந்த பிள்ளையார் சிலையொன்று ஆப்கானிஸ்தானிலுள்ள கபூலில் கிடைத்தது. இவர்கள் இதனை இன்றும் வழிபடுகின்றனர். வடஇந்தியாவில் உள்ள மத்திய பிரதேச மாநிலத்தின் பூமராவில் கிடைத்துள்ள கணேசர் சிலை கணேஷாணியுடன் (கணேச சக்தி) காணப்படுகிறது. சக்தி அவரின் வலது தொடையில் இருந்து கொண்டு அவருக்கு லட்டுக்களைப் பாத்திரத்திலே வழங்குகிறார். இவற்றை அவர் துதிக்கையால் எடுக்கிறார்.

தென் இந்தியாவிலே பெரும்பாலும் பிரமச்சாரியாக விளங்கும் விநாயகர் வடஇந்தியாவிலே சக்தியுடன் வீற்றிருக்கிறார். இதற்கு எதிர்மாறாக முருகப் பெருமான் வடநாட்டிலே பெரும்பாலும் பிரமச் சாரியாகவும் தென்நாட்டிலே இரு சக்திகளுடனும் விளங்குகிறார். பொதுவாகக் காணப்படும் விநாயகரின் வடிவத்திலே முன் வலக்கையிலே அங்குசமும் இடக்கையில் பாசமும் காணப்படும். துதிக்கை இடம்புரியாகவோ வலம்புரியாகவோ இருப்பின் மோதகத்தினைத் தொடும்.

விநாயகருக்கு ஒரு சக்தி கூறப்படும் பொழுது கணேஷாணி அல்லது வல்லபா என்று அழைக்கப்படும். இரு சக்திகள் என்கிறபோது சித்தி புத்தி என்று அவர்கள் அழைக்கப்படுவார்கள். விநாயகப் பெருமான் பஞ்சமுக விநாயகராக வழிபடுவதும் உண்டு. சில இடங்களில் லட்சுமியுடன் சேர்ந்த கணபதி வடிவத்தினைக் காணலாம். சிவபெருமானைப் போன்று கணேசரையும் லிங்க வடிவிலும் வழிபடுவார்கள். மூஷிகமே விநாயகரின் ஊர்தியாக விளங்கினாலும் சிலவேளைகளில் சிங்கமும் இவரின் ஊர்தியாகக் கூறப்படுகிறது.

## பிற சமயங்களிலும் பிறநாடுகளிலும் விநாயகர் வழிபாடு

அவைதிக சமயங்களாகிய சமணம் பௌத்தம் ஆகியவற்றிலே விநாயகர் வழிபாடு இடம்பெற்றுள்ளது. குஜராத்திலுள்ள கற்பாறையில் அமைந்த கோயில்களில் சமணரும் விநாயகரை வழிபடுகின்றனர். சமண சமய வழிபாட்டிடங்கள் சிலவற்றிலே உலோகத்தாற் செய்த விநாயகர் சிலைகள் கிடைத்துள்ளன. புத்தசமயத்திலே கணபதிக்கு முக்கியமான இடமொன்றுண்டு. 'கணபதி ஹிருதயம்' என்ற மந்திரத்தினைப் புத்த பெருமானே தனது பிரதம சீடரான ஆனந்தருக்கு உபதேசித்ததாகக் கூறப்படுகிறது. ஓரளவு வைதிக சமயங்கள்

ஊடாகவும் முக்கியமாகப் பௌத்தம் மூலமாகவும் கணபதி வழிபாடு இந்தியாவுக்கு வெளியே பர்மா, மலேஷியா, இந்தோனேஷியா, சீயம், கம்போடியா, வியட்னாம், சீனா, மங்கோலியா, யப்பான், ஆப்கானிஸ்தான், தீபெத் ஆகிய பல நாடுகளுக்கும் பரவியுள்ளது.

## தமிழகத்தில் கணபதி வழிபாடு

கி.பி. ஏழாம் நூற்றாண்டிலே தமிழகத்தின் பெரும்பகுதியினை ஆட்சி செய்த பல்லவ நரசிம்மவர்மனின் வாதாபிச் சாளுக்கியருக்கு எதிரான வெற்றிக்குப் பின்னரே இவ்வழிபாடு தமிழகத்தில் ஏற்பட்டதாக வரலாற்றாசிரியர்களில் ஒரு சாரார் கருதுவர். பல்லவ அரசின் தளபதியான பரஞ்சோதியார் (சிறுத்தொண்டர்) வாதாபியிலிருந்து கொண்டு வந்த பொருட்களிலே பிள்ளையார் சிலையும் ஒன்றாகும். இச்சிலையினைப் பிரதிட்டை செய்து கட்டப்பட்ட கோயிலே கணபதீச்சரம் என்று அழைக்கப்படும் தலமாகும். இதன் பின்பு தமிழகத்தின் பல இடங்களிலும் கணபதி ஆலயங்கள் அமைக்கப்பட்டதாகவும் காலப்போக்கில் கணபதி வழிபாடு தமிழ்நாட்டில் முக்கிய இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது. நாயன்மார்கள் தமது பாடல்களிலே விநாயகரைப் பற்றிப் பாடியுள்ளார்கள். 'பிடியதனுருவுமை கொளமிகு கரியது' என்ற தேவாரத்தில் சம்பந்தரும் 'கைவேழ முகத்தவனைப் படைத்தவர் போலும்' என்ற தேவாரத்தில் அப்பரும் விநாயகரைப் பாடியுள்ளார்கள். கணபதிக்குரிய பெரிய கோயில்களில் திருச்சிராப் பள்ளியில் உள்ள உச்சிப் பிள்ளையார் கோயில் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஈழத்தில் கணபதி வழிபாடு

இலங்கை முழுவதும் கணபதி ஆலயங்கள் பல இருந்தன. பௌத்த சமயத்தவர்களும் விநாயகரை வணங்கி வருகிறார்கள். மிகிந்தலைக்கு அண்மையில் உள்ள கண்டக சேதிய தூபியினைச் சேர்ந்த சிற்பங்களிலே யானைமுகமுள்ள உருவமுண்டு. துதிக்கை இடம்புரியாகவே உள்ளது. இது வக்ரதுண்டர் (விநாயகர்) உருவமாயிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இங்கு இவர் புத்த சமயச் சார்பான தெய்வமாகவே விளங்குகிறார். 1938ஆம் ஆண்டிற்கு முன் அநுராதபுரத்திலிலுள்ள அரச மரத்தின் முன் கணேசர்

சிலையொன்று இருந்ததாகவும் பௌத்தர்கள் அவருக்கு வணக்கம் செலுத்தி வந்தார்கள் எனவும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணம் கண்டி வீதியில் இருக்கும் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்ற விநாயகர் தலமாகும். யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தில் பிள்ளையார் கோயில்கள் பல இடங்களிலும் அமைக்கப்பட்டன. நல்லூர் வெயிலுகந்தப் பிள்ளையார் கோயில், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், கைலாய பிள்ளயைார் கோயில், வடமராட்சியில் வரணிக்கு அண்மையில் இருக்கும் தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் என்பன குறிப்பிடத்தக்க ஆலயங்களாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாமாங்கப் பிள்ளையார் கோயிலும் வரலாற்றுப் பெருமை மிக்க தலமாகும்.

*(புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயக ஆலய இராசகோபுர கும்பாபிடேக மலர்)*

# சக்தி வழிபாடு

## சக்தியின் வியாபகம்

சிவன் அறிவின் ஆதாரம் என்றால் சக்தி அதன் இயக்கமாக அமைகிறாள். சிவன் உலகத் தோற்றத்திற்கு அடிப்படையாக அமையும் போது சக்தி அதனை இயக்கும் தத்துவமாய் விளங்குகிறாள். சாக்த தத்துவத்தில் தாய் முதலிடம் பெறுகிறாள். சக்தியைப் பெண்ணாகக் கொள்வது சாத்த நெறி. சாக்தர் உலகத்தை மேலாகக் கொண்டு அதனோடு சக்தியின் வியாபகத்தை எங்கும் எல்லாவற்றிலும் காண்கின்றனர். சக்திதான் தெய்வத்திற்கெல்லாம் தெய்வம். சக்தியில்லாமல் சிவதத்துவம் ஒன்றையும் இயக்கமாட்டாது என்று சாக்தர்கள் கருதுகிறார்கள். இவர்கள் சக்தியைத் தனித் தெய்வமாக வழிபடுகிறார்கள். சக்தியின் திருவிளையாடலை அணு முதல் அண்டம் வரை பரக்கக் காணலாம். ஆற்றலுக்குரியவன் இறைவன் என்றால் அந்த ஆற்றலின் இயக்கத்துக்கு சக்தி என்ற பெயர் வழங்கப்படுகிறது. சக்தியின் பிரபாவத்தை உயர்த்திப் பேசுபவர்கள் சக்தியாய் சிவமாய் என்றும் சக்தியை உடையவன் சிவன் என்றும் அவன் சக்திதரன் என்றும் கூறுவர். சக்தியை வழிபடுகிறவர்கள் சக்திமான்களாவார்கள் என்பது சாக்தர்களின் நம்பிக்கை ஆகும். "சக்தியின்றிச் சிவம் அசையவும் முடியாது" எனச் சௌந்தர்யலஹரியில் சங்கராச்சாரியாரும் குறிப்பிடுகிறார்.

## சிந்து வெளியில் சக்தி வழிபாடு

இந்தியாவிலே சிந்து வெளிநாகரிகத்திற்கு முற்பட்ட கிராமிய நாகரிகங்களிலே தாய்த் தெய்வ வழிபாடு நிலவியதற்கான சான்றுகள் உண்டு. இந்துப் பண்பாட்டின் ஆணிவேராகத் திகழ்வது சிந்துவெளி நாகரிகமாகும். இந்துக்களிடம் நிலவியது போல வேறெந்த நாட்டிலும் தாய்த்தெய்வ வழிபாடு பழமையாகவும் ஆழமாகவும் நிலைத்து நிற்கவில்லை என்பது சேர் ஜோன் மார்ஷல் போன்ற அறிஞர் பெருமக்களின் கருத்தாகும். இங்கு கிடைக்கப் பெற்ற தேவியின் உருவங்கள் கோரவடிவமாகவும், சாந்தவடிவ மாகவும் காணப்பட்டன. அமைதியான முகத்தோற்றம் உடைய பெண் உருவங்களை இன்றைய இந்து மதத்தில் வழிபடப்படுகின்ற கௌரி, கல்யாணி வடிவாம்பிகை ஆகிய தெய்வங்களோடு, அச்சமூட்டும் வடிவத்தில் காணப்படும் பெண் உருவங்களை துர்க்கை, காளி, நீலி ஆகிய தெய்வங்களோடும் ஒப்பிட்டு ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மனிதனின் வாழ்விற்குத் தேவையான எல்லாவற்றையும் வழங்கிய தரையைத் தாயாக உருவகித்து வணங்கிய ஆரம்பநிலையை சிந்துவெளியில் காணமுடிகிறது. இன்று கிராமங்கள் தோறும் வழிபடப்படுகின்ற கிராமதேவதைகள் எல்லாம் தரைப்பெண் வணக்கத்தின் வழிவந்தவையே என அறிஞர்கள் கருதுகிறார்கள். மொஹஞ்சதாரோவில் கண்டெடுக்கப் பட்ட ஒரு முத்திரையின் மத்தியில் தலைவிரிகோலமாகக் காட்சி தரும் பெண் தெய்வம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இம்முத்திரையின் மேல் இருக்கும் உருவம் துர்க்கை எனவும் இவ் ஏழு பெண் உருவங்களும் சப்தமாதிருகைகள் (ஏழு கன்னிகையர்) எனவம் அறிஞர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. உலகத் தோற்றத்தின் நாயகியாகச் சக்தி சித்திரிக்கப்பட்டுள்ளதைச் சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட இலச்சினை ஒன்று விளக்குகிறது. ஒரு பெண்ணின் வயிற்றில் கொடி போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் கிளைகளில் ஆறுகள் மலைகள் என்பவற்றை உருவகித்து தரப்பட்ட உருவம் உலகத்தின் சிருஷ்டிகர்த்தா சக்தி தெய்வம் என்பதை விளக்கி நிற்கிறது.

## வேதங்களில் அம்பிகை வழிபாடு

வைதிக முறையில் அம்பிகையை வழிபடும் வழிபாட்டு

முறையை தட்சணாச்சாரம் என அழைப்பர். இந்த முறையில் வழிபடுவதை 'ஸ்ரீ வித்யா உபாசனை' எனவும் அழைப்பர். இவ்வழிபாட்டு முறையிலே காயத்திரி மந்திரம் முக்கியமான இடம்பெறும். வேதங்கள் கூறிய வழியிலே சக்தியை வழிபடுகிறவர்களுக்கு இந்திரப்பதவி கூடக் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இருக்கு வேதத்தில் உஷை, இராத்திரி, அதிதி, பிருதுவி முதலிய பெண் தெய்வங்கள் வழிபடப்பட்டன. இவர்களில் உஷை தனிப்பெரும் பெண் தெய்வமாக வேதங்களில் சித்திரிக்கப்படுகிறாள். இவளை வழிபடுகிறவர்களுக்குச் செல்வம், குழந்தைகள், பாதுகாப்பு நீண்டவாழ்வு புகழ், பெருமை என்பவற்றையெல்லாம் உஷை வழங்குவாள் என இருக்கு வேதம் குறிப்பிடுகிறது. துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூவரும் ஒன்றிணைந்து பேருருவம் தாங்கி நிற்கும் சண்டிகை என்பாளை அக்கினியில் வழிபடுவது சண்டியாகம் எனப்படும். வேத வேத்யா, வேதஜனனி, யக் ஒபியா, யக் ஒருபா, திரயீ எனப் பல பெயர்களில் வேதங்களில் அம்பிகை அழைக்கப்படுகிறாள். ஓடுகின்ற நதிகளை சரஸ்வதியாக வேதகால ரிஷிகள் உருவகித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளார்கள். தேவி சூக்தம், துர்க்கா சூக்தம் அகியவற்றில் சக்தி வழிபாடு கூறப்பட்டுள்ளது. வாஜசனேயி சம்ஹிதையில் அம்பிகா என்றும் தைத்திரீய ஆரண்யகம் முண்டக உபநிஷதம் என்பற்றில் துர்க்கா, கார்த்தியாயினி, கன்னியாகுமரி எனவும் அம்பாள் அழைக்கப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது. கேன உபநிஷதம் சக்தியை முழுமுதற் தெய்வமாகக் குறிப்பிடுகிறது. "அம்பாள் அழகு மிக்க உமாவாக பரப்பிரம்மம் பற்றிய ஞானத்தை இந்திரன் முதலிய தேவர்களுக்கு அறிவுறுத்தும் மேலான பரப்பிரம்மமாக காணப்படுகிறாள்" எனக் கூறுகிறது.

## ஆகம வழிபாடும் கிராமிய வழிபாடும்

தாய்த் தெய்வ வழிபாடு உயரிய மட்டத்தில் ஆகம விதிமுறைகளுக்கேற்ப நடைபெறுகிறது. இவ்வழிபாட்டில் ஸ்ரீ சக்கர பூசை முதலிடம் பெறுகிறது. அம்பிகையை நவசக்திகளாகப் பாவனை பண்ணி நடைபெறும் நவசக்தி அர்ச்சனை சக்தி வழிபாட்டில் மிகவும் சிறப்பான அம்சமாகும். சாக்த ஆக முறைப்படி அம்பிகையை வழிபடும் அடியவர்கள் அனுசரிக்க வேண்டிய ஆறு கடமைகளாகப் பின்வருவன கூறப்பட்டுள்ளன.

1. நாடோறும் நீராடல்
2. சந்தியாவந்தனம்
3. ஹோமம்
4. ஜபம்
5. தேவி ஆராதனை
6. சக்தி பூசை

என்பன அவையாகும்.

ஆகம விதி முறைகளை அனுசரியாது கிராமியமட்டத்தில் நாட்டார் வழிபாடாகவும் அம்பிகையை வழிபடும் மரபும் உள்ளது. நாட்டார் வழிபாட்டில் காளி, மாரி, அம்மன், நீலி போன்றன செல்வாக்குள்ள தெய்வங்கள் ஆகும். இவை நோய் நொடிகளில் இருந்து மக்களைக் காக்கும் தெய்வங்களாக வணங்கப்பட்டு வருகின்றன. கிராமிய வழிபாட்டில் வழிபடுவோனுக்கும் இறைவனுக்கும் இடையில் தரகர்கள் இல்லை. வழிபடுவோன் தானே நேரடியாக பொங்கி மடை பரவி உணர்வுபூர்வமாக இறைவனை வழிபடுகிறான். வழிபடும் அடியவர்களில் சக்தி தெய்வம் வெளிப்பட்டு நிற்கும் என்ற நம்பிக்கை கிராமிய வழிபாட்டில் மக்களிடம் காணப்படுகிறது. இவ்வாறு அம்பிகை வெளிப்பட்டு நிற்கும் அடியார்கள் கூறும் வாக்குகளை மக்கள் அருள் வாக்குகளாகவே ஏற்றுக் கொள்கின்றனர்.

வாமசார வழிபாட்டு நெறி பெரும்பாலும் வடஇந்தியாவிலே நிலவி வருகிறது. இவ்வழிபாட்டில் வைதிகநெறிக்குப் புறம்பான பல அம்சங்கள் இடம்பெறுகின்றன. இதிலே பஞ்சமகாரர்கள் எனக் குறிப்பிடப்படும் ஐவகை இன்பங்களைத் துய்த்தல் அவசியம் எனக் கருதப்படுகிறது.

1. மத்ஸ்யம் (மீன்)
2. மத்யம் (மது)
3. மாமிசம்
4. முத்திரை (கைவிரல்கள் மூலங்காட்டும் இரகசிய மொழி)
5. மைதுனம் (பெண் உறவு) என்பனவாகும்.

இந்த வழிபாட்டு முறையினால் ஒழுக்கக் கேடுகள் பல தோற்றம் பெற்றன. இத்தகைய பஞ்சமகாநெறி நாளடைவில் தவிர்க்கப்பட்டு மதுவுக்குப் பதிலாக இளநீரும் மாமிசத்துக்கு பதிலாக இஞ்சியும் கொள்ளப்படுகின்றன. சக்தியின் அருளை

வேண்டி பஞ்சமகாநெறியைப் பின்பற்றும் சாக்தர்கள் மதுபானமாகிய கள்ளை அருந்துகிறார்கள். இதனால் இவர்கள் வேண்டிப் பெற்ற அருள்ச் சக்தியும் முற்றாக அழிந்து விடும். ஆக்கபூர்வமான அருள் தருகின்ற சிவஞானத்தை உள்ளத்துள்ளே உணர்ந்தால் பேரானந்தத்தைப் பெறுவீர்கள் என்பதனை பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது:

*சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள் உண்பர்*
*சத்தி அழிந்தது தம்மை மறந்ததால்*
*சத்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்*
*சத்திய ஞான ஆனந்தத்தில் சார்தலே.*

## இதிகாச புராணங்களில் சக்தி வழிபாடு

இதிகாசங்களில் ஒன்றாகிய மகாபாரதத்தில் துர்க்கையை துதிக்கும் தோத்திரங்கள் பல வருகின்றன. புராணங்களின் எழுச்சியே சக்தி வழிபாட்டை விட நாட்டில் நிலைநிறுத்தியது. சக்தியின் அருட்செயல்களை அடிப்படையாகக் கொண்ட உருவமும் நாமமும் கொடுத்து சக்தி வழிபடப்பட்டாள். சக்தியைப் பற்றிக் கூற வந்த சாக்தபுராணங்களில் அவளது வயதுகளையும் தொழிற்பாடுகளையும் வகைப்படுத்தி பெயர்கள் இடப்பட்டுள்ளன. சிறுபிள்ளைப் பருவத்தை சாந்திகா எனவும், ஏழுவயதுப் பருவத்தை சண்டிகா எனவும், எட்டு வயதுப் பருவத்தை சாம்பவி எனவும், பத்து வயதுப் பருவத்தை கௌரி எனவும் அழைக்கப்பட்டதைக் காணக்கூடியதாக உள்ளது. மார்க்கண்டேய புராணத்தில் தேவியின் மகத்துவம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. “எல்லா உயிர்களிலும் சக்தி வடிவமாகத் திகழும் தேவிக்கு வணக்கம்.” மங்களமாக உள்ள யாவற்றிலும் மங்களமாக விளங்குபவளே! எல்லா நன்மைகளையும் வழங்குபவளே! எல்லா விருப்பங்களையும் நிறை வேற்றுபவளே! அன்பர்கள் அடைக்கலம் புகுவதற்கு உரியவளே! மூன்று திருக்கண்களை உடையவளே! கௌரிதேவியே தேவரீருக்கு வணக்கம்,” என மார்க்கண்டேய புராணம் அம்பிகையின் அருட் பிரபாவத்தை எடுத்து விளக்குகிறது. பிற்காலத்தில் புராணங்களில் ஆண்தெய்வ வணக்க முறையோடு சக்தி வணக்கம் இணைத்துக் கூறப்பட்டது. பிரமன் மனைவியை பிராமி எனவும், விஷ்ணுவின் மனைவியை வைஷ்ணவி எனவும் குமரன் மனைவியை கௌமாரி

எனவும் இந்திரன் மனைவியை இந்திராணி எனவும் பரமேஸ்வரரின் மனைவியை பரமேஸ்வரி எனவும் யமனின் மனைவியை சாமுண்டி எனவும் பல்வேறு வடிவங்களில் உருவகப்படுத்தியுள்ளார்கள். சக்தியின் பல்வேறு வடிவங்களை சங்கரர் மூன்றாக வகுத்தார். உலக இயக்கத்துக்கும் தொழிற்பாட்டிற்கும் நாயகியாக துர்க்கையையும், உலகின் தொழிற்பாட்டின் மூலாதாரமான செல்வத்திற்கு நாயகியாக இலட்சுமியையும், உலகியல் வாழ்க்கையின் ஈடேற்றத்துக்கு உரியவளாக அறிவு விருத்திக்கு நாயகியாக சரஸ்வதியையும் சங்கரர் குறிப்பிடுகிறார்.

## தமிழகத்தில் சக்தி வழிபாடு

சங்க இலக்கியத்திலும் மணிமேகலை, சிலப்பதிகாரத்திலும் தாய்த்தெய்வத்தைப் பற்றிய குறிப்புகள் நிறையக் காணப்படுகின்றன. பழந்தமிழரின் தாய்த்தெய்வமாக கொற்றவை வழிபடப்பட்டாள். எல்லா உயிர்களுக்கும் அன்னையாகத் திகழும் தாய்த் தெய்வத்தை மோடி என்று தமிழில் அழைத்ததாக வரலாறுகள் கூறுகின்றன. தமிழ் வேதமாகத் திகழ்கின்ற தேவாரத்தில் 'போகமார் மோடி,' 'கடற் கோடியின் மோடி' எனக் காளியை அழைத்ததை காணக்கூடியதாக உள்ளது. சங்க இலக்கியத்தில் தாய்த்தெய்வத்தை காட்டில் உறைபவளாகவே கூறப்பட்டுள்ளது. காட்டில் வாழும் தாய்த் தெய்வத்தைப் பற்றி மணிமேகலை, கலித்தொகை முதலிய பிற்கால நூல்களும் கூறியுள்ளன. மணிமேகலையில் சக்தி தெய்வம் 'காடமர் செல்வி' எனவும் கலித்தொகையில் அந்தத் தாய்த் தெய்வமே பெருங்காட்டுக்கொற்றி எனவும் அழைக்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. திருமுருகாற்றுப்படையில் 'வெற்றி வேற் கொற்றவை சிறுவ' என்று முருகன் விளக்கப்டுகிறான். சோழர் காலத்தில் சக்தி கோயில்கள் திருமுற்றம் என அழைக்கப்பட்டது. தமிழர்களின் தெய்வமாகிய துர்க்கையுடன் பிற்காலத்தில் ஒன்றாகப்பட்டு வணங்கப்பட்டாள். சக்தி தெய்வம் பண்டைய தமிழர்களால் பழையோள் முதியோள் என்றெல்லாம் அழைக்கப்பட்டாள். நாயன்மார்கள் இவளை முதுகோதை என்றும் அழைக்கிறார்கள்.

சோழ அரசர்கள் அம்பிகையை நிதம்ப சூதனி என்ற பெயரில்

வழிபட்டார்கள். இவள் அரசர்களுக்கு வீரத்தையும், வெற்றியையும், அரச பதவியையும் தருபவள் என்றும் கருதினர். பாண்டியர்கள் மீனாட்சியை பாண்டி அரசைத் தோற்றுவித்த தலைவி என்றும் வழிபட்டனர். மதுரை மீனாட்சி அம்மன் ஆலய ஓவியம் ஒன்றில் அங்கயற்கண்ணியான மீனாட்சி வணங்கி செங்கோலைத் தேவியிடமிருந்து திருமலை நாயக்கர் பெற்றதாகக் காட்டப்பட்டுள்ளது. மீன் தனது கண்பார்வையினால் நீரில் கிடக்கும் தன் சினைகளைப் பொரிக்க வைத்து வெளிப்படச் செய்து பாதுகாப்பது போல தனது அருள்நிறைந்த கண்பார்வையினால் அங்கயற்கண்ணி உலகில் உள்ள உயிர்களைப் பாதுகாக்கின்றாள்.

## ஈழத்தில் சக்தி வழிபாடு

இலங்கையில் வாழ்ந்த பூர்வீக மக்களின் வழிபாடாகிய நாக யக்ஷ வழிபாட்டிற் பெண் தெய்வங்களாக நாகினி, யக்ஷி ஆகியவை வணங்கப்பட்டன என்பதை வரலாறுகளில் இருந்து அறிய முடிகிறது. நம்நாட்டில் கிடைத்த சுடுமண் பெண்தெய்வ உருவங்களும், லிங்க வழிபாடு பற்றிய சான்றுகளும் தாய்த்தெய்வம் சக்தியாகவும் அரு உருவ நிலையில் லிங்க வழிபாட்டுடன் சேர்ந்தும் வழிபடப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றன. ஈழத்துப் பிராமியக் கல்வெட்டுகளில் துர்க்கை பற்றிய குறிப்புக்கள் உண்டு. இதே காலத்தைச் சேர்ந்த லட்சுமி உருவம் பொறித்த நாணயங்களும் காணப்படுகின்றன. கி.பி. 2ஆம் நூற்றாண்டில் வீர வழிபாட்டின் ஓரம்சமாகிய கண்ணகி வழிபாடு ஈழத்திற் புகுந்து இங்கு நிலவிய சக்தி வழிபாட்டுடன் தன்னை இணைத்துக் கொண்டது. சேரன் செங்குட்டுவனின் அழைப்பின் பேரில் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்கு கோயில் அமைக்கப்பட்ட விழாவிலே கலந்து கொண்ட இலங்கை வேந்தனாகிய கஜபாகு மன்னன் ஈழத்தில் பத்தினித் தெய்வவழிபாட்டை அறிமுகம் செய்து வைத்தான். சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றாகப் போற்றப்படுவது நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயமாகும். யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த நாகர்கோயிலில் சிவவழிபாட்டுடன் நாகவழிபாடு இணைந்திருப்பது போல நயினாதீவில் சக்தி வழிபாட்டுடன் நாகவழிபாடு இணைந்துள்ளது. நாகதீபம் என்று அழைக்கப்படும் நயினாதீவில் ஒரு சர்ப்பம் நெடுநாள் வசித்து தவம் செய்து அம்பிகையின் அருளால் தனது

சாபத்தை நீக்கிக் கொண்டது. சாபம் நீக்கப் பெற்ற நாகபாம்பைத் தமது திருமேனியில் அணிந்து சாபநிவிர்த்தி செய்தருளினமையாற்றான் இங்கு எழுந்தருளியுள்ள அம்பிகை நாகபூஷணி என்ற பெயரைப் பெற்றாள் எனக் கூறப்படுகிறது.

## நாக வழிபாடு

சூரிய வழிபாடும் நாகவழிபாடும் உலகமக்கள் பலராலும் பலகாலங்களில் வழிபடப்பட்டு வந்தவை ஆகும். எகிப்திய நாகரிகம், பபிலோனிய நாகரிகம், இந்திய நாகரிகம் ஆகிய அனைத்து நாகரிகங்களிலும் சூரிய வழிபாடும் பாம்பு வழிபாடும் சிறப்பிடம் பெற்று இருந்தது. நாகவழிபாடு உடையவர்களாயும் நாகத்தைத் தனது கொடியாகக் கொண்டவராயும் நாகர்கள் வாழ்ந்து வந்தார்கள். தென் இந்தியாவின் மலையாளப் பிரதேசத்தில் நாகவழிபாடு சிறப்பிடம் பெற்றிருந்தது. மிகத் தொன்மையான காலம் தொட்டே நாகவழிபாடு இங்கு இடம்பெற்றுவருகிறது. இங்குள்ள நம்பூதிரிப் பிராமணர் வீட்டுத் தோட்டங்களில் நாகதலங்கள் பல அமைந்துள்ளன. மக்கட் பேறு இல்லாதவர்கள் நாகப் பிரதிட்டை செய்து வழிபாட்டால் புத்திரச் செல்வம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழ் நாட்டில் இன்றும் நிலவி வருகிறது. மகப்பேறு வேண்டியோ, கருச்சிதைவையும் குறைப்பிரசவத்தையும் தவிர்த்தல் கருதியோ பெண்கள் நாகப் புற்றில் பாலூற்றிப் பழங்கள் மலர்கள் வைத்து வழிபடுவர். தமிழ் நாட்டின் கன்யாகுமரி மாவட்டத்தில் உலகப் பிரசித்தி பெற்ற நாகராஜர் ஆலயம் காணப்படுகிறது. தமிழகத்தின் திருவேற்காட்டில் எழுந்தருளியுள்ள கருமாரியம்மன் கருநாகமாகத் தோன்றினாள் என்பது தலபுராணச் செய்தி ஆகும். இன்றும் கருமாரி அம்மன் ஐந்து தலை நாகத்தின் குடை நிழலில் அமர்ந்தே காட்சி தருகிறாள். பாம்புகளைத் துதிக்கும் தோத்திரங்கள் மைத்திராயணி சம்கிதையிலே காணப்படுகின்றன. இந்தியாவிலும், இலங்கையிலும், யாவாவிலும், பர்மாவிலும், யப்பானிலும், சீனாவிலும் பௌத்த தலங்களின் வாயில்களில் நாக உருவங்கள் காவல் செய்கின்றன.

## அம்பிகையின் திருவருள் பெற்ற அருளாளர்கள்

தயைப் பிரகாஜினியாக இருக்கும் அம்பிகையின்

திருவருளைப் பெற்றதினால் ஆடுமாடு மேய்க்கும் இடையனாக இருந்தவன் மகாகவி காளிதாசனாக மாறினான். காளிதாச மகாகவி தனது இரகுவம்சத்தில் "சொல்லும் பொருளும் போல பிரிக்க முடியாது இணைந்து விளங்கும் உலக அன்னையாகவும் அப்பனாகவும் மிளிரும் பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்தே தனது நூலைத் தொடங்குகிறார். உலகம் போற்றும் உத்தம புருஷராகவும் சிறந்த சக்தி உபாசகராகவும் திகழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் அம்பிகையின் அருளைப் பெற்ற அருளாளர் ஆவார். மேற்கு வங்காள மாநிலத்து தட்சிணேஸ்வரத்துக் காளி அம்பாளின் திருவருளை இராமகிருஷ்ண பரமஹம்சர் அம்பிகையின் அருளை முழுமையாகப் பெற்றிருந்தார். மகாராஷ்டிர வாசியாகிய பாஷ்கராயர் சாக்த மதத்தைப் பரப்பிய மகான்களில் முதலிடம் பெறுகிறார். இவர் சோழநாட்டு மன்னர்களின் குருவாகவும் இருந்தார். புரட்சிக் கவி பாரதியாரும் சக்தி உபாசகராகவே காணப்பட்டார். அம்பாளின் அருட்பிரபாவங்களை பக்திச் சுவை சொட்டச் சொட்டக் கூறும் சிறப்புமிக்க தமிழ்ப் பிரபந்தங்களாக கம்பன் அருளிய சரஸ்வதி அந்தாதியும், குமரகுருபரர் அருளிய மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழும், அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதியும் காணப்படுகின்றன. மதுரையிலே மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும் கேரளத்திலே பகவதியாகவும், சிருங்கேரியிலே சாரதா ஆகவும், மைசூரிலே சாமுண்டி எனவும், அசாமிலே கர்மாக்யா எனவும் மகாராஷ்டிரத்திலே பவானி என்றும் அம்பாள் வழிபடப்படுகிறாள். மூவுலகிலும் சிறந்த பேரழியாக லலிதா மகாதிரிபுரசுந்தரி என அம்பாள் அடியவர்கள் அனைவராலும் போற்றப்படுகிறாள். அம்பிகையை நாள்தோறும் தியானிப்பவர்கள் தியானிக்கப்படும் பொருளாகவே மாறிவிடுவார்கள் என்பதனை "த்யானத் யாத்துரு தேய ரூபா" என லலிதா சகஸ்ர நாமமும் குறிப்பிடுகிறது.

சிவனும் சக்தியும் சேர்ந்த சமயக் கோட்பாட்டுத் தத்துவம் தலையெடுத்ததும் சக்தி வழிபாடு தனி வழிபாடாக நின்று நிலைக்க முடியவில்லை. ஆரம்பத்தில் தனியாக முக்கியத்துவம் பெற்ற தாய்மைத் தத்துவம் காலகதியில் ஆண்மைத் தத்துவத்துடன் கலந்துவிட்டது. சிவனும் சக்தியும் ஒன்றாக இணைந்ததை சிவனின் கல்யாண சுந்தர மூர்த்தமும், இவை இரண்டும் ஒன்றாகியதை அர்த்தநாரீஸ்வர மூர்த்தமும், இவை குடும்பம் ஆகியதை

சோமஸ்கந்த மூர்த்தமும் எடுத்து இயம்புகின்றன. ஏனைய மதப் பிரிவுகளாகிய காணாபத்தியம், கௌமாரம் என்ற இரண்டிற்கும் முதல்வர்களான கணபதி, முருகன் என்பவர்களின் தாயாகவும் விஷ்ணுவினுடைய சகோதரியாகவும் சக்தி புராணங்களில் சித்திரிக்கப்படுகிறாள். பாரத நாட்டில் சாக்தம் என்ற தனி மதப்பிரிவு வழக்கொழிந்து பிறமதங்களோடு இணைந்து காணப்பட்டாலும் சக்தி இன்றும் சிறப்புடன் அனைத்து இந்த சமய மக்களாலும் வழிபடப்பட்டே வருகிறாள்.

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் கும்பாபிடேக மலர்

# முருக மந்திரம் (கந்தர் அநுபூதி)

தமிழ் மக்கள் தாம் வாழும் இடமெல்லாம் கலியுகவரதனாம் கந்தவேள் பெருமானுக்கு கோயில் அமைத்து வழிபட்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருத்தணிகை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை ஆகிய ஆறுபடை வீடுகளில் இருந்தும் முருகன் அருளாட்சி புரிகிறார். ஈழத்தின் தென்பகுதியில் இருக்கும் கதிர்காமம் எல்லா இன மக்களாலும் வழிபடப்படும் முருகன் தலம்ஆகும். யாழ்ப்பாணக் குடாநாடும் முருகனின் அருளாட்சிக்கு உட்பட்ட பிரதேசமே ஆகும். அலங்காரக் கந்தனாக நல்லூர் முருகன் ஆலயமும், அபிஷேகக் கந்தனாக மாவிட்டபுரம் முருகன் ஆலயமும், அன்னதானக் கந்தனாக செல்வச்சந்நிதி முருகன் ஆலயமும், காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்து அரசர்களின் ஆட்சிக்காலத்தில் மிகச் சிறப்புமிக்க ஆலயமாகத்திகழ்ந்த நல்லைக் கந்தன் ஆலயம் போர்த்துக்கீசருடைய ஆட்சிக் காலத்தில் இடித்து முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டது. பின்பு ஒல்லாந்தர் காலத்தில் கந்தபுராணம் படிக்கப்படும் சிறிய வேற்கோட்டமாக ஆரம்பிக்கப்பட்டு இன்று மிகப் பிரசித்தி பெற் அருள் வழங்கும் ஆலயமாகத் திகழ்கிறது. செல்லப்பாசுவாமிகள், யோகர்சுவாமிகள் போன்ற மகான்கள் இவ்ஆலயச் சூழலில் நடமாடித்திரிந்தார்கள். மகான் செல்லப்பா சுவாமிகள் தவம் இருந்த இடம் ஆதலால் நல்லூர்த் தேரடிக்கு சிறப்பு உண்டு. மகோற்சவ காலத்திலும் கந்தஷஷ்டி காலத்திலும் இத்தேரடியில் ஆரம்பித்து தேரடியில் நிறைவுறும் கந்தர் அநுபூதிப் பஜனை ஐம்பது வருடங்களுக்கு மேலாக நடந்து வருகிறது.

சுகந்த தூபமாகிய சாம்பிராணித் தூபப் புகை முன்னால் வர அடியார்கள் பக்தி சிரத்தையோடு மந்திரவாசகமாக இருக்கும் பக்தர் அநுபூதிப் பாடல்களைப் பாடி வரும் காட்சி அற்புதமாக இருக்கும்.

ஆன்மாவைப் பீடித்திருக்கும் பசுஞானம், பாசஞானம் கிடைப்பதற்கு வழிகாட்டும் திசைகாட்டியாக அமைந்திருப்பவை அருளாளர்கள் அருளிய ஞானத்திருநூல்களாகும். "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெருநோக்கோடு அருளாளர்களால் அருளப்பெற்ற பாடல்கள் ஆன்மா சிவஞானத்தைப் பெறுவதற்கு உதவும் மாத்திரைகளாக காணப்படுகின்றன. பக்தியோடு இறைவனைப் பாடிப்பரவி வணங்குவது அவருக்கு நாம் செய்கின்ற அர்ச்சனை என்பதை

*"அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்*
*சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்"*

எனப் பெரியபுராணம் கூறுகிறது. முருக உபாசகர்கள் பக்தியோடு ஞானபண்டிதனை நாள்தோறும் பாடித் துதிக்க உதவும் அர்ச்சனை மலர்களே கந்தர் அநுபூதி ஆகும்.

முருகப் பெருமானை பல்வேறு காலத்தில் பல்வேறு வகையான தமிழில் அருளாளர்கள் பாடித்துதித்தார்கள். நக்கீரர் பெருமான் சங்கத் தமிழில் முருகனைப் பாடித் துதித்தார். பத்துப் பாட்டில் முதலாவது நூலாக விளங்குகின்ற திருமுருகாற்றுப்படை முருகப் பெருமான் மீது அடியார்களை வழிப்படுத்தும் நூல் ஆகும். பல்வேறு பருவங்களில் முருகப் பெருமானைப் பாவனை பண்ணி அவர் மீது பகழிக் கூத்தர் பிள்ளைத் தமிழ் பாடினார். வடமொழிப் புராணமாகிய ஸ்கந்தபுராணத்தின் சூத சங்கிதையில் வரும் சிவரகசியக் காண்டத்தின் முதல் ஆறு காண்டங்களையும் கச்சியப்ப சிவாசாரியார் 10345 செய்யுள்களாகத் தந்துள்ளார். சந்தத் தமிழில் அருணகிரிநாதர் முருகனைப் பாடிப் பரவிப் பணிந்து வணங்கினார். இவர் அருளிச் செய்த நூல்கள் ஆறு ஆகும். திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், வேலமயில் விருத்தம், கந்தரநுபூதி என்பன அவை ஆகும். இந்த ஆறு நூல்களில் கந்தரநுபூதி வடிவத்தில் சிறியது மகிமையில் பெரியது ஆகும். இந்நூல் மந்திரமாலையாகவே அமைந்துள்ளது. முருகப்

பெருமானின் பாதக் கமலங்களில் செஞ்சொற்புனை மாலையாக கந்தர்அநுபூதி என்னும் மந்திரமாலையை அருணகிரியார் சாத்தினார். சிவன், அகத்தியர், அருணகிரியார் ஆகிய மூவரும் மாத்திரமே முருகப் பெருமானிடம் நேரடியாக உபதேசத்தைப் பெற்றார்கள். கந்தவேள் பெருமானின் திருவருளுக்கு பாத்திரமாகிய பின்பு அவரே உள்நின்று உணர்த்த அருணகிரியார் பாடிய பாடல்களே கந்தர் அநுபூதி ஆகும். இதனைத் தாயுமான சுவாமிகள்

*"கந்தரநுபூதி பெற்றுக் கந்த நுபூதி சொன்ன*
*எந்தையருள் நாடியிருக்கும் நாள் எந்நாளோ"*
எனத் தமது பாடலில் குறிப்பிடுகிறார்.

"வாயே வாழ்த்து கண்டாய் என்பது அப்பர் பெருமானின் வாக்கு ஆகும். கல்லுப்போல் இருக்கும் கடினமான உள்ளத்தை உருகச் செய்து கந்தவேள் பெருமானைப் பாடுவதற்கு விநாயகப் பெருமானிடம் அருள் வேண்டி அருணகிரியார் நிற்பதை, "நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்துருக" என்ற அநுபூதியின் காப்புச் செய்யுள் விளக்கி நிற்கிறது. வேலைப் பாடுவதே தனக்கு வேலையாக வேண்டும் என்று விரும்பும் அருணகிரியார் முருகனின் ஞானசக்தியாக வேலையும் பல மைல்களையும் கடந்து முருகனைப் பத்திரமாகத் தாங்கி வரும் மயிலையும், ஆதித்தனது வருகையை தனது நாத ஒலியினால் அனைத்து மக்களுக்கும் உணர்த்தும் சேவலையும் பாடுகின்ற பணியைத் தனக்குத் தரவேண்டும் என்பதை,

*"ஆடும்பரி வேலணி சேவலெனப்*
*பாடும் பணியே பணியா அருள்வாய்"*

என அநுபூதிப் பாடல் விளக்குகிறது.

அருளாளர்கள் அடிக்கடி தங்கள் மனதைப் பரிசோதித்துக் கொள்வார்கள். ஐந்து புலன்களும் வஞ்சனையைச் செய்ய விலங்கு மனம், விமலன் பர்தத்தை நாடாமல் பிரபஞ்ச மயக்கத்தில் அமிழ்ந்திடும் "தன்னையறிந்தவன் தத்துவ ஞானி என்ற முதுமொழிக்கேற்ப் அருளாளர்கள் அடிக்கடி தங்களை அக விசாரணை செய்து கொள்வார்கள். தனது நெஞ்சைப் பார்த்து "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" என்றும் துணையிலி பிண

நெஞ்சே" என்றும் மணிவாசகரும் அறிவுறுத்துவதை திருச்சதகப் பாடலிலே காணலாம், நம்மைப் பீடித்திருக்கும் துயர் முற்றாக நீங்க வேண்டுமென்றால் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நாராயணனின் பாதக் கமலங்களைப் பற்றிப் பிடித்து வணங்குதல்அவசியம் என்பதை "துயரறு சுடரடி தொழுதெழு மனனே" என நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாடல் குறிப்பிடுகிறது. அருணகிரியாரும் மனதுக்கு உதேசம் செய்யும் பாடலைக் கந்தர் அநுபூதியில் தருகிறார். இரப்பவர்க்கு ஒழியாமல் இயன்றதைக் கொடுப்பதோடு முருகப்பெருமானின் திருவடியையும் மறவாமல்தியானித்தால் நாம் அனுபவிக்கும் பிறவித் துன்பம் அனைத்தும் பொசுங்கி விடும் என்பதனை,

*"கெடுவாய் மனனே கதிகேள் கரவா*
*திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்*
*சுடுவாய் நெடுவேதனை தூள் படவே*
*விடுவாய் விடுவாய் வினையாவையுமே"*

என்ற பாடல் விளக்குகிறது.

பொறிகளின் துணையினால் அறிவைப் பெறும் ஆன்மாவை அறிவென்ற பொருள் எனக் கூறுவது பொருந்தாது என்பதனை

"பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பேர் நன்றற"

எனத் திருவருட்பயன் விளக்குகிறது. புலன்களினாலேயே ஆன்மா அறிவைப் பெறுகிறது. புலன் போன போக்கெல்லாம் சென்றால் வாழ்வே சீரழிந்துவிடும். புலன்களாகிய பசுக்களை அடக்கி ஆள வேண்டும், இப்படி அடக்கினால் அதேபுலன்கள், பேரின்பத்தை தரும் ஐம்புலன்களாகிய பசுக்களும் ஞானப் பாலைத்தரும் என்ற உண்மையை

*பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு*
*மேய்பாரும் இன்றி வெறித்துத் திரிவன*
*மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்*
*பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய் சொரியுமே.*

என்ற திருமந்திரப் பாடல் விளக்கி நிற்கின்றது. ஐம்பொறி வழிச் சென்று உலக இன்பங்களை நுகர வேண்டும் என்ற ஆசையை விட்டு ஞானசக்தியாகிய வேலைக் கையில் ஏந்திய வேலனின் திருவடியைப் பெற்று உய்திபெற முயற்சிக்க வேண்டும் என்பதனை பின்வரும் சுந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

*கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்*
*றுய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்*
*மெய்வாய் விழிநாசியொடும் செவியாம்*
*ஐவாய் வழிசெய்யும் அவாவினையே*

உலகியலில் நாம்அனுபவிக்கும் துன்பங்களில் மிகக் கொடிய துன்பம் வறுமைத் துன்பமே ஆகும். இதனால்தான் கொடிது எது என்று விளக்கம் கூறவந்த தமிழ் மூதாட்டி ஒளவையாரும் "கொடிது கொடிது வறுமை கொடிது என்று கூறுகின்றார். மதிப்பு இல்லாதவரையும் மதிப்பு உடையவர்களாகச் செய்யும் சிறப்புடையது பொருள் ஆகும். ஆகையால் அந்தப் பொருளை விட ஈட்டத்தகுந்த பொருள் வேறு எதுவும் இல்லை. பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வார்கள் பொருளுடைய செல்வரை எல்லோரும் சிறப்புறச் செய்வார்கள். இதனை

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு

எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் விளக்குகின்றது. உலகியல் வாழ்க்கைக்கு பொருள் மிகவும் அவசியமானது. புடவை மானத்தைக் காக்க வல்லது போல பணமும் மானத்தைக் காக்க வல்ல பொருளாகும். பொருள் இருந்தால் தானெ பலரும் வந்து உறவு கொண்டாடுவார்கள். விரும்பிய தருமம் எதையும் செய்யலாம். பொருள் இல்லாதவர்கள் தலைகுனிந்து தான் நடக்க வேண்டும். பொருள் இருந்தால் தான் நிமிர்ந்து நடக்கலாம் எனப் பொருளின் அவசியத்தை பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது:

*புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை*
*அடையப்பட்டார்களும் அன்பிலர்ஆனார்*

*கொடையில்லை கோள் இல்லைகொண்டாட்டம் இல்லை*
*நடையில்லை நாட்டில் இயங்குகின்றார்கட்கே.*

வறுமை மனிதனை அடியோடு அழிக்கும்இயல்புடையது. ஆகையால் அதனைப் பாவி என்கின்றார் அருணகிரியார். அழகு செல்வம், நன்மனம், நற்குணம், குடியின் உயர்வு, குலப் பெருமை ஆகிய ஆறுநலன்களையும் வறுமை அழித்துவிடும் என்பதனை

**வடிவுந் தனமும் மனமும் குணமுங்**
**குடியுங் குலமுங் குடிபோகியவா**
**அடியந்தமிலா அயில்வேல் அரசே**
**மிடியென்றொரு பாவி வெளிப்படினே.**

எனக் கந்தர் அநுபூதி விளக்குகிறது. மண் ஆசையால் அழிந்த துரியோதனின் வரலாற்றை மகாபாரதமும், பெண் ஆசையால் அழிந்த இராவணனின் வரலாற்றை இராமாயணமும் எடுத்து விளக்குகிறது. ஞான விளக்கத்தை மயங்கச் செய்வது பெண் ஆசை ஆகும். உடை, நடை, பாவனைகளால் மற்றவர்களை எல்லாம் மயக்கி மாயவலையில் வீழ்த்துகின்ற விலைமகளிரின் வலையில் வீழ்ந்து வருந்தாமல் இருக்க முருகனை வரம்தர வேண்டுமென அருணகிரியார் பின்வரும் கந்தரபூதிப் பாடலின் ஊடாக வேண்டுகின்றார்.

*சிங்கார மடந்தையர் தீ நெறிபோய்*
*மங்காமல் எனக்கு வரந்தருவாய்*
*சங்கரா மசிகாவல 'சண்மகனே*
*கங்காநதி பால கிருபாகரனே.*

இந்த மண்ணில் பிறந்த யாவருக்கும் மரணம் ஒருநாள் ஏற்படும். முருகன் அடியார்களுக்கு மரணபயம் ஒருநாளும் இல்லை. "நாளும் கோளும் நம்பனடியார்க்கு நலிவு செய்யாது" என்ற மனநிலை இவர்களிடம் இருக்கும். உயிரை உடலில் இருந்து பிரிப்பதற்காக யமன் கலகம் செய்யும்போது ஞானபண்டிதனாகிய முருகன் வந்து காப்பாற்ற வேண்டுமென அருணகிரியார் முருகனிடம் சரணம் அடைவதை பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

*சாகா தெனையே சரணங்களிலே*
*காகா நமனார் கலகஞ் செயுநாள்*
*வாகா முருகா மயில் வாகனனே*
*யோகா சிவஞானொப தேசிகனே*

முருகப் பெருமானின் இச்சா சக்தி, வள்ளி அம்மன், கிரியா சக்தி தெய்வானை, ஞானாசக்தி சக்தி வேல். இச்சா சக்தியாக வள்ளியம்மையைக் கொண்டே ஆன்மாக்களுக்கு முருகன் அருளைப் புரிகின்றார். இறைவனிடம் அன்பைச் செலுத்தி அருளைப் பெறுவதே அடியார்களின் செயலாகும். இறையருளைப் பெறுகின்ற அநுபூதி நிலைக்கு உலகியல் ஆசைகள் தடையாக இருக்கின்றன. இறைவனிடத்திலே அன்பு வைக்க வேண்டுமே ஒழிய ஆசை வைக்கக்கூடாது. ஆசையான சங்கிலி முற்றிலும் அழிந்தால் இறைவனிடம் நாம் ஒன்றுபட்டு விடலாம். இதனை

*தூசா மணியும் துகிலும் புனைவாள்*
*நேசா முருகா! நினதன்பருளால்*
*ஆசா நிகளம் துகளாயின பின்*
*பேசா அநுபூதி பிறந்ததுவே*

என வரும் கந்தரநுபூதிப் பாடல் தெளிவாக்கிறது.

நல்லைக்குமரன் மலர்

# வைரவ வழிபாடு

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வைரவர் வழிபாடு தனித்துவமான ஒரு வழிபாடக விளங்குகிறது. சாதாரணமாக ஒரு மரத்தின் கீழ் திரிசூல வடிவில் இருப்பது முதல் சகல பரிவாரக் கோயில்களுக்கும் மத்தியிற் கர்ப்பக்கிருக மூர்த்தியாக வைரவர் விளங்குதல் வரை வைரவ வழிபாடு பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்ட சில தினங்களில் மட்டும் விளக்கேற்றும் நிலை முதல் நித்திய நைமித்திய நெறியில் பிரமோற்சவம் நடத்தும் நிலையீறாக வைரவர் வழிபாடு நடைபெற்று வருகிறது. வைரவர் கிராமத் தெய்வம், காவல்தெய்வம், இரத்தப் பலியேற்கும் தெய்வம் என்பன போன்ற நம்பிக்கைகளும் நம்மவர்களிடம் உண்டு. அவர் சிவகுமாரர் நால்வரில் ஒருவர் ஆதலால் சாஷாத் சிவபெருமானே அவர் என்ற கருத்தும் ஒருபுறம் உண்டு.

வைரவர் தோற்றம் மூவேறு தடவைகளில் மூவேறு காலங்களில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. மூன்றும் தீய செயல்களில் ஈடுபட்டவரை நிக்கிரகஞ் செய்யத் தோன்றிய உக்கிர வடிவங்களாகவே இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரமன் அகந்தையால் சிவநிந்தை செய்தபோது அவன் தலையைக் கிள்ளிய வடிவம் ஒன்று, சிவபக்தர்களைத் துன்புறுத்திய சஜாசுரன் என்ற ஆனையை நிக்கிரகிக்கத் தோன்றிய வடிவம் ஒன்று, இரணிய வதத்தினாற் கர்வம் கொண்ட நரசிம்ம வடிவினனாகிய விஷ்ணுவைத் தோலுரித்து நிக்கிரகித்த வடிவம் ஒன்று என மூன்று வடிவங்கள் பேசப்படுகின்றன. இம்மூன்று வைபவங்களிலும் சிவனிடமிருந்தே வைரவ மூர்த்தம் தோற்றம் பெற்றதாக அறியப்படுகிறது.

சிவபெருமானின் அருள் வடிவங்களில் ஒன்றே வைரவ வடிவமாகும். எத்தகைய கொடியவர்களையும் தம் மறக்

கருணையால் அடியவராக்கி ஆட்கொள்ளும் பொருட்டுச் சிவபெருமானே பல்வேறு மூர்த்திகளாகவும் வடிவம் கொண்டுள்ளார் என்பதைப் புராண வரலாறுகளினூடாக அறிகிறோம். சிவனே முருகனாகிச் சூரசங்காரம் செய்ததையும், விநாயகராகிக் கயமுகாசுரனின் அகங்காரத்தை அடக்கியதையும், வீரபத்திர வடிவம் தாங்கித் தக்கனின் செருக்கை அடக்கியதையும் வயிரவராகிப் பிரமா முதலிய தேவர்களின் அகந்தையை அடக்கியதையும் புராணங்களிலே நாம் காண்கிறோம்.

ஒவ்வொருவருடைய மனப்பக்குவத்திற்கும் இயல்புக்கும் ஏற்ப எந்த மூர்த்தியைத் தொழுதாலும் அந்த மூர்த்தியினிடமாக நின்று அப்பரம்பொருளே வேண்டியதை வேண்டியாங்கு அருளுவார்.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்"

என்பது சித்தாந்த சாஸ்திரங்களில் ஒன்றாகிய சிவஞானசிததியாரின் கூற்றாகும்.

"பரித்ராணாகி ஸாதூனாம் வினாசாய கதுஷக்ருதாம்
தர்மஸம்ஸ் தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே"

- பகவத்கீதை

எப்பொழுது அறம் அழிந்து மறம் மேலெழுகிறதோ அப்பொழுது என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன் என்பது பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா போர்க்களத்தில் மனச்சோர்வுடன் நின்ற அருச்சுனனுக்குத் தைரியமூட்டக் கூறிய வாசகங்களாகும். துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்வதற் காகவே தான் அவதாரம் எடுத்ததாகவும் கீதையிலே கண்ணன் பார்த்தனுக்குக் கூறுகிறார்.

இவ்வாறே துஷ்ட நிக்ரஹம் செய்து சிஷ்ட பரிபாலனம் செய்கின்ற சிவனின் ஓர் வடிவமாகவே வைரவ மூர்த்தம் காணப்படுகிறது. சிவபெருமான் பிரமனின் பாவத்தைத் தொலைக்கவும் மற்றத் தேவர்களின் செருக்கை அகற்றவும் திருவுளம் பற்றினார். அப்போது சிவபெருமானின் இதயத்திலிருந்து வைரவக் கடவுள் தோன்றினார். நீல நிறத் திருமேனியும், சூலம், பரசு, பாசம், உடுக்கு என்ற நான்கு ஆயுதங்களைத் தரித்த நான்கு திருக்கரங்களும் மூன்று திருக்கண்களும் திருச்சடையு முடைய உக்கிர வடிவம்கொண்டு விளங்கினார்.

*பரமனை மதித்திடாப் பங்க யாசனன்*
*ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்*
*குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்*
*புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்*

என்ற கந்தபுராணப் பாடல் வைரவர் வடிவம் தாங்கிச் சிவன் செய்த செயலை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

வைரவப் பெருமானுக்குச் சேத்திர பாலர் என்ற ஒரு பெயரும் உண்டு. சேத்திர பாலர் என்பதற்குக் கோயிலைக் காப்பவர் என்பது பொருளாகும். ஆலயங்களிலே நடைபெறும் கிரியை நிகழ்ச்சிகளிலே முதலிடம் விநாயகப் பெருமானுக்கு இருப்பது போல பூசையின் முடிவிலே வைரவப் பெருமானின் வணக்கமும் முக்கிய இடம்பெறுகின்றது. ஆலயங்களின் காவல் தெய்வமாக மாத்திரமல்லாது கிராமங்களின் காவல் தெய்வமாகவும் வயிரவப் பெருமான் வணக்கம் இருந்து வந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் வைரவப் பெருமானுக்குக் கோயில் இல்லாத கிராமங்களே இல்லை எனலாம்.

ஆகம நெறி தவறாத வழிபாட்டுடன் அமைந்த வைரவர் கோயில்களும் உண்டு. கிராமிய வழிபாட்டு அம்சங்களுடன் கூடிய வைரவர் ஆலயங்களும் பல யாழ்ப்பாணத்தில் உண்டு. கிராமிய வழிபாட்டுடன் இருந்த பல வைரவர் ஆலயங்கள் இன்று ஆகம வழிபாட்டுத் தலங்களாக மாற்றம் பெற்றிருக்கின்றன. வீமன்காமத்திலே சிறப்பான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய கருங்கல்லால் ஆக்கப்பட்ட சிறந்ததோர் ஆலயம் இருக்கிறது. சங்கானையிலும் சிறுப்பிட்டியிலும் உள்ள வைரவர் ஆலயங்களில் தேரோட்டமும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

அந்நியர்களாகிய போர்த்துக்கேயர் இந்நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் சைவாலயங்களை இடித்து தரைமட்டமாக்கினார்கள். சைவாசாரத்தை அடியோடு ஒழித்துக் கட்ட கங்கணம் கட்டி நின்றனர். தமது மதத்தைப் பரப்புவதற் காகவும் நமது நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டுவதற்காகவும் எமது நாட்டிற்கு வருகை தந்த அந்நியர்களின் ஆட்சிக் காலத்தில் மதக்கொடுமை தலைவிரித்துத் தாண்டவமாடியது. உருவ வழிபாட்டை வெறுப்பவர்களான அவர்கள் இலங்கை வாழ்மக்களை வலுக்கட்டாயமாகக் கிறிஸ்தவர்களாக்க முனைந்தனர். யாழ்ப்பாணத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போர்த்துக்கீசத்

தளபதியாகிய டீ ஒலிவரா என்பவன் தனது ஆளுமைக்கு உட்பட்ட பிரதேசமெல்லாம் இருக்கின்ற சைவக் கோயில்கள் அனைத்தையும் இடித்து தரைமட்டமாக்கும்படி தனது படையினருக்குக் கட்டளையிட்டான். புகழ்பூத்த சைவாலயங்கள் எல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. சைவ மக்கள் சிவ சின்னங்கள் அணிவது தடுக்கப்பட்டது. சிவசின்னங்களை அணிந்தவர்கள் தண்டனைக் குள்ளாக்கப்பட்டார்கள். வாழையிலையில் உணவு படைத்து உண்ணக்கூடாது எனத் தடை விதித்தனர். விரத காலத்தில் வாழையிலையில் உணவு அருந்திய சைவர்கள் தாம் சாப்பிட்ட இலைகளைக் கூரைகளிலே செருகி வைக்க வேண்டிய பரிதாப கரமான நிலை இருந்தது. இத்தனை இம்சைகளுக்கு மத்தியிலும் நமது முன்னோர் சைவ சமயத்தை மறைமுகமாக விடாது கைக்கொண்டு வாழ்ந்து வந்தாகள் என்றால் அதுவும் இறைவனது மறக்கருணையின் அருட்செயலென்றுதான் கொள்ள வேண்டும்.

சிவபிரானுக்கும் வைரவப் பெருமானுக்கும் கையில் தரிக்கும் ஆயுதமாக அமைவதே மூவிலைச் சூலம். அவர்களுடைய அதிகாரம் பெற்ற அஸ்திர தேவராக வழிபாடு செய்வதற்கும் உரியது சூலம் ஆகும். இந்துக்களின் தொன்மைசார் தொட்டி லாகிய சிந்துவெளி நாகரிகததில் புதையுண்டிருந்த மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளில் வழிபாட்டுக்குரிய சூலங்கள் காணப்படுகின்றன. மத சுதந்திரம் மறுக்கப்பட்டு வாழ்ந்து வந்த யாழ்ப்பாண மக்கள் போர்த்துக்கீசருடைய ஆட்சிக் காலத்தில் சிவனிலிருந்து வேறாகாத வைரவ சூலத்தை கிணற்றடியிலும் மரங்களினடியிலும் வீட்டு வளவுத் தோட்டங்களிலும் நாட்டி வைத்து வணங்கினர். வைரவப் பெருமானின் வணக்கமே சைவச மயத்தையும் சைவரையும் அந்நியரிடமிருந்து காப்பாற்றியது.

அந்நியர்களுடைய கழுகுக்கண் பார்வையிலிருந்து தப்புவதற்காக நமது முன்னோர்கள் தமது வழிபாட்டில் சில தந்திரங்களைக் கையாண்டனர். பரம்பரையாக வழிபாடுசெய்துவந்த இடங்களில் சிவபிரானுக்குரிய சின்னமாகிய மூவிலைச் சூலத்தை நட்டு அதன் பக்கச்சுடர்களையும் துணியால் மறைத்து வெளியே காண்பவர்கள் கிறிஸ்தவ சிலுவை வழிபாடு செய்கிறாகள் எனநினைக்கும்படி செய்து சைவ வழிபாட்டை மறைமுகமாக நம்மவர்கள் கடைப்பிடித்து வந்தார்கள்.

இப்படியாக யாழ்ப்பாணத்தில் சைவ கலாச்சாரத்தை

பாதுகாக்கவும் எமது சமய பாரம்பரியம் மீண்டும் புத்துயிர் பெறவும், நாம் இன்றும் சைவர்களாகவே வாழவும் வழிவகுத்த வைரவப் பெருமானின் அருட்கடாட்சத்தை நாம் என்றுமே மறக்க முடியாது.

வைரவப் பெருமானுக்குரிய மந்திரங்களையும் அவரைப் போற்றித்துதிக்கும் பாடல்களையும் பக்தி சிரத்தையோடு ஆசாரசீலராய் இருந்து பாராயணம் செய்வோர் மரணபயம் ஒழிவர். இஷ்டசித்திகளைப் பெறுவர். முன்செய்த பாவங்கள் அனைத்தும் ஒழிந்து தூயவராவர். அவரை நினைந்து அவருக்குரிய மந்திரங்களை ஓதி விபூதி தரிக்கின் சரீரத்தில் உள்ள நோய்கள் நீங்கிச் சுகம் பெறுவர் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

# திருமுறைகளில் சைவசித்தாந்தம்

சோழர் காலத்தின் பிற்பகுதியிலே சைவசித்தாந்த தத்துவம் நூல் வடிவம் பெற்றது. அருளாளர்கள் தந்த அனுபூதி வாசகங்களாகத் திகழ்கின்ற பன்னிரு திருமுறைகளுள்ளே சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்கள் செறிந்து காணப்படுகின்றன.

சங்க காலத்திலிருந்து சோழர் காலம் வரையுள்ள தோத்திர இலக்கியங்களின் தொகுப்பே பன்னிரு திருமுறைகள். இவை சிவனையே முழுமுதலாகக் காட்டுவன. சைவசித்தாந்த உண்மைகளை அனுபூதிமான்களுடைய அனுபவவாயிலாகக் கூறும் நூல்கள் இவையாகும். இவற்றுள் 10ம் திருமுறையான திருமந்திரத்தில் சைவசிந்தாந்தக் கருத்துக்கள் பரவிக் கிடக்கின்றன.

## திருஞானசம்பந்தரின் பாடல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள்

உயிர்கள் பாசத்தில் அகப்பட்டு அதனால் வரும் துன்பத்தை உணராமல் சிற்றின்பத்தில் மூழ்கியிருப்பதையும் இறைவனின் திருவருளாகிய பேரின்பத்தை உணராமல் இருப்பதையும் திருவாரூர்ப் பதிகப் பாடல் ஒன்றில் ஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்:

*செடிகொணோ யாக்கையம்பாம்பின்*
*வாய்த்தேரை யாய்ச் சிறுபறவை*
*கடிகொள் பூந்தேன் சுவைத்*
*தின்புறலாமென்று கருதினாயே*

*முடிகளான் வானவர் முன்*
*பணிந்தன் பராயேத்துமுக்கண்*
*அடிகளாரூர் தொழுதுய்யலா*
*மையல் கொண்டஞ்சல் நெஞ்சே*

என்பது அப்பாடலாகும். பாம்பின் வாயில் தேரை, தேரையின் வாயில் சிறுபறவை. அச்சிறு பறவையோ அருகிலுள்ள பூவின் தேனைக் குடித்து இன்புற முயல்கின்றது. தேனைச் சுவைத்துக் கொண்டிருக்கும் சிறுபறவைக்கும் அதனை உண்ணும் தேரைக்கும் தேரையை விழுங்கப் போகும் பாம்புக்கும் அவ்வுணவால் எய்தும் இன்பம் தெரிகின்றதே ஒழிய தமக்கு நேரப்போகின்ற துன்பம் தெரியவில்லை. இவ்வாறே உயிர்கள் பாசத்தில் அகப்பட்டு இப்பிறவியில் வரும் பெரும் துன்பத்தை உணராது சிற்றின்பத்தில் மூழ்கியுள்ளன என்பதை முன்னிரு அடிகளில் கூறுகின்றார். பின்னிரு அடிகளில் இந்நிலையை நெஞ்சுக்கு அறிவுறுத்தி நிலைத்த பொருளான இறைவனைத் தொழுது உய்ய வேண்டும் என்று உபதேசம் செய்கிறார்.

ஞானப்பால் உண்பதும் சம்பந்தருடைய உள்ளம் காந்தத் தால் இழுக்கப்பட்ட இரும்பு போல பெருமானாலே கவரப்பட்டது என்பதை 'என்னுள்ளம் கவர்கள்வன்' என்ற அவரது வாக்கே விளக்கி நிற்கின்றது. திருவண்ணாமலையில் வீற்றிருக்கின்ற பெருமானை வணங்குகின்ற அனைவரது வினையும் வேரோடு அறுந்துவிடும் என்பதை

*"அண்ணாமலை தொழுவார் வினை*
*வழுவாவண்ணம் அறுமே"*

என ஞானசம்பந்தர் பாடல் விளக்கி நிற்கின்றது.

இறைவன் ஒன்றாய் ஒப்பற்றவனாய் இருக்கின்றார். ஆண், பெண் இரண்டாகக் காட்சி தருகின்றான். முக்குண நிலைகளில் மூன்றாகவும் வேதங்களில் நான்காகவும் பூதங்கள் ஐந்தாகவும் சுவை ஆறாகவும், இசை ஏழாகவும் திக்குகள் எட்டாகவும் எல்லாவற்றிலும் இறைவன் கலந்திருக்கிறான் என்பதை,

*ஈறாய் முதலொன்றாய் இரு பெண்ணாண் குணமூன்றாய்*
*மாறா மறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய்*

*ஆறாய் சுவை ஏழோசையோடுஎட்டுத்திசை தானாய்*
*வேறாயுடனானானிடம் திருவீழிமிழலையே"*

என்று பாடுகின்றார்.

தமிழகத்தில் பௌத்த சமணக் கொள்கைகள் குடிபுகுந்த காலத்தில் மக்களிடம் ஊழ்வினை பற்றிய நம்பிக்கையும் மிகுதியாக காணப்பட்டது. வினைகளைப் போக்க முடியாது அனுபவித்தே ஆகவேண்டும் என்ற எண்ணங்கள் வேரூன்றத் தலைப்பட்டன.

இறைவனை வழிபட்டால் வினைகளை நீக்க முடியும் அல்லது குறைக்க முடியும் என்ற கருத்துக்களை சைவம் கூறிற்று. நகராதி பஞ்சாட்சரமாகிய நமசிவாய மந்திரத்தை உச்சரிப்பவர் களை வினைகள் பற்றாது என்பதை பின்வரும் ஞானசம்பந்த ருடைய பாடல் விளக்குகின்றது:

*நம்பு வாரவர் நாவினவிற்றினால்*
*வம்பு நாண் மலர் வார்மது வொப்பது*
*செம்பொனார் திலகம் முலகுக்கெலாம்*
*நம்பன் நாமம் நமச்சிவாயவே.*

மலபரிபாகமுற்ற உயிர்கள் இறைவன் திருவருளை உணரும்; மெஞ்ஞானத்தைப் பெறும்; உயிர்கள் முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயனால்தான் இறைவனை வாழ்த்தி வணங்க முடியும் என்பதை

*"என்ன புண்ணியம் செய்தனை*
*நெஞ்சமே......."*
என்ற சம்பந்தர் பாடல் விளக்கி நிற்கின்றது.

புறச்சிவசின்னங்களுள் ஒன்றாகிய திருநீற்றின் பெருமையை "மந்திரமாவது நீறு....." எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகத்தினூடாக சம்பந்தர் விளக்குகின்றார்.

## திருநாவுக்கரசர் பாடல்களில் சைவசித்தாந்தம்

அப்பர் பெருமான் நடமாடும் கோயிலாகத் திரிந்தவர் என

சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்பிடுகின்றார். எமது உடம்பையே கோயிலாக மாற்றினால் இறைவன் அங்கே எழுந்தருளி அருள்புரிவான் என்பதை பின்வரும் பாடலினூடாக அப்பர் பெருமான் விளக்கியுள்ளார்:

*காயமே கோயிலாகக் கடிமணம் அடிமையாக*
*வாய்மையே தூய்மையாக மனமணிலிங்கமாக*
*நேயமே நெய்யும் பாலா நிறைய நீர்ரமைய ஆட்டி*
*பூசனை ஈசனார்க்குப் போற்றவிக்காட்டினோமே.*

நடராசர் மூர்த்தம் விளக்குகின்ற பஞ்சகிருத்திய தத்துவத்தின் சிறப்பை "குனித்த புருவமும்" என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்.

பஞ்சாட்சர மந்திரத்தின் பெருமையை
"சொற்றுணை வேதியன்" என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்தின் ஊடாக விளக்குகின்றார்.

சிந்தையையும் உடல் உறுப்புக்களையும் பொறிபுலன் களையும் இறைபணியிலே ஈடுபடுத்தினால் அகங்கார மமகாரிரம் நீங்கப் பெற்று தன்னுள்ளே சிவத்தைக் கண்டு சிவனாக மாறுவான் என்பது அப்பர் வாக்காகும். பசு கரணம் எல்லாம் சிவகரணமாகும். சிந்தை முழுவதும் சிவமாக மாறிவிடும் என்கின்றார்.

*தந்தையும் தாயுமாகித் தானவன் ஞானமூர்த்தி*
*முந்திய தேவர் கூடி முறைமுறை இருக்குச் சொல்லி*
*எந்தை நீ சரணம் என்றங் கிமையவர் பரவியேத்தச்*
*சிந்தையுட் சிவமதானார் திருச்செம்பொன் பள்ளியாரே*

என்ற பாடல் சிந்தையை சிவமயமாக்கி ஆட்கொள்ளும் இறைவனின் திறனை எடுத்து விளக்குகின்றது. சரியைத் தொண்டு நெறிக்கு இலக்கணமாக அப்பர் பெருமான் வாழ்ந்தார். இவர் வாக்காலும் வாழ்வாலும் ஒருமித்து வாழ்ந்தார்.

"என்கடன்பணி செய்து கிடப்பதே"
என்பதை குறிக்கோளாகக் கொண்டவர். சிவாலயத்தில் செய்யக்கூடிய சரியைத் தொண்டுகளை

“நிலைபெறுமா றெண்ணுதியேல் ....” என்ற பாடலினூடாக விளக்குகின்றார். பூவும் நீரும் கொண்டு இறைவனை நாடோறும் வழிபடல் வேண்டும் என்பதை “சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் என்ற பாடலினூடாக விளக்குகின்றார். அன்பு, பக்தி, தொண்டு, தியாகம் சைவசித்தாந்தம் ஆகிய அனைத்தையும் இவருடைய பாடல்கள் விளக்கி நிற்கின்றன.

## சுந்தரர் பாடல்களில் சைவசித்தாந்தம்

இறைவன் வெளிப்படும் இடங்களில் ஒன்றாக சங்கம வழிபாட்டை சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனடியார்களைப் பற்றி திருத்தொண்டர் தொகையில் குறிப்பிடுகின்றார்.

“தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்” என்ற பாடலில் சிவனடியார் மாண்புகளை வரிசைப்படுத்துகின்றார். இவர் சைவ நாற்பாதங்களில் இறைவனை உள்ளத்துள்ளே ஓர்ந்து உணர்வதாகிய யோக மார்க்கத்தில் நின்று முத்தியடைந்தார்.

*“ஓர்த்தனன் ஓர்த்தனன்*
*உள்ளத்துள்ளே*
*நின்ற ஒண்பொருள் சேர்ந்தனன்”*

என்று பாடுவார்.

சைவ நாற்பாதங்களுள் ஒன்றாகிய யோகநெறியைப் பற்றி சுந்தரர் கூறும்போது,

*“மேவிய வெந்நரகத்தில்*
*அழுந்தாமை நமக்கு*
*மெய்ந்நெறியைத் தான் காட்டும்*
*வேத முதலான்”*

என்று குறிப்பிடுகிறார். இறைவனை நாங்கள் வெளியில் தேடுவதில் பிரயோசனம் இல்லை. நமது அகத்தில் தேடவேண்டும் என்பார்.

தேடுவன் தேடுவன் தேடுவன் செம்

*மலர்ப்பாதங்கள் நாடோறும்*
*நாடுவன் நாடுவன் நாபிக்கு*
*மேலாயோர் நால்விரல்*

என்றும் அங்கே இறைவனைக் கண்டு "ஆடுவன், ஆடுவன் ஆனந்தப் பரவசப்பட்டு" என்றும் சுந்தரர் பாடுகிறார். இறைவனை நாள்தோறும், சிந்திப்பவர்களின் சிந்தையில் அவன் என்றுமே வாழ்வான் என்பதை

*"சிந்தித்தென்றும் நினைத்தெழுவார்கள் சிந்தையில்*
*திகழும் சிவன் தன்னை ......"*

என்று சிவனைப் போற்றுவார்.

ஆன்மாவைப் பந்தித்த வினைகள் யாவும் இறைவனருளாலே பொசுங்கி விடும் என்பதை
*திருந்தித் திருந்தி வந்தென்*
*சிந்தையிடம் கொள் கைலாயா*
*வருத்தி உன்னை அடைந்தார்*
*வினைகள் அகல அருளாயே*

என்று பாடுவார்.

சுந்தரர் இறைவனின் பெருமைகளைக் கூறும்போது "பேராயிரம் உடையானே தொண்டரைப் பெரிதும் உகப்பானை" என்று பாடுவார்.

இவருடைய பாடல்களில் இறைவனின், உயிரின், வாழ்க்கையின் இயல்புகளோடு இறைவனின் திருவருளைப் பெறும் இயல்புகளும் கூறப்பட்டுள்ளன.

அழகான பூக்களும் நீரும் கொண்டு இறைவனை நாள்தோறும் பூசிப்பவர்களுக்கு தூய அறிவு உண்டாகும். அன்பர்களுடைய நெஞ்சத்தை இறைவன் கோயிலாகக் கொள்வான்.

*"நறுமலர்ப் பூவும் நீரும்*
*நாடோறும் வணங்குவார்க்கு*
*அறிவினைக் கொடுக்கும் ஆரூரப்பன்"*

என்று இறைவன் அருளும் ஞான மொழியின் சிறப்பைப் போற்றுவார்.

இறைவனை நம்பிக்கையோடு வழிபட்டவர்கள் வாழ்விலே துன்பப் படவில்லை என்பதை "நம்பினார்க்கருள் செய்யும் கற்பகம்" என்றும் "அடியாரை வாழ்வினை நலியவொட்டார்" என்றும் "கலந்தார்க்கு அருள்செய்யும் கற்பகம்" என்றும் "எல்லோர்க்கும் இல்லையெனாது அருள்செய்வார்" என்றும் சுந்தரரின் பாடல் வரிகள் விளக்கி நிற்கின்றன.

## திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்

மாணிக்க வாசகருடைய திருவாசகத்தில் இறைவனே ஆகமங்களை ஆன்மாக்கள் உய்வதற்காக அருளினார் என்ற கருத்து பல இடங்களில் காணப்படுகின்றது.

*"மன்னு மாமலை மகேந்திரமதனில்*
*சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளி"*
என்றும்,
*"ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க"*
என்றும் ஆகமங்களின் பெருமை பேசப்படுகின்றது.

சிவஞானபோதத்தின் 3ஆம் சூத்திரம் குருவின் பெருமையைப் பேசுகின்றது. மணிவாசகரை குருந்தமர நிழலில் இறைவன் குருவடிவம் தாங்கியே ஆட்கொண்டான் என்பதை

*"கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க"*

*"நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி"*

*"காட்டாதன எல்லாம் காட்டி*
*கேளாதன எல்லாம் கேட்பித்து"*

என்ற திருவாசக வரிகள் எடுத்து விளக்குகின்றன.

உயிர்நோயான பிறவிநோய் தீர்க்கும் அருமருந்தாக திருவாசகம் காணப்படுகின்றது. திருவாசகம் குருவருள் விளக்கத்தை சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது. பக்குவமுள்ள ஆன்மாக்களை இறைவன் குருவடிவில் வந்து ஆட்கொள்வான் என்றே சைவசித்தாந்தம் கூறுகின்றது. திருவாசகத்தின் முழுப்

பொருளும் திருவைந்தெழுத்தின் விளக்கமேயாகும். திருவாசகம் திருவைந்தெழுத்தைக் கொண்டு தொடங்கி திருவைந்தெழுத்தின் அடக்கமான ஓங்காரத்தைக் கொண்டு முடிகின்றது. நமச்சிவாய வாழ்க என்று தொடங்கி ஓங்காரத்து உட்பொருளை "ஐயன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே" என்று முடிவிலே அமைந்த அச்சோப்பதிகப் பாடலுடன் முடிவடைகின்றது. நமச்சிவாய என்று தொடங்குகின்ற தொடக்கம் எல்லாப் பொருளையும் அவனடிக்கீழ் அடக்குகின்ற அடக்கமாக அமைந்துள்ளது. துரோதான சக்தி, மலங்கள், சிவம், அருட்சக்தி, ஆன்மா என்பவற்றை முறையே நமச்சிவாய என்ற ஐந்து எழுத்தும் விளக்குகின்றன. திருவாசகத்தின் முழுப்பொருளும் திருவைந் தெழுத்து விளக்கம், திருவடிப்பேறு என்பனவே ஆகும்.

சிவபுராணத்தில் பிறவியின் இழிவையும் இறைவனின் பெருமையையும் அடியவர்களுக்கு அருள்புரியும் திறனையும் அடியவர்கள் இறைவனை வேண்டிநிற்கும் திறனையும் விளக்குகின்றார் மணிவாசகர். வினையின் காரணமாகப் பிறந்து உழல்கின்ற உயிரானது கொடிய இருளாகிய ஆணவத்தினாலும் அறம், பாவம் என்னும் இருவினைக்கயிற்றினாலும் கட்டப்பட்டு புறத்தே தோலால் போர்த்தப்பட்டு அசுத்த புழு முதலிய அழுக்குகளைச் சொரியும் ஒன்பது வாயில்களைக் கொண்ட குழலாக அமைந்த உடம்பினை எடுக்கின்றது. மானிடப்பிறவி எடுத்தபின்பும் ஆன்மாவை நேரியவழியில் செல்லவிடாது மலங்கள் தடுக்கின்றன. அறியாமையால் உழன்று நிற்கும் உயிர் ஏதோ தவப்பயனாலும் முற்பிறவியில் ஈட்டிய நல்வினை வசத்தாலும் இறைவனைக் குருவாகப் பெற்று உய்யும் நெறிகளை அடைகின்றது. ஆன்மாவின்' குறிக்கோள் இறைவன் திருவடிகளை அடைதலே ஆகும்.

*"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்*
*மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"*

என சிவபுராணம் இதனை விளக்குகின்றது.

இறைவனின் சர்வ வியாபகத் தன்மையை "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி"
என்ற திருவாசகப் பாடல் விளக்குகின்றது.

“தன்னை அறிந்தவன் தத்துவஞானி” என்பதே இந்துமதக் கோட்பாடு. தெய்வத்தை உணராது தீவினையில் அழுந்தும் நெஞ்சுக்கு அறிவுறுத்துவதாக “வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே” என்ற பாடல் அமைந்து காணப்படுகின்றது. அன்பின் மிகுதியால் வந்த உரிமைப்பாட்டினால் இறைவனோடு மணிவாசகர் பேசுகின்ற அன்பு வாசகங்களை

*“ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்*
*ஆண்டனீ அருளில்லையானால்”*

என்ற வாழாப்பத்துப் பாடல் வரிகளில் இருந்தும்

*“நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே”*

என்ற குழைத்த பத்து வரிகளில் இருந்தும்

*“யான் உனைத்தொடர்ந்து*
*சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந்தருளுவது இனியே”*

என்ற பிடித்தபத்து வரிகளில் இருந்தும் அறிந்து கொள்ளலாம்.

தேடிய பொருள் கிடைத்துவிட்ட நிலையில் ஆனந்த மேலீட்டினால் அருளிய பதிகம் திருப்படையாட்சி ஆகும். பிரபஞ்சத்தை நுகர்வதற்கென அமைந்துள்ள பஞ்சப்புலன்கள் யாவும் பரபோதத்தில் செயலற்று விடுகின்றன.

ஜீவ உபாதி ஒழிந்ததும் வழிபடுவோன் வழிபடுபொருள் என்ற வேற்றுமைகள் களையப்படுகின்றன.

“மாலறியா மார்ப்பாதமிரண்டும் வணங்குது மாகாதே” என்ற பாடல் வரிகள் இதனை விளக்கி நிற்கின்றன.

## திருமந்திரத்தில் சைவசித்தாந்தம்

திருமந்திரத்திலே சைவ சித்தாந்தக் கருத்துக்கள் செறிந்து காணப்படுகின்றன. திருமந்திரம் 9 தந்திரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. சிவாகமங்கள் 28ல் காரணம் முதல் மகுட ஆகமம் வரையான 9 ஆகமங்களின் சாரத்தை திருமந்திரத்தில் காணலாம். பசு, பதி, பாச இயல்புகள் அறியும் ஞானமே உண்மை ஞானமாகும்.

நிலைபேறான நித்தியப் பொருட்களே ஆராயத்தக்க பொருட்களாகும். அறிவிக்காமல் அறிபவன் இறைவன் அறிவித்தால் அறிவது ஆன்மா அறிவித்தாலும் அறியமாட்டாதன மலங்கள். இம் மூன்று பொருளையும் உள்பொருட்கள் என சைவசித்தாந்தம் கூறுகின்றது. பதி, பசு, பாசம் என்று கூறப்படுகின்ற மூன்றில் பதியாகிய இறைவனைப் போலவே உயிரும் அதனை பிணைக்கின்ற பாசமாகிய தளையும் அனாதியான பொருட்கள் என திருமந்திரம் கூறுகின்றது. உயிரும் அதைப்பற்றியுள்ள பாசமும் இறைவனைச் சேரமாட்டா. உயிரானது பிறப்பு இறப்புக்களில் அகப்பட்டு இறைவனை அணுக முடியாமல் பாசத்தில் அழுந்திக் கிடக்கின்றது. இந்தப் பாசம் நீங்கி, அறியாமை அகன்று உயிரானது உய்ய வேண்டுமெனில் அதற்கு இறைவனே வந்து ஆட்கொள்ள வேண்டும். இறைவன் கருணையோடு ஆன்மாக்களை அணுகும்போது அதைப் பிணித்துள்ள தளை தானாகவே நீங்கிவிடும். இதனைத் திருமந்திரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

*பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்*
*பதியினைப் போல பசு பாசம் அனாதி*
*பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்*
*பதி அணுகில் பசுபாசம் நில்லாவே.*

இறைவன் வெளிப்படும் இடங்களாக சைவசித்தாந்தம் குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூன்றையும் குறிப்பிடுகின்றது. மூவகை ஆன்மாக்களில் சகலருக்கு இறைவன் குருவடிவாய் வந்து ஆட்கொள்வான் என்றும் அவ்வாறு ஆட்கொள்வதை சாதாரண தீட்சை என்றும் சாத்திர நூல்கள் கூறுகின்றன. ஞானமே உருவாக உடையவன் இறைவன். அவனை நேரில் நாம் காண்பது என்பது இயலாத காரியம். ஞானப் பிழம்பாய், ஒளிப்பிழம்பாய் இருக்கின்ற இறைவனது திருவருளை நமக்குப் பெற்றுத் தருகின்றவர்கள் குருமகான்கள். அறிவுக்கு அப்பாற்பட்ட தத்துவங்களை விளங்கு வதற்கு அறிவுக்குப் புலனாகவுள்ள உண்மைகளை திருமூலர் காட்டுவார். ஆன்மாக்களின் நிலைக்கு ஏற்ப இறைவனே குருவாக வந்து ஞானத்தை வழங்குகிறான் என்றே சைவசித்தாந்தம் கூறுகின்றது. குருவை சூரியனுக்கும் குருவருளைச் சூரியக் கதிருக்கும் ஆன்மாவை சூரியக்காந்தக் கல்லுக்கும் மும்மல அழுக்கைப் பஞ்சுக்கும் உவமையாக காட்டுகிறார். திருமூலர்

சூரிய காந்தக் கல்லும் பஞ்சும் ஒன்றாகப் பொதிந்து வைத்தது போல இந்த உடம்புக்குள் ஆன்மாவைச்சுற்றி மும்மல அழுக்குகள் சூழ்ந்து நிற்கின்றன. சூரியகாந்தக் கல்லை ஞானகுருவாகிய இறைவனை நோக்கி நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்தினால் பஞ்சு எரிவது போல ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கிவிடும். இதனை பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகின்றது:

*சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே*
*சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா*
*சூரியன் சந்நிதியில் சுடுமாறு போலவே*
*சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.*

அண்டசராசரம் எல்லாம் வியாபித்திருக்கும் இறைவனை பிண்டமாகிய உடலிலே ஞானிகள் காண்பார்கள். இறைவன் வீற்றிருக்கும் இவ்வுடம்பே சிவலிங்க வடிவமாகவும் சிதம்பர இரகசியமாகவும், சதாசிவ மூர்த்தமாகவும் பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் நடராச வடிவமாகவும் காணப்படுகின்றது என்பதை

*மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்*
*மானுட ராக்கை வடிவு சிதம்பரம்*
*மானுட ராக்கை வடிவு சதாசிவம்*
*மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே*

எனத் திருமந்திரம் குறிப்பிடுகின்றது. சிவனடியார்களை வழிபடுவது சிவனை வழிபடுவதற்குச் சமனாகும். இறைவனுடைய அருளிலும் பார்க்க இறையருளைத் தம்முள்ளே இழுத்து வைத்திருக்கும் ஞானிகளின் அருள் உயர்வானதாகும்.

சிற்ப சித்திரங்கள் அமைந்த கோயிலிலே உள்ள மூர்த்திக்கு ஏதேனும் நிவேதனம் இட்டால் அது அப்படியே அடியார்களுக்கு போய்ச் சேராது. ஆனால் சிவனடியார்களுக்கு ஏதேனும் சமர்ப் பித்தால் அவர்களுக்குப் பயன்படுவதோடு அப்படியே இறை வனுக்கும் போய்ச் சேர்கின்றது. சற்பாத்திரம் பார்த்துச் செய்யும் ஈகை கடவுள் வழிபாடே எனத் திருமூலர் கூறுகின்றார்.

*படமாடக் கோயில் பகவர்க்கொன் றீயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா*
*நடமாடும் கோயில் நம்பர்க்கொன் றீயில்*
*படமாடும் கோயில் பகவற்கது ஆமே.*

சிவனோடு பிரிவின்றிக் கலந்து நின்று திருவருளை ஆன்மாக்களுக்கு வழங்கும் பராசக்தியை பல வழிபாட்டு நிலைகளிலே கண்டு ஊனும் உள்ளமும் உருகிப்பாடுகிறார். சக்தியின் துணையின்றி எந்தத் தவமும் ஆகாது என்பது திருமூலர் வாக்கு ஆகும். பராசக்தியின் ஆற்றலைக் கொண்டுதான் ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. ஆன்மாக்களின் உயர்லட்சியமான முத்தியை அடைவதற்கு சக்தியின் துணை அவசியமாகும். சக்தியின் அருட்சிறப்பினைப் பின்வரும் திருமந்திரம் தெளிவாக விளக்குகின்றது:

*அவளை அறியா அமரரும் இல்லை*
*அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை*
*அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை*
*அவளன்றி ஊர் புகும் ஆறு அறியேனே.*

ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கப்பெற்று ஆன்மா இறைவனை அடைவதற்கு சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய சைவநாற்பாத நெறியினை சைவசித்தாந்தம் எடுத்துக் கூறியுள்ளது. விளக்கேற்றல், பூக்கொய்தல், மெழுகுதல், பெருக்குதல் ஆகிய செயற்பாடுகள் எல்லாம் தாசமார்க்க நெறியில் நிற்கும் சரியைத் தொண்டே ஆகும் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகின்றது:

*ஒளி அனல் தீபம் இடல் மலர் கொய்தல்*
*அளிதின் மெழுகல் அது தூர்த்தல் வாழ்த்தல்*
*பளிபணி பற்றல் பல் மஞ்சனம் ஆதி*
*தளிதொழில் செய்வது தான் தாசமார்க்கமே.*

சிவலிங்கப் பூசை செய்தல், திருமுறை ஓதல், துதித்தல், திருவைந்தெழுத்தைச் செபித்தல், குற்றமற்ற விரதங்களை அனுஷ்டித்தல், உண்மை பேசுதல், பிற உயிர்களிடம் அன்பும்

பரிவும் காட்டுதல், அன்னதானம் செய்தல், ஆத்ம சுத்தி செய்தல் ஆகியன சற்புத்திரமார்க்க நெறியாகும். கிரியை நெறிநின்று வழிபடுபவர்கள் செய்யும் மேற்கூறிய செயல்களைப் பின்வரும் திருமந்திரப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது:

*பூசித்தல் வாசித்தல் போற்றுதல் செபித்தல்*
*ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை*
*நேசித்திடன்னமும் நீ சுத்திசெய்தல் மற்று*
*ஆசற்ற சற்புத்திர மார்க்கமாகுமே.*

அட்டாங்க யோகத்தின் இறுதிநிலை சமாதிநிலையாகும். சமாதி நிலையில் தியானிப்போனுக்கு தியானம், தியானிக்கப்படும் பொருள் என்ற வேறுபாடுகள் நீங்கிவிடும். தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாக மாறிவிடுவான் என்பதை "தியானத் யாத்துரு தேய 'ரூபா" என வலிதா சகஸ்ர நாமமும் குறிப பிடுகின்றது. யோக நெறியில் நின்று சமாதி கூடும் யோகியின் உள்ளத்திலே முழு உலகம் அடங்கிவிடும். சமாதியிலே சிவனது அருவத் திருமேனியைத் தியானிக்க அச்சிவம் சுடர்விடும் பேரொளி மயமாய் விளங்கும். யோகச் சமாதி கூடுவோருக்கு அட்டமா சித்திகளும் கைவரும். இவர்கள் சித்தத்தை சிவன்பாலே வைத்து சித்த புருஷர்களாகத் திகழ்வார்கள் என்பதை பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது:

*யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்*
*யோகச் சமாதியின் உள்ளே உயர் ஒளி*
*யோகச் சமாதியின் உள்ளே உள சக்தி*
*யோகச் சமாதி உகந்தவர் சித்தரே.*

ஞான சாதனை செய்யும் போது பொய்யறிவாகிய அஞ்ஞானம் ஆதவனைக் கண்டபனி போல அகன்றுவிடும். ஆன்மா மெய்யறிவு பெற்றுநிற்கும் நிலையே சிவத்தோடு சேர்ந்திருக்கும் நிலையாகும். சிவமாம் தன்மை பெற்ற ஆன்மா சிவத்தை அன்றிப் பிறிதொன் றையும் காணாது அது தன்னையும் சித்தாகிய சிவமாகவே காணும். ஆன்மா சிவத்தோடு கலந்து அனுபவிக்கும் இன்பமே பேரின்பமாகும். இந்தக் கலப்பே அத்துவித (இரண்டற்ற) முத்தி ஆகும். இதனையே சாயுச்சிய முத்தி என்றும் பரமுத்தி என்றும் சைவசித்தாந்த நூல்கள்

கூறுகின்றன. ஞானத்தைவிட மேலான மார்க்கம் இல்லை. வேறு எதுவும் முந்திக்கொண்டு செல்லாது உண்மையான அறிவாகிய ஞானத்தில் திளைத்தவர்கள் சிறந்தவர்கள் என்பதை விளக்கும் திருமந்திரம் இது:

*ஞானத்தின் மிக்க அறிநெறி நாட்டிலில்லை*
*ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று*
*ஞானத்தின் மிக்கவை நல்முத்தி நல்காவாம்*
*ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே.*

புறச்சிவ சின்னங்களுள் ஒன்றான திருநீற்றின் பெருமையையும் அகச்சிவசின்னங்களில் ஒன்றான பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்பையும் திருமந்திரம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. பரமசிவனே விரும்பிப் பூசிக்கொள்ளும் உடலுக்கு கவசமான திருநீற்றை சிறிதும் தடையில்லாமல் நாமும் உடலில் பூசி மகிழ்ந்தால் தீவினைகள் நீங்கும், மோட்ச இன்பம் கிடைக்கும், இறைவனது அழகிய திருவடிகளை அடையலாம் என்பதை பின்வரும் திருமந்திரப் பாடல் எடுத்து விளக்குகின்றது:

*கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை*
*மங்காமல் பூசி மகிழ்வாரே யாமாகில்*
*தங்கா வினைகளும் சாரும் சிவகதி*
*சிங்காரமான திருவடி சேர்வாரே.*

சிவனுடைய வடிவங்களில் பஞ்சகிருத்திய வடிவமாக இருப்பது நடராச வடிவமாகும். பஞ்சாட்சர மந்திரத்தில் தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மகாகாரண பஞ்சாட்சரம், மகாமனு என ஐந்து வகை உண்டு. நமச்சிவாய என்னும் நகராதி பஞ்சாட்சரத்தை ஓதினால் நல்வினைப் பயன்கள் உண்டாகும். இப்பஞ்சாட்சரத்தை செபித்து வந்தால் வலிய தீவினைகள் எல்லாம் அடங்கிவிடும். 'சி' என்னும் எழுத்தை முதலாகக் கொண்ட சிவாநயநம என்னும் மந்திரத்தை உணர்ந்து ஓதினால் இறைவன் நேரடியாக கருணை புரிந்து அருள் செய்வான். நமசிவாய, சிவாயநம ஆகிய பஞ்சாட்சர மந்திரங்களின் மகிமையை பின்வரும் திருமந்திரப்பாடல்:

*நம்முதல் ஓர் ஐந்தின் நாடும் கருமங்கள்*
*அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை*
*சிம்முதல் உள்ளே தெளிய வல்லார்கட்கு*
*தம்முதலாகும் சதாசிவம் தானே*

உடம்பு என்பது ஓர் ஆலயம். உள்ளம் என்பது ஆலயத்தினுள் உள்ள கர்ப்பக் கிருகம். அந்தக் கர்ப்பக்கிருகத்தினுள் இறைவன் வந்து வீற்றிருக்கிறான். பஞ்சேந்திரியங்கள் இந்த உடம்பாகிய கோயிலுக்கேற்றிய ஐந்து விளக்குகள் ஆகும். ஞானம் பெறாதவர்களுக்கு, அவை கள்ளப் புலன்களாகும். ஞானம் பெற்றவர்களுக்கோ அவை சிவலிங்கத்தைக் காட்டும் விளக்குகளாகும். சித்தர்களுடைய யோகநெறிப்படி இந்த சரீரத்தையே கோயிலாக்கி அதனுள் பூஜைக்குரிய ஸ்தானங்களும் கூறப்பட்டுள்ளன. குருமுகமாகத் தெரிந்து கொண்டு செய்ய வேண்டிய ஆத்மார்த்த பூசையின் இரகசியத்தை பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்கி நிற்கின்றது:

*உள்ளம் பெருங்கோயில் ஊனடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்*
*கள்ளப்புலனைந்தும் காளா மணிவிளக்கே.*

பிறப்பினாலேயே கலந்து உயிரை ஆட்டி வருகின்ற கர்மபலனை சைவசித்தாந்தம் சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என மூன்றாக வகுத்துக்கூறும் முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயன்கள் சேர்ந்து தங்கியுள்ள குவியல் சஞ்சிதம் என்றும் இக்குவியலில் இருந்து இப்பிறவியில் அனுபவிக்க என முனைந்து நிற்கும் பகுதி பிராரத்துவம் என்றும் நிகழ்காலத்திலே செய்கின்ற வினையை ஆகாமியம் என்றும் அழைப்பர். இறைவனுடைய திருவருளை நாடிப்பெற்று ஆன்மஞானத்தைத் தேடிக்கண்டால் சஞ்சித, ஆகாமிய வினைகள் நீங்கிவிடும். இறைவன் அருளை நாடினால் ஆன்மஞானம் கிடைத்துவிடும். மேற்கூறிய உண்மைகளை விளக்கும் திருமந்திரப்பாடல் இது:

*தன்னை அறிந்திடும் தத்துவஞானிகள்*
*முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்*
*பின்னை வினையைப் பிடித்து பிசைவார்கள்*
*சென்னியில் வைத்த சிவனரு ளாலே.*

திருமூலரது அனுபவஞானத்தைக் கொண்டிருக்கின்ற தமிழ்மந்திரமாகிய திருமந்திரத்தில் இந்து சமயத்தின் அனைத்து தத்துவக் கருத்துக்களும் காணப்படினும் சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களே செறிந்து காணப்படுகின்றன.

## பெரிய புராணத்தில் சைவசித்தாந்தம்

பசு, பதி, பாசம், இருவினை, மும்மலம், பெத்தநிலை, முத்திநிலை, சரியை, கிரியை, யோகம், ஞானம், இருவினையொப்பு, மலபரிபாகம், தீட்சை, திருவைந்தெழுத்து ஆகிய சைவசித்தாந்தக் கருத்துக்கள் அனைத்தும் பெரிய புராணத்தில் காணப்படுகின்றன. அடியவர்களுக்கு அன்னமிடும் பணியை ஆற்றி வந்த இளையான்குடிமாற நாயனார் வறுமை வந்துற்றபோதும் தாம் செய்துவந்த திருத்தொண்டிலிருந்து வழுவவில்லை. இரவு நேரம் பசித்து வந்த சிவனடியார் ஒருவருக்கு உணவு கொடுப்பதற்காக வயலிலே விதைத்த விதைநெல் எடுத்து வந்து அமுதாக்கினார். சிறு பயிராக வளர்ந்திருந்த பசளிக்கீரையை இருட்டிலே தடவிப் பிடுங்கி கறியமுதாக்கினார். பசளிக்கீரையை பறித்த வரலாற்றைக் கூற வந்த சேக்கிழார் பெருமான் அவர் தமது பாச வினைகளை வேரோடு களைந்தார் என்பதை

*“குழி நிரம்பாத புன்செய் குறும்பயிர் தடவிப் பாசப்*
*பழி முதல் பறிப்பார் போல பறித்தவை கறிக்கு நல்க”*

எனக் குறிப்பிடுகிறார்.

சிவனை மறவாச் சிந்தையாளர்களாக வாழ்ந்த சிவனடியார்களின் மாண்புகளை பெரிய புராணத்தின் திருக்கூட்டச் சிறப்புப் பகுதி தெளிவாக விளக்குகின்றது. குற்றமற்ற உடம்பிலே பூசப்படுகின்ற திருநீறு சிவப்பொலிவைத் தருவது போல சிவனடியாாகள் அகமும் புறமும் தூய்மையானவர்கள் என்பதை

*“மாசிலாத மணிதிகழ் மேனி மேல்*
*பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்”*

எனப் பெரிய புராணம் போற்றுகின்றது.

சிவனடியார்கள் இருவினையொப்பு நிலையில் நின்று ஓட்டையும்

செம்பொன்னையும் ஒக்கவே நோக்குபவர்கள் என்பதை "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர்" எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

சிவனடியார் கழுத்திலே இருப்பது கண்டிகையாகிய உருத்திராட்சம். அவர்கள் உடலில் அணிவது கந்தை ஆடை. ஆனால் அவர்களுடைய நெஞ்சில் இருக்கும் நினைப்பு இறைபணி செய்ய வேண்டும் என்பதே ஆகும். இதனை "ஆரங்கண்டிகை ஆடையும் கந்தையே பாரம் ஈசன் பணிபல தொன்றிலர்" எனப் பெரியபுராணம் சித்தரிக்கின்றது.

சிவஞான போதத்தில் வரும் 8ம், 9ம், 10ம், 11ம் சூத்திரங்கள் முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் நால்வகை நெறிகளை உணர்த்துகின்றன. ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தருக்கு கிடைத்த நால்வகை ஞானத்தின் சிறப்பையும் சேக்கிழாரின் பின்வரும் பெரியபுராணப் பாடல் விளக்குகின்றது:

*சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அறமாற்றும் பாங்கினிலே ஓங்கிய ஞானம்*
*உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்*

நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலிலே போட்டபோது நகராதி பஞ்சாட்சரமான ஐந்தெழுத்தின் துணையோடு அவர் கரைசேர்ந்தார். கல்லே தெப்பமாக மிகுந்து அவரைக் கரையில் சேர்த்தது என்பதனை பின்வரும் பெரியபுராணப்பாடல் தெளிவாக விளக்குகின்றது:

*இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்*
*வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட*
*அருளும் மெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்*
*ஒரு கல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ.*

ஆன்மாக்களுக்கு அவை செய்த வினைகளைப் பொருத்தி வைப்பவன் இறைவனே என்பதனையும், வினைகளையும் செய்தவனையும் அதன் பயனையும் அவற்றைச் சேர்த்து வைப்பவனையும் விளக்கும் சிறப்பு சைவநெறி ஒன்றிற்கே உண்டு என்பதனையும் பின்வரும் பெரிய புராணப் பாடல் விளக்குகின்றது:

*செய்வானும் செய்வினையும் அதன் பயனும் கொடுப்பானும்*
*மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டே*
*இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றிற்கு இல்லையென*
*உய்வகையால் பொருள் சிவன் என்றருளாலே.*

அருளாளர்கள் தந்த அனுபூதி வாசகங்களாகிய பன்னிரு திருமுறைகளுக்குள்ளே சைவசித்தாந்தக் கருத்துக்கள் பரவிக் காணப்படுகின்றன. தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த தத்துவமாகிய சைவசித்தாந்தமும் தோத்திர இலக்கியமாகிய பன்னிரு திருமுறைகளும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் காட்டுகின்றன. "சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்" என்பது அப்பர் பெருமானின் வாக்கு ஆகும். "சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் வேறில்லை" என்பது தவயோகி திருமூலநாயனாரின் கருத்தும் ஆகும்.

சிவபூமியாகிய இலங்கையில் பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களையும் சைவத் தமிழ் மக்கள் தங்கள் பிரமாண நூல்களாக பெற்றிருந்தார்கள். சைவ சித்தாந்த தத்துவம் காட்டும் வாழ்க்கை நெறியையும் வழிபாட்டு நெறியையும் பின்பற்றி வந்தார்கள். நாவலர் பெருமான் பிறந்து வாழ்ந்து வழிகாட்டிய நமது சமயத்தில் இன்று பலவகையான புதுவழிபாடுகள் வந்து புகுந்து கொண்டிருக்கின்றன. சிவனையும் சிவனுடைய மூர்த்தங்களையும் சிவனிலிருந்து வேறாகாத சக்திகளையும் வணங்கி வந்த நம்மவர்களுக்கு இன்று பல கவர்ச்சிகரமான புது வடிவங்களைக் காட்டி அவற்றை வழிபடுவதனால் இலகுவான வழியில் உலகியல் இன்பங்களைப் பெற்றுவிடலாம் எனச் சிலர் வழிகாட்ட முற்படுகிறார்கள். குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக் குழியில் விழாமல் இருக்க வழிகாட்ட வேண்டிய பாரிய பொறுப்பு நாவலர் பாரம்பரியத்தைப் பேணும் அனைவரதும் கடமையாகும்.

*சிவ சிவ என்கிலர் தீவினையாளர்*
*சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்*
*சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்*
*சிவ சிவ என்னச் சிவகதிதானே.*

*யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்புத் தினமும், 19-11-2002 : நினைவுப் பேருரை*

# சித்தர்கள் கண்ட சமய நெறி

இந்து சமயத்தில் காலத்துக்குக் காலம் பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள் எனப் பலர் தோன்றி எமது சமயத்தை வளப்படுத்தினார்கள். நாயன்மார்கள், ஆழ்வார்கள், வடநாட்டுப் பக்தி நெறியாளர்கள் போன்றோர் பக்தர்களாகவும், சங்கரர், இராமானுஜர், மத்துவர், மெய்கண்டார் போன்றோர் தத்துவ ஞானிகளாகவும், பதினெண் சித்தர்கள் நவநாத சித்தர்கள், ஈழத்துச் சித்தர்கள் போன்றோர் சித்த புருஷர்களாகவும் திகழ்ந்தார்கள். சித்த புருஷர்கள் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள். கடவுளைக் காண முயல் பவர்கள் பக்தர்கள் என்றும், கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும் சித்தர்களுக்கு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. 'எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி, ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்' எனச் சட்டை முனிச் சித்தர் ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்குகிறார். வாசனை என்பது கர்மவினை ஆகும். பிரபஞ்ச வாழ்வின் இரகசியத்தை சித்தர்கள் அறிந்திருந்தார்கள். சித்தர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் உலகாயதராக வாழமாட்டார்கள். இவர்கள் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து வருவார்கள்.

சித்து என்னும் சொல் தெளிந்த ஞானத்தைக் குறிக்கும். ஞானம் பெற்றவர்களைச் சித்தர் என்று கூறுவதும் உண்டு. சித்தி பெற்றவர்கைளச் சிவனோடு ஒத்தவர்களாய்க் கருதி மக்கள் மதித்துப் போற்றுகின்றனர். 'சித்தன் போக்கு சிவன் போக்கு' என்பது தமிழ் மக்களிடம் நிலவி வரும் பழமொழி ஆகும். சித்தத்தைச் சிவன் பால் வைத்துச் சிந்தனையில் மூழ்க மூழ்கச் சித்த விகாரம் ஒடுங்கும். சித்த விகாரம் ஒடுங்க ஆத்ம சக்தி

அகத்திலே பீறிட்டு எழும். ஆத்ம சக்தி முழுமை பெறுகின்றபோது சித்துக்கள் அனைத்தும் கைகூடும். இத்தகைய செயற்கரிய செயல்களைச் செய்யும் சித்தர்களை 'வித்தகச் சித்தர் காணம்' எனத் தாயுமானவர் குறிப்பிடுகிறார்.

சித்தர்கள் மரணத்தை வென்று நீண்ட நாள் வாழும் கலையை நன்கு அறிந்திருந்தனர். உடல் நலத்தோடு இளமைப் பொலிவோடு வாழ அற்புதமான மருந்துகளைத் தயாரித்தனர். சாவா மருந்தாகப் பயன்படும் பச்சிலை மூலிகைகளை அறிந்து பயன்படுத்தினர். பிணி தீர்க்கும் மருந்துகளைச் செய்தனர்.

சித்த புருஷர்களுக்கு சமாதிக் கோயில் அமைத்து வழிபடும் மரபு நம்மவர்களிடம் உண்டு. இவர்களுடைய சமாதி களைத் தொழுதால் தீராத நோய்கள் தீரும், பொல்லா வினைகள் நீங்கும், கருதியவை கைகூடும், நல்லவை நடக்கும் என மக்கள் நம்புகின்றனர்.

சித்தர்கள் மக்களின் மன இருளைப் போக்கி ஞான ஒளி பரப்பக்கூடிய அற்புதமான பாடல்களைப் பாடியுள்ளார்கள். உடல் நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மருந்து செய்யும் முறைகள், கோள்களின் நிலை, காலமாறுபாடு, சுடர்களின் இயக்கம், ஆகியவற்றை விளக்கி சோதிட நூல்கள் எழுதினார்கள். நிறைமொழி மாந்தர்களாக விளங்கிய அவர்களின் மறைமொழிகள் மந்திரம் எனப் போற்றப்பட்டன. மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும் கூர்மையாக்கவும் வெளிப்படுத்தவும் கூடிய வழிகளைக் காட்டினார்கள். ஆத்மசக்தி, யோகநிலை ஆகியவற்றை விளக்கிப் பாடல்களைப் பாடினார்கள்.

சித்தர்கள் யாவரும் மனித நேயம் மிக்கவர்கள்; சாதி சமய வேறுபாடுகள் அற்றவர்கள்; சமரச சன்மார்க்கத்தைப் போற்றுபவர்கள்; போலிச் சடங்குகளையும் பொருளற்ற செயல்களையும், மூட நம்பிக்கைகளையும் கண்டிப்பவர்கள்.

மனித வாழ்வு மிக உயர்ந்தது என்பது சித்தர்களின் கருத்தாகும். உடம்பைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று தங்கள் பாடல்களில் வற்புறுத்துகிறார்கள். உத்தமனாகிய இறைவன் வீற்றிருக்கும் கோயில் உடம்பு. ஆகையால் இதனை அலட்சியம் செய்யக்கூடாது. உடலை சுடுகாடாக மாற்றக்கூடாது. புலாலைப் புசிப்பதையும் மதுவை அருந்துவதையும் தவிர்த்து இறைவன் வீற்றிருக்கும் ஆலயங்களைப் பாதுகாப்பதுபோல உடலைப் பாதுகாக்க வேண்டும். இதனைத் தவயோகி திருமூல நாயனாரின்

பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது:

*உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்*
*உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்*
*உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று*
*உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.*

மனம் தூய்மை இன்றிச் செய்யும் தெய்வ வழிபாடு பயன்தராது. பொய், களவு, கொலை, கோபம், கள், காமம் ஆகியவை மனித இனத்தை நாசமாக்கி வீழ்த்திவிடும். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்ற வாழ்க்கை பயனற்றது. எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த இறைவனை மனம் வாக்கு காயம் ஆகியவற்றால் திரிகரண சுத்தியுடன் போற்ற வேண்டும். அன்பு இரக்கம், தொண்டு ஆகியவற்றைக் கொண்டு வாழ்பவர்களின் வாழ்வே சிவவாழ்வு, தவவாழ்வு என்பதைச் சித்தர்கள் மக்களுக்கு உணர்த்தி வைத்தார்கள். மனம் அடங்கினால் முத்தியும், சினம் அடங்கினால் சித்தியும் கிடைக்கும் என்பதை இடைக்காட்டுச் சித்தர் பின்வரும் பாடலில் குறிப்பிடுகிறார்:

மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே - முத்தி
வாய்த்ததென்று எண்ணடா தாண்டவக்கோனே!
சினமென்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்கோனே - யாவும்
சித்தியென்று நினையடா தாண்டவக்கோனே!

அண்ட சராசரமெல்லாம் வீற்றிருக்கின்ற பரம்பொருளை இந்தப் பிண்டமாகிய உடம்பிலே ஞானிகள் கண்டார்கள். இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயில் என்றே சித்தர்கள் மானுட உடலைக் கூறுகிறார்கள். இத்தகைய அரிய உடலைச் சிலர் காமக் களியாட்டங்களில் ஈடுபடுத்திப் பாழாக்கி விடுகின்றார்கள். தாய் தனது பிள்ளையைப் பத்து மாதம் கருவிலே சுமந்து பெற்று எடுக்கிறாள். இறைவன் தாயின் கர்ப்பத்திலே வளரும் சிசுவிற்கு உயிரைக் கொடுத்து இப்பூமிக்கு அனுப்பி விடுகிறான். பிள்ளை வளர்ந்து வரும் காலத்தில் ஒவ்வொரு பருவத்திலும் வெவ்வேறு விதமான மயக்கங்களுக்கு உட்பட்டு தான் எடுத்த அரிய மானுடப் பிறப்பைச் சிதைத்தும் சீரழித்தும் வீடுகிறான். இதனைக் கடுவெளிச் சித்தர் பின்வருமாறு விளக்குகிறார்:

*நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்*
*நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்*
*கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்*
*கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.*

மண் ஆசை, பெண்ஆசை, பொன் ஆசை ஆகிய ஆசைகளின் ஊடாக வாழ்நாளை வீழ்நாளாக்கும் மனிதர்களுக்கு பட்டினத்தார் பின்வருமாறு அறிவுரை வழங்குகின்றார்:

மண் பெண் பொன்னாசை மயக்கத்திலே விழுந்து
கண்கெட்ட மாடது போல் கலங்கினேன் பூரணமே.

மனம் ஒரு குரங்கு. ஒவ்வொரு மனிதனின் வாழ்விற்கும் தாழ்விற்கும் அவனுடைய மனத்திலே தோன்றும் எண்ணமே மூலவித்து ஆகும். இதனால் தான் நல்லவை எண்ணல் வேண்டும் என்று மகாகவி பாரதியும் தனது பாடலில் குறிப்பிடுகிறார். மனதுக்கு உபதேசம் செய்யும் பாடல்கள் பலவற்றை நமது அருளாளர்களின் தோத்திர நூல்களில் காணலாம். 'கெடுவாய் மனனே கதிர்கேள் கரவாது இடுவாய்' என அருணகிரியார் முருக மந்திரமாகிய கந்தரநுபூதியிலும் 'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு ஆழ்கின்றாய்' என மணிவாசகர் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்திலும், 'துயரறு சுடரடி தொழுதெழு மனனே' என நம்மாழ்வார் தனது திருவாய் மொழிப் பாடலிலும் மனதிற்கு உபதேசம் செய்வதைக் காணலாம். பட்டினத்தார் மனதிற்கு உபதேசம் செய்த பின்வரும் பாடல் உலகில் வாழும் சகல மக்களுக்கும் இனமொழி மத பேதங்களுக்கு அப்பால் நின்று கூறும் ஆப்த வாக்கியமாகக் காணப்படுகிறது:

*ஒன்று என்று இரு தெய்வம் உண்டு என்று இரு*
*உயர் செல்வம் எல்லாம்*
*அன்று என்று இரு பசித்தோர் முகம் பார் நல்லறமும் நட்பும்*
*நன்று என்று இரு நடு நீங்காமலே நமக்கு இட்ட படி*
*என்று என்று இரு! மனமே உனக்கு உபதேசம் இதே.*

இலங்கையைச் சிவபூமி எனத் திருமூல நாயனார் அழைத்தார். சிவபூமியாகிய இலங்கையில் யாழ்ப்பாணம் முருகப் பெருமானுடைய அருளாட்சிக்கு உட்பட்ட பிரதேசம் ஆகும்.

அலங்காரக் கந்தனாக நல்லூர் முருகன் ஆலயமும் அபிஷேகக் கந்தனாக மாவிட்டபுரம் முருகன் ஆலயமும் அன்னதானக் கந்தனாக செல்வச் சந்நிதி முருகன் ஆலயமும் காணப்படுகின்றன.

இந்த ஞானபூமியிலே பல சித்த புருஷர்கள் நடமாடித் திரிந்தார்கள். ஈழத்துச் சித்தர்களில் மூல புருஷராக இருந்த கடையிற் சுவாமிகளின் சீடர் செல்லப்பா சுவாமிகள் நல்லூர்த் தேரடியைத் தனது ஞான அனுபவத்திற்கு உரிய இடமாகத் தேர்ந்து எடுத்து வாழ்ந்து வந்தார். செல்லப்பா சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு அருள் செய்யப்பட்ட ஞானச் செல்வரே தவத்திரு யோகர் சுவாமிகள் ஆவார். பேசும் தெய்வமாக நின்று பேரருள் செய்கின்ற நல்லைக் கந்தனுடைய திருவருளும் செல்லப்பா சுவாமிகளின் குருவருளும் ஒருங்கே கிடைக்கப் பெற்ற யோகர் சுவாமிகள் நல்லூரான் மீது பாடிய பாடல்கள் முருகப் பெருமானின் திருவருளை அனைவருக்கும் உணர வைக்கும் ஞானப் பாடல்களாகக் காணப்படுகின்றன.

உலகியல் வாழ்வில் நாம் படும் துன்பங்கள் நீங்க வேண்டுமானால் செல்லப்பா சுவாமிகள் தவம் செய்த நல்லூரை நாம் வலம் வந்து வணங்க வேண்டும் என்பதை யோகர் சுவாமிகளின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம் அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு.

நமது சொந்த வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் நீங்குவதற்கு மாத்திரம் அல்லாது நமது நாட்டைப் பீடித்திருக்கும் யுத்த மேகங்கள் நீங்குவதற்கும் சாந்தியும் சமாதானமும் நமது நாட்டில் ஏற்படுவதற்கும் நல்லூரானை வணங்கி உள்ளம் உருகிப் பாட வேண்டும் என்பதை

*நல்லூரானைக் கும்பிட்டு நீ பாடு - அதனாலே*
*நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்*

என யோகர் சுவாமிகள் தனது நற்சிந்தனைப் பாடலில் குறிப்பிடுகிறார்.

ஊன் உருகினால்தான் உள்ளத்தில் ஆன்ம ஒளி கிடைக்கும். சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கும்.

*யானும் பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்*
*ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே*

என்றே மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. கல்லுக்கூட உருகினாலும் கல்நெஞ்சம் உருகாது என்பதைத் தாயுமான சுவாமிகள் கல்லேனும் ஐயாற ஒருகாலத்தில் உருகும்- என் கல்நெஞ்சம் உருகவில்லையெ எனப் பாடுகிறார். நல்லைக் கந்தனின் திருவருள் கிடைத்து விட்டால் கல்நெஞ்சும் கசிந்துருகும் என்பதை

*நல்லைப் பதிக்கரசே நல்லைப் பதிக்கரசே*
*நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடா*
*கல்லை நிகர்த்த மனங் கரையவருள் தந்திடடா*
*எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி வைத்திடடா.*

என்று நற்சிந்தனைப் பாடலில் யோகர் சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

நல்லூரிலே வீற்றிருந்து ஞான ஆட்சிபுரியும் நல்லைக் கந்தனின் திருவருளை தவத்திரு யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தனைப் பாடலின் ஊடாக நமக்கு எல்லாம் உணர்த்தி வைத்துள்ளார்.

- நல்லைக் குமரன் மலர் 2003

# திருமந்திரத்தில் சைவம்

இந்து சமயத்தின் அறுவகைச் சமயப் பிரிவுகளில் சைவநெறி முக்கிய இடம்பெறுகிறது. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் வாழும் இந்துக்களிற் பெரும்பான்மையோர் சைவர்களாகவே காணப்படுகிறார்கள். சைவர்கள் அனைவரும் சிவனையே முழுமுதற் கடவுளாக வணங்குகிறார்கள். "தென்நாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என மணிவார்த்தையாகிய திருவாசகம் கூறுகிறது. அருளாளர்கள் தந்த அனுபூதி வாசகங்களாகிய பன்னிரு திருமுறைகளும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் குறிப்பிடுகின்றன. இவற்றில் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் சிவவழிபாட்டின் சிறப்பினையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்திக் கூறுகிறது. "சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்பது தவயோகி திருமூலநாயனாரின் வாக்காகும்.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட தத்துவ நெறி சைவசித்தாந்தம் ஆகும். சைவசித்தாந்தம், இறைவன் வெளிப்படும் இடங்களாக குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறது. மூவகை ஆன்மாக்களில் சகலருக்கும் இறைவன் குருவடிவாக வந்து ஆட்கொள்வான் என்றும் அவ்வாறு அருளுவதை சாதார தீட்சை என்றும் சாத்திர நூல்கள் கூறுகின்றன. ஞானமே உருவாக உடையவன் இறைவன். அவனை நேரில் நாம் காண்பது இயலாத காரியம். ஞானப்பிழம்பாய் இருக்கின்ற இறைனது திருவருளை நமக்குப் பெற்றுத்தருபவர்கள் குருமகான்கள்.

அறிவுக்கு அப்பாற்பட்ட தத்துவங்களை விளக்குதற்கு அறிவுக்குப் புலனாகியுள்ள உண்மைகளைத் திருமூலர் காட்டுவார். ஆன்மாக்களின் நிலைக்கு ஏற்ப இறைவனே குருவாக வந்து ஞானத்தை வழங்குகிறான் என்பது சித்தாந்திகள் கொள்கை ஆகும். குருவைச் சூரியனுக்கும், குருவருளைச் சூரியக் கதிருக்கும், ஆன்மாவைச் சூரிய காந்தக் கல்லுக்கும், மும்மல அழுக்கைப் பஞ்சுக்கும் உவமையாகக் காட்டுகிறார் திருமூலர். சூரிய காந்தக் கல்லும் பஞ்சும் ஒன்றாகப் பொதிந்து வைத்தது போல இந்த உடம்புக்குள் ஆன்மாவைச் சுற்றி மும்மல அழுக்குகள் சூழ்ந்து நிற்கின்றன. சூரியகாந்தக் கல்லை ஞான குருவாகிய இறைவனை நோக்கி நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்தினால் பஞ்சு எரிவது போல ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கிவிடும்.

*சூரிய காந்தமும் சூழ் பஞ்சும் போலவே*
*சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா*
*சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்*
*ஆரியன் தோற்ற முன் அற்ற மலங்களே.*

ஹஅஞ்ஞானமாகிய இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கிற துலங்கும் ஆற்றல் வாய்ந்த கருவியால் திறக்கவல்ல திறமையாளன் எவனோ அவனை ஞானகுருவென இந்துக்களின் ஞானக் களஞ்சியமாகிய உபநிடதங்கள் கூறுகின்றன. சூரியனைக் கண்டு தாமரை மலர்வது போல ஆசாரிய சம்பந்தம் ஒருவனுக்குக் கிடைத்தால்தான் அவனிடம் அகத்திலே ஞான மலர்ச்சி ஏற்படும் எனச் சங்கரர் பஜகோவிந்தத்தில் குறிப்பிடுகிறார். ஆனால் பிரபஞ்ச மயக்கத்தில் வாழ்கின்ற நாம், நமது அக இருளாகிய அஞ்ஞான இருளைப் போக்கக் கூடியவரைக் குருவாகக் கொள்கின்றோம் இல்லை.

குருடனுக்கு குருடன் பாதை காட்டுவது போல நாமும் நமக்குத் தவறான வழிகாட்டுபவர்களையே குருவாகக் கொள்கின்றோம். குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடிக் குழியில் விழுவார்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது:

*குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்*
*குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்*
*குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்*
*குருடும் குருடும் குழிவிழு மாறே.*

தக்க குருவை அடைந்து அவரை அடி பணிந்து அவரின் நாமத்தை உச்சரித்து அவர் கூறும் வார்த்தைகளைக் கேட்டு அதன் வழிநடப்பவர்களுக்கு அறிவிலே தெளிவு ஏற்பட்டு ஞான மலர்ச்சி கிடைக்கும் என்பதை,

*தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.*

எனத் திருமந்திரம் கூறுகிறது.

சிவனுடைய அருவுருவத் திருமேனி சிவலிங்க வடிவம் ஆகும். ஐந்தொழில்களில் அருளலைக் குறிக்கும் சதாசிவ மூர்த்தமாகிய சிவலிங்க வடிவம், சக்தி சிவத்தினுள் அடங்கிச் செயல்புரியும் தத்துவத்தைஎடுத்து விளக்குகிறது. "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்" எனப் பெரியபுராணம் சிவலிங்க தத்துவத்தை எடுத்து விளக்குகிறது.

அண்டசராசரமெல்லாம் வியாபித்திருக்கும் இறைவனை இந்தப் பிண்டமாகிய உடலிலே ஞானிகள் கண்டார்கள். இறைவன் வீற்றிருக்கும் இவ்வுடம்பே சிவலிங்க வடிவமாகவும், சிதம்பர இரகசியமாகவும், சதாசிவ மூர்த்தமாகவும், பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் நடராஜ வடிவமாகவும் காணப்படுகிறது என்பதனை,

*மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்*
*மானுட ராக்கை வடிவு சிதம்பரம்*
*மானுட ராக்கை வடிவு சதாசிவம்*
*மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே*

எனத் திருமந்திரம் விளக்குகிறது. ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கி ஆன்மா இறைவனை அடைவதற்கு சிவாலய வழிபாடும் சிவனடியார் வழிபாடும் துணை செய்யும் என்பதை சிவஞான போதத்தின் பன்னிரெண்டாம் சூத்திரம் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறது.

*செம்மலர் நோன்றாள் சேரலொட்டா*
*அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ*
*மாலற நேயம் மலிந்தவர் வேடமும்*
*ஆலயந்தானும் அரனெனத் தொழுமே*

சிவனடியார்களோடு இணைந்து இருந்தால் சிவனை மறவாச் சிந்தை ஏற்படும் என்பதால் 'அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்' என மணிவாசகரும் தனது தெய்வ வாசமாகிய திருவாசகத்தில் வேண்டுகிறார். சிவனடியார்களை வழிபடுவது சிவனை வழிபடுவதற்குச் சமனாகும்.

இறைவனுடைய அருளிலும் பார்க்க இறையருளைத் தம்முள்ளே இழுத்து வைத்திருக்கும் ஞானிகளது அருள் உயர்வானது ஆகும். சிற்ப சித்திரங்கள் அமைந்த கோயிலிலே உள்ள மூர்த்திக்கு ஏதேனும் நிவேதனம் இட்டால் அது அப்படியே அடியார்களுக்குப் போய்ச் சேராது. ஆனால் சிவனடியார்களுக்கு ஏதேனும் சமர்ப்பித்தால் அவர்களுக்குப் பயன்படுவதோடு அது அப்படியே இறைவனுக்கும் போய்ச் சேர்கிறது. சற்பாத்திரம் பார்த்துச் செய்யும் ஈகையும் வழிபாடே எனத் திருமூலர் கூறுகிறார்.

*படமாடக் கோயில் பகவர்க்கொன் றீயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா*
*நடமாடும் கோயில் நம்பர்க்கொன் றீயில்*
*படமாடக் கோயில் பகவற்கது ஆமே.*

எனத் திருமந்திரம் குறிப்பிடுகின்றது.

## திருமூலர் காட்டும் சிவவழிபாடு

தவயோகி திருமூலநாயனார் சிவப் பரம்பொருளையே முழுமுதற் கடவுளாகக் காட்டுகிறார். இறைவன் பஞ்ச பூதங்களிலும் வியாபித்து நிற்கிறான். இந்த உண்மையை வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி என மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. ஐம்பூதங்களையும் உடலாகக் கொண்டு உறையும் இறைவன், பல ஊழிக் காலமாக இடபத்தை வாகனமாகக் கொண்டு சிவபெருமானாகப் பக்தர்களுக்குக் காட்சி தருகிறான். 'எண்ணுவார் நெஞ்சில் நன்னுவார் ஈசன்' என்ற வாக்கிற்கு அமையத் தன்னை நாள்தோறும் நினைப்பவர்களின் உள்ளத்தில் வந்து அமர்ந்து கொள்வான். இதனைப் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

*கடலுடையான் மலையான் ஐந்து பூதத்து*
*உடலுடையான் பல ஊழிதோ றூழி*

*அடல் விடை ஏறும் அமரர்கள் நாதன்*
*இடம் உடையார் நெஞ்சத்தில் இருந்தானே.*

சிவாலய வழிபாடு ஆன்ம விடுதலைக்குத் துணைசெய்யும். சிவபெருமான் வீற்றிருந்து அருள்புரியும் சிவாலயங்களைத் தேடித் திரிந்து வணங்குதல் வேண்டும். சிவாலயங்களுக்குச் சென்று இறைவனைப் பாடிப் பரவிப் பணிந்து வணங்கினால் இறைவன் நமது அகத்திலே இருந்து ஞான ஆட்சி புரிவான் என்பதை,

*நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்*
*தேடித் திரிந்து சிவபெருமான் என்று*
*பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்*
*கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.*

எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

எல்லா இடமும் வியாபித்திருக்கின்ற பரம்பொருளாகிய இறைவனைப் பக்தர்கள் தன் உள்ளத்தினுள்ளே சிறைப்படுத்திக் கொள்வார்கள். பக்தர்களின் பக்தி வலையில் இறைவன் அகப்பட்டே தீருவான் என்பதைப் "பக்தி வலையிற் படுவோன் காண்க" எனத் திருவாசகம் குறிப்பிடுகிறது. தேவர் பரிவாரங்கள் சூழ்ந்துவர வந்த சிவபிரான், பிறவிக்குக் காரணமாகிய என்னுடைய பாசவினையை அறவே அகற்றினான். கருணையோடு அருள்செய்து ஆட்கொள்கின்ற பெருமையும், வியாபகமும் கொண்ட சர்வேஸ்வரன் கீழே இறங்கி வந்து அடியேனுடைய உள்ளமாகிய சிற்றில்லத்தில் அகப்பட்டுக் கொண்டான்' என அடியவர்க்கு எளியனாகிய சிவனின் பெருங்கருணையைப் பின்வரும் திருமந்திரப் பாடலில் திருமூலர் கூறுகிறார்.

*சிவன்வந்து தேவர் குழாமுடன் கூட*
*வலம்வந்திட நின்ற பாசம் அறுத்திட்டு*
*அவன் எந்தை ஆண்டருள் ஆதிப்பெருமான்*
*அவன் வந்தென் உள்ளே அகப்பட்டவாறே.*

இறைவனோடு கூடி அனுபவித்த இன்பத்திலே, அந்தப் பக்திப் பரவசத்திலே உறவு மேலிட்டுப் பாடிய பாடல் இதுவாகும்.

கன்ம வினைகளே பிறவிக்கு வித்தாகக் காணப்படுகிறது. பிறவி நோய் நீங்குவதற்கு இறைவனுடைய திருவருளைப் பெற

வேண்டும். 'நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்' எனத் தெய்வ வாசகமாகிய திருவாசகம் குறிப்பிடுவதுபோல தீவினை பிடித்தவர்கள் தங்கள் நாவால் சிவநாமத்தை உச்சரிக்கிறார்கள் இல்லை. சிவநாமத்தை உச்சரித்தால் தீவினைகள் அனைத்தும் நீங்கிவிடும். சிவநாமத்தை உச்சரிப்பவர்கள் தெய்வீக வடிவத்தைப் பெறுவார்கள். சிவ சிவ என்று கூறினால் ஆன்மா சிவத்தோடு இணைந்து கொள்ளும் அத்துவித தன்மையைப் பெற்றுவிடும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் எடுத்துக் கூறுகிறது.

*சிவ சிவ என்கிலர் தீவினையாளர்*
*சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்*
*சிவ சிவ என்றிடத் தேவருமாவர்*
*சிவ சிவ என்னச் சிவகதி தானே.*

இறைப் பித்துப் பிடித்தவர்களின் தவிப்பு நிலையைச் சித்திரிக்கும் பாடல்களை அன்பு வாசகமாக, அருள் வாசகமாகத் திகழும் தெய்வ வாசகமாகிய திருவாசகத்தில் பரக்கக் காணலாம். "தரிக்கிலேன் காய வாழ்க்கை" என்றும் "சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே" என்றும் "வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்றும் காணப்டுகின்ற திருவாசக வரிகள் மணிவாசகர் இறைவனை அடைய எடுத்த முயற்சியில் ஏற்பட்ட தவிப்பு நிலையைத் தெளிவாக விளக்குகின்றன. இவ்வாறு தன்னை வருத்தி தன் உள்ளத்தைப் பண்படுத்தி சீவன் முழுவதும் சிவமணம் பூத்த நிலையிலே மணிவாசகனார் பாடிய பாடல்களைத் திருவாசகத்தின் இறுதிப் பகுதியிலே வரும் திருப்படை ஆட்சி, ஆனந்த மாலை, அச்சோப்பதிகம் ஆகிய பாடல்களிலே காணலாம். இதேபோல் இறைவனுடைய திருவருள் கிடைத்த பாக்கியத்தினால் இனிமேல் இந்த உலகிற் பிறந்து இன்பதுன்பம் அனுபவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் தானும் இறைவனும் ஒன்றாகி விட்டோம் என்றும் பூரிப்பு நிலையில் நின்று தவயோகி திருமூலநாயனார் பாடுவதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது:

*ஒழிந்தேன் பிற உறவென்னும் பாசம்*
*கழிந்தேன்கடவுளும் நானும் ஒன்றானேன்*
*அழிந்தாங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்*
*செழுஞ்சார்புடைய சிவனைக் கண்டேனே*

## சிவசக்தி வடிவம்

சிவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற்காக திருவருட் சக்தியோடு பிரிவின்றிக் கலந்து நிற்கிறார் என்றே சைவசமயத் திருநூல்கள் கூறுகின்றன.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" என்றே சிவஞானசித்தியார் கூறுகிறது. அருட்சக்தியாகிய பராசக்தியைப் பல வடிவங்களிலே சைவர்கள் வழிபட்டு வருகிறார்கள். சிவனோடு பிரிவின்றிக் கலந்து நின்று திருவருளை வழங்கும் பராசக்தியைப் பலவழிபாட்டு நிலைகளிலே கண்டு ஊனும் உள்ளமும் உருகித் திருமூலர் பாடுகிறார்.

பராசக்தியின் அருளாற்றலை அறியாத தேவர்கள் இல்லை. சக்தியின் துணையின்றி எந்தத் தவமும் ஆகாது என்பது திருமூலரின் வாக்கு ஆகும். பராசக்தியின் ஆற்றலைக் கொண்டே ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. ஆன்மாக்களின் உயர் இலட்சியமான முத்தியை அடைவதற்கு சக்தியின் துணை அவசியமாகும். சக்தியின் அருட் சிறப்பினைப் பின்வரும் திருமந்திரம் தெளிவாக விளக்குகிறது.

*அவளை அறியா அமரரும் இல்லை*
*அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை*
*அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை*
*அவளன்றி ஊர்புகும் ஆறுஅறியேனே.*

பராசக்தியின் பல்வேறு கோலங்களிலே ஒரு கோலமாக இருக்கின்ற கலைமகளின் திருக்கோலத்தைத் தவமுனிவர் தனது தமிழ் மந்திரத்திலே அழகாகச் சித்திரித்துள்ளார். 'தூய்மையான வெள்ளை ஆடையும், வெண்ணிறத்து அணி அலங்காரங்களும் சூடப்பெற்று வெண்தாமரை மலரிலே வீற்றிருக்கும் சரஸ்வதி, தன்னுடைய திருவாயால் வேதமந்திரங்களாக இருக்கும் திருமுறைகளைப் பாடிக்கொண்டு இருக்கிறாள். அந்தத் தேவியின் பாதங்களை என்னுடைய தலைசூட்டிக்கொள்ளும். என் வாய்பாடும் பணியே பணியாகக் கொண்டு தோத்திரங்களைப் பாடும்'

கருணையின் வடிவமாகத் திகழும் கல்வித்தாயாம் கலைமகளின் வடிவத்தைக் குறிக்கும் திருமந்திரப் பாடல் இதுவாகும்:

**ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி**
**வேடம் படிகம் விரும்பு வெண்தாமரை**
**பாடும் திருமுறை பார்ப்பனி பாதங்கள்**
**சூடும் என் சென்னி வாய் தோத்திரம் சொல்லுமே.**

## திருமந்திரம் காட்டும் வழிபாட்டு நெறி

சிவனே நந்தியெம்பெருமானாக வந்து திருமூலருக்கு உபதேசம் செய்தார். தமிழகத்தில் ஒரு ஞான பரம்பரையை உருவாக்கிய பெருமை திருமூலருக்கே உண்டு. "மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே" எனத் தாயுமான சுவாமிகள், இதனைக் குறிப்பிடுகிறார். தில்லையில் பதஞ்சலி முனிவருடன் இறைவனது திருக்கூத்தைக் கண்டு மகிழ்ந்த திருமூலநாயனார் ஆன்மா இறைவனை அடைவதற்கான வழிகளாகிய சைவ நாற்பாத நெறியினை விரிவாக விளக்குகிறார்.

ஆலய வழிபாடு, சிவாலயத் தொண்டு செய்யும் சரியை வழியில் நிற்போர் பக்தர்கள் ஆவார்கள். சிவசாதனங்களை அணிந்து சிவ வேடம் தாங்கிச் சிவபூசை செய்து வழிபடுவோர் கிரியை நெறியில் நிற்பார்கள். இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோக உறுப்புக்களை உணர்ந்து அவ்வழியில் நிற்போர் யோகியர் அவர். சீவன் முத்தர்களாகிய சித்தர்கள் சிவத்தைத் தம்மிற் கண்டு அதனுடன் ஒன்றி நீற்பார்கள்.

*பத்தர் சரிதை பாடுவோர் கிரியையார்*
*அத்தகு தொண்டர் அருள் வேடத்து ஆடுவோர்*
*சுத்த இயமாதி சாதகர் தூயோகர்*
*சித்தர் சிவஞானம் சென்றெய்துவோர்களே.*

சரியை நெறி தாசமார்க்கம் என்றும் அடிமை நெறி என்றும்அழைக்கப்படுகிறது. அடியார்க்கு எளியனாய் ஒழுகுதல், திருக்கோயில்களில் விளக்கிடுதல், திருநந்தவனத்தில் மலர் கொய்தல், மெழுகுதல், திருஅலகிடுதல், இறைவன் புகழை

வாயினாற் பாடி வாழ்த்துதல், திருக்கோயில்களில் உள்ள அசையா மணிபோன்றவற்றை அடித்தல், இறைவனுக்கு வேண்டிய அபிஷேகத் திரவியங்களைக் கொணர்தல் ஆகிய திருத்தொண்டுகள் யாவும் சரியை நெறி நிற்போர் செய்ய வேண்யவை என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

*எளியனல் தீபம் இடம் மலர் கொய்தல்*
*அளிதின் மெழுகல் அது தூர்த்தல் வாழ்த்தல்*
*பளி மணிபற்றல் பன்மஞ்சன மாதி*
*தளி தொழில் செய்வதுதான் தாச மார்க்கமே.*

ஆத்மார்த்த பூசையாகிய சிவலிங்க பூசை செய்தல், இறைவனது புகழைச் சொல்லி வணங்குதல், திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தல், குற்றமற்ற தவ ஒழுக்கங்களை மேற்கொள்ளல், உண்மை பேசுதல், காமம் முதலிய அறுபகைகளையும் நீக்குதல், அன்போடு அன்ன பாவனை செய்தல் ஆகிய அனைத்தும் கிரியை அன்ன பாவனை செய்தல் ஆகிய அனைத்தும் கிரியை நெறியாகிய சற்புத்திர மார்க்கத்திற்கு உரியனவாகும்.

*பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்*
*ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக் கின்மை*
*நேசித்திட்டு அன்னமும் நீ சுத்தி செய்தல் மற்று*
*ஆசற்ற சற்புத்திர மார்க்கம் ஆகுமே.*

மலரின் கண் மணம் பொருந்தியமைவது போல யோக நெறி நிற்போரின் சீவன் முழுவதும் சிவமணம் கலந்திருக்கும் என்பதனை,

*"பூவினிற் கந்தம் பொருந்தியவாறு போல்*
*சீவனுக்குள்ளே சிவ மணம் பூத்தது"*

எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. அட்டாங்க யோகத்தின் இறுதி நிலை சமாதிநிலையாகும். சமாதி நிலையில் தியானிப்போன், தியானம், தியானிக்கப்படும் பொருள் என்ற வேறுபாடுகள் நீங்கி விடும். தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாக மாறி விடுவான் என்பதை" தியானத் யாத்துரு தேயரூபா" என லலிதா சகஸ்ரநாமமும் குறிப்பிடுகிறது. யோக நெறியில் நின்று சமாதி

கூடும் யோகியின் உள்ளத்திலே முழு உலகமும் அடங்கிவிடும். சமாதியிலே சிவனது அருவத் திருமேனியைத்தியானிக்க அச்சிவம் சுடர்விடும் பேரொளி மயமாய் விளங்கும். யோக சமாதி கூடுவோருக்கு அட்டமா சித்திகளும் கைவரும். இவர்கள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்த சித்த புருஷர்களாகத் திகழ் வார்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

*யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்*
*யோகச் சமாதியின் உள்ளே உளர் ஒளி*
*யோகச் சமாதியின் உள்ளே உள சக்தி*
*யோகச் சமாதி உகந்தவர் சித்தரே.*

ஞான சாதனை செய்யும்போது பொய்யறிவாகிய அஞ்ஞானம் ஆதவனைக் கண்ட பனிபோல அகன்று விடும். ஆன்மா மெய்யறிவு பெற்று நிற்கும் நிலையே சிவத்தோடு சேர்ந்திருக்கும் நிலையாகும். சிவமாம் தன்மை பெற்ற ஆன்மா சிவத்தை அன்றிப் பிறிதொன்றையும் காணாது.

அது தன்னையும் சித்தாகிய சிவமாகவே காணும். ஆன்மா சிவத்தோடு கலந்து அனுபவிக்கும் இன்பமே பேரின்பம் ஆகும். இந்தக் கலப்பு நிலையே அத்துவித முத்தி என்றுஅழைக்கப்படும். இதனையே சாயுச்சிய முத்தி என்றும் பரமுத்தி என்றும் சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. ஞானத்தைவிட மேலான மார்க்கம் இல்லை. வேறு எதுவும் முத்திக்குக் கொண்டு செல்லாது. உண்மையான அறிவாகிய ஞானத்தில் திளைத்தவர்களே சிறந்தவர்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் எடுத்து விளக்குகின்றது:

*ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை*
*ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று*
*ஞானத்தின் மிக்கவை நல் முக்தி நல்காவாம்*
*ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே*

## சிவாலய வழிபாடு

இல்லறத்தானுக்குரிய பஞ்சமகா யக்ஞங்களில் தேவயக்ஞமும் ஒன்று என்றே இந்து தர்ம சாஸ்திரங்கள்

கூறுகின்றன. இறைவனுடைய சந்நிதானத்தில் இடம்பெறும் அன்றாடப் பூசைகளும் வருடாந்த விழாக்கழும் ஒழுங்காக நடைபெறாவிட்டால் வானம் வறண்டு விடும். பூமியில் மழை பெய்யாது. தானிய விளைச்சல்கள் எதுவும் ஏற்படாது. இதனைச்,

சிறப்பொடு பூசனை செய்யாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

எனத் தமிழ்மறையாகிய திருக்குறள் விளக்குகிறது. சிவாலயங்களில் நித்திய நைமித்தியக் கிரியைகளுக்கு முட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டிற்கும், மக்களுக்கும் பல தீமைகள் ஏற்படும். அரசனுக்குத் தீங்குகள் ஏற்படுவதோடு மழைவளமும் குறையத் திருட்டுக்களும் நாட்டில் அதிகரிக்கும் எனத் தனது குருநாதராகிய திருநந்திதேவர் தனக்கு எடுத்துரைத்தார் என்கிறார் திருமூலர்.

*முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்*
*மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்*
*கன்னங் களவு மிகுந்திடும் காசினி*
*என்னரு நந்தி எடுத்துரைத்தானே.*

## திருநீறு

புறச் சிவசின்னங்களாகத் திருநீறும் உருத்திராக்கமும் போற்றப்படுகின்றன. “நீறில்லா நெற்றி பாழ்” என்பது ஔவைப் பாட்டியின் வாக்கு ஆகும். பாண்டிய அரசனின் வெப்பு நோயை நீக்கியதன் மூலம் சிவசின்னங்களில் ஒன்றாகிய திருநீற்றின் பெருமையை திருஞானசம்பந்தர் உலகறியச் செய்தார். சைவர்களாகிய நமக்குத் திருநீறும் கவசம்போல இருக்கிறது என்றும், திருநீற்றை அணிபவர்களுக்குக் கிடைக்கும் பலனைப் பற்றியும் திருநீற்றுப் பதிகம் தெளிவாக விளக்குகிறது. விபூதியின் பெருமையைப் பதின்மூன்று உபநிடதங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. “விபூதியைக் கைநழுவ விடாதே” என்பது உபநிடத வாக்கியம் ஆகும்.

இறைவனே பூசிக்கொள்ளும் உடலுக்கு கவசமாகிய திருநீற்றைச் சிறிதும் தடையில்லாமல் நாமும் உடலிற் பூசி மகிழ்ந்தால் தீவினைகள் நீங்கும். சிவகதி வந்து பொருந்துவதோடு மோட்ச இன்பமும் கிடைக்கும். இறைவனது அழகிய திருவடிகளை அடையும் பேற்றினைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைப் பின்வரும்

திருமந்திரப் பாடல் விளக்குகிறது:

*கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை*
*மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளும் சாரும் சிவகதி*
*சிங்காரமான திருவடி சேர் வாரே.*

## பஞ்சாட்சரம்

நடராசர் வடிவமே பஞ்சாட்சர வடிவமாகும். பஞ்சாட்சரத்தில் தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மகாகாரண பஞ்சாட்சரம், மகாமனு என ஐந்து பிரிவுகள் உண்டு. நமசிவாய என்னும் நகராதி பஞ்சாட்சரத்தை ஓதினால் நல்வினைப் பயன்கள் உண்டாகும். இப்பஞ்சாட்சரத்தைச் செபித்து வந்தால் வலிய தீவினைகள் எல்லாம் அடங்கிவிடும். உலகத்தில் காரியங்கள் கைகூட நமசிவாய மந்திரத்தை ஓதுதல் வேண்டும். சிவாயநம மந்திரத்தை உணர்ந்து ஓதினால் இறைவன் நேரடியாகக் கருணை புரிந்து அருள் செய்வான். பஞ்சாட்சர மந்திரங்களின் மகிமையைப் பின்வரும் திருமந்திரப் பாடல் எடுத்து இயம்புகிறது:

*நம்முதல் ஓர்ஐந்தின் நாடும் கருமங்கள்*
*அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை*
*சிம்முதல் உள்ளே தெயி வல்லார்கட்குத்*
*தம்முதல் ஆகும் சதாசிவம் தானே*

பல சமயங்கள் பலவிதமாகக் கூறிய போதிலும் அவை அனைத்தும் குறிப்பிடும் தெய்வம் ஒன்றே என்பதைத் திருமூலர் திருமந்திரத்திற் பல இடங்களில் வற்புறுத்துகிறார். நமசிவாய என்ற மூலமந்திரத்திற்கு உரிய மூர்த்தியாகிய சிவபெருமானை நமச்சிவாயப் பழம் எனக் குறிப்பிடுகிறார். அந்தப் பழத்தைச் சுவைத்து உண்பவர்களுக்கு அது அளப்பரிய தித்திப்பைத் தரும். திருமூலர், தான்அனுபவித்த அனுபவத்தை அனைவரும் பெற வேண்டும் என்று விரும்புவதைப் பின்வரும் தமிழ் மந்திரப் பாடல் உணர்த்துகிறது:

*ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும்*
*ஒன்று கண்டீர் உலகுக்குயிர் ஆவதும்*
*நன்றுகண்டீர் நல் நமசிவாயப் பழம்*
*தின்று கண்டேற்கிது தித்தித்தவாறே.*

## அந்தர் யோக வழிபாடு

உடம்பு என்பது ஓர் ஆலயம். உள்ளம் என்பது ஆலயத்திற்குள் உள்ள கர்ப்க்கிருகம். அந்தக் கர்ப்பக்கிருகத்துள் இறைவன் வந்து வீற்றிருக்கிறான். பஞ்சேந்திரியங்கள் இந்த உடம்பாகிய கோயிலுக்கு ஏற்றிய ஐந்து விளக்குகள் ஆகும். ஞானம் பெற்றவனுக்கு ஐந்து புலன்களும் அணையாத விளக்குகள் ஆகும். ஞானம் பெற்றவர்களுக்கு அவையே சிவலிங்கத்தைக் காட்டும் அணையாத விளக்குகளாகும். சரீரத்தைக் கோயிலாக்கி அதற்குள்ளே பூசைக்குரிய ஸ்தானங்களும் கூறப்பட்டுள்ளன.

குருமுகமாகத் தெரிந்து கொண்ட, செய்ய வேண்டிய ஆத்மார்த்த பூசையின் இரகசியத்தைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது:

*உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்*
*வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.*

## வினைகள் நீங்குதவற்கான வழி

பிறப்பிலே கலந்து உயிரை ஆட்டி வருகிற கர்மபலனை சைவசித்தாந்தம் சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என மூன்றாக வகுத்துக் கூறும். முற்பிறவிகளிற் செய்த வினைகளின் பயன்கள் சேர்ந்து தங்கியுள்ள குவியல் சஞ்சிதம் என்றும், இக்குவியலில் இருந்து இப்பிறவியில் அனுபவிப்பதற்கு என முனைந்து நிற்கும் பகுதி பிரார்த்தம் என்றும், புதிதாகத் தேடுகின்ற வினையை ஆகாமியம் எனவும் அழைப்பர். இறைவனுடைய திருவருளை நாடிப்பெற்று ஆன்ம ஞானத்தைத் தேடிக் கண்டால் சஞ்சிதவினை, ஆகாமிய வினை ஆகிய இரண்டும் நீங்கி விடும். இறைவன் அருளை நாடினால் ஆன்ம ஞானம் கிடைத்துவிடும். மேற்கூறிய

உண்மைகளைப் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது:

*தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்*
*முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்*
*பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்*
*சென்னியில் வைத்த சிவனருளாலே.*

திருமந்திரம் ஒழுக்கத்தை உபதேசிப்பதோடு ஆன்ம நாட்டத்திற்கும் ஞானத்தோடு இணைந்த பக்தி வாழ்க்கைக்கும் வேண்டிய பயிற்சியைத் தரும் நூலாகவும் அமைந்துள்ளது. திருமூலர் இறையருளால் தாமே அனுபவித்து உணர்ந்த விடயங்களை நூலின் பொருளாக்கி அமைத்துள்ளார். எனவே திருமந்திரத்தை அனுபவ ஞானத் திருநூல் எனப் பெரியோர்கள் போற்றித் துதிக்கிறார்கள்.

# சைவத்தின் காவலர்

இலங்கையைச் சிவபூமி என அழைத்தவர் திருமூலநாயனார். திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற பழம் பெருமை மிக்க சிவ தேவாலயங்களைத் தன் அகத்தே கொண்டிருக்கும் நாடு இலங்கை ஆகும். இத்தகைய ஈழமணித்திருநாட்டின் வடபால் அமைந்திருக்கும் யாழ்ப்பாணத்து நல்லூரில் கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதிகள் செய்த தவத்தின் பலனாக அவர்களது ஆறாவது புத்திரராக 18-12-1922இல் ஆறுமுகம் தோன்றினார்.

சில மனிதர்கள் பெரியவர்களாகவே பிறக்கிறார்கள். சிலர் தமது முயற்சியினால் பெரியவர்கள் ஆகிறார்கள். சிலர்மீது பெரியவர்கள் என்ற பட்டம் திணிக்கப்படுகிறது என்பது ஆங்கில இலக்கிய மேதை சேக்ஸ்பியரின் கருத்தாகும். இந்த வரிசையிலே தன்னுடைய முயற்சியினால், ஆளுமையினால் செயற்பாட்டினால் சைவத்தமிழ் உலகத்தில் முதன்மை பெற்றவர்தான் நாவலர் ஆவார். 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்ற முதுமொழிக்கேற்ப இவர் மாணவனாக இருந்த காலத்தில் கல்வியில் மிகவும் அக்கறை காட்டி வந்தார். இவர் இயற்கையான ஒரு விவேகி, பால மேதை. தமது ஒன்பதாவது வயதில் தந்தையார் எழுதிய நாடகக் குறையைப் பூர்த்தி செய்தார். உளவியல்காரர் கூறும் 'கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட குழந்தை'யாக இவரை ஏற்றுக் கொள்ளலாம்.

ஆரம்பத்தில் நல்லூரில் சுப்பிரமணியம் என்பாரிடம் மூதுரை, நிகண்டு முதலிய கருவி நூல்களைக் கற்றார். பின்னர் சரவணமுத்துப்புலவர், இருபாலைச் சேனாதிராய முதலியார் போன்றோரிடம் உயர் தமிழ்க் கல்வியைப் பெற்றார். வடமொழியைத் தனது சொந்த முயற்சியால் கற்றார். தனது பன்னிரண்டாவது வயதில் 1834ஆம் ஆண்டு ஆங்கிலக் கல்வியைப்

பெறுவதற்காக யாழ் மத்திய கல்லூரிக்குச் சென்றார். ஏழு வருட காலம் மாணவனாகவும் அடுத்த ஏழு வருட காலம் ஆசிரியராகவும் கடமையாற்றினார். கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலமும் மேல் வகுப்புகளுக்கு தமிழும் கற்பித்தார். பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தார். கல்லூரியின் அதிபராகிய பேர்சிவல் பாதிரியாருக்கு தமிழ் கற்பிக்கும் ஆசானாகவும் கடமையாற்றினார்.

சைவப் பாரம்பரிய விளை நிலத்திலே விளைந்த நாவலர் பெருமான் 14 வருடங்கள் கடும் கிறிஸ்தவ சூழலிலே வாழ்ந்தார். நாவுக்கரசப் பெருமான் சமணசமயத்தில் சேர்ந்து தருமசேனர் என்ற பட்டத்துடன் இருந்த காலத்தில் அவர்களுடைய பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து கொண்டார். இதேபோல 14 வருட காலம் கிறிஸ்தவராக மாறாவிட்டாலும் கிறிஸ்தவ சூழலில் வாழ்ந்ததால் நாவலர் பெருமான் அவர்களுடைய பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து கொண்டார்.

ஆங்கிலக் கல்வியின் ஊடாக மதம் பரப்பும் முயற்சியினை 1831ஆம் ஆண்டு வில்லியம் கோல்புறூக், கமெறன் ஆகியோரைக் கொண்ட ஆணைக்குழு தாம் சமர்ப்பித்த கல்வி சம்பந்தமான அறிக்கையில் கல்வித்துறையில் பல மாற்றங்கள் உண்டாக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தனர். அரசினர் நடத்தும் தாய்மொழிப் பாடசாலைகளை மூடவேண்டும் என்பதும் ஒரு சிபார்சு ஆகும். இதன் விளைவாக 1843ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் அரசினர் நடத்தும் தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டன. இதன் பயனாக வெஸ்லியன் மிசனரி, அமெரிக்கன் மிசனறி முதலிய சமய இயக்கத்தினர் நடத்தும் தமிழ்ப் பாடசாலைகளுக்கே சைவ சமயத்தைச் சார்ந்த பிள்ளைகளும் சென்று படிக்க வேண்டிய இக்கட்டான நிலை நேர்ந்தது. இம்மிசனறிப் பாடசாலைகள் முழுவதும் கிறிஸ்தவ சமயப் பின்னணியில் நடத்தப்பட்டன. ஒருவர் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்திருப்பதே அவர் கல்வி கற்பதற்குரிய முழுமையான தகுதிப்பாடாக அப்பாடசாலை அதிகாரிகள் கருதினர். மேனாட்டுப் பாதிரிமாரும் ஈழத்துக் கிறிஸ்தவரும் சேர்ந்து கற்பித்து வந்த இப்பாடசாலைகளில் மாணவர் பலர் காலப்போக்கில் தமது சமயத்தை விட்டுக் கிறிஸ்தவர் ஆகும் இடர்ப்பாடு ஏற்பட்டது. ஆட்சியாளரின் சமயம் என்ற வகையில் கிறிஸ்தவ சமயம் நன்கு வளர்ந்தது. கிறிஸ்தவ சமயத் தொண்டர்களும் கோயில்களை விடக் கல்விச் சாலைகளே தமது மதத் தொண்டிற்கு சிறந்த இடமெனக் கருதினர்.

எமது மதத்தையும் பண்பாட்டையும் மறையச் செய்து, கிறிஸ்தவ மதத்தையும் ஆங்கிலேயரின் பண்பாட்டு நாகரிகத்தையும் கல்வி என்ற போர்வையிலே குழந்தைகளின் பிஞ்சு உள்ளத்திலே திணிப்பதற்கு பாதிரிமாரும் அவர்களுடைய பாடசாலைகளும் முயற்சி செய்தன. சுதேச கிறிஸ்து மத போதகர்கள் பெரும்பாலும் பஞ்சாக்கரக் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். பஞ்சாக்கரம் என்பது கூலிக்காக மாரடிப்பது போலச் சம்பளத்திற்காக வேலை செய்வதாகும். பஞ்சாக்கரம் என்ற பெயரை பேர்சிவல் பாதிரியாரே பயன்படுத்தினார் என்றொரு கதையுண்டு.

ஆங்கிலக் கல்வி என்ற இனிப்புப் பண்டத்தைக் காட்டி மதமாற்றம் செய்யும் முயற்சிகள் மறைமுகமாக மிசனரிகளால் நடத்தப்பட்டு வந்தன. போர்த்துக்கீசர் காலத்தில் சைவத் தமிழ் மக்களுக்கு வந்த வருத்தம் சிரங்கு நோய் போன்றது. இது வெளித்தோல் வருத்தம். ஆனால் ஆங்கிலேயர் காலத்தில் நமக்கு ஏற்பட்ட வருத்தம் காசநோய் வருத்தம். இது உடலின் உள் உறுப்புக்களைப் பாதிக்கும் வருத்தம், வெளியில் தெரியாத வருத்தம். பலவந்தமாக மதமாற்றம் செய்பவர்களைப் போல வெளியிலே காட்டிக் கொள்ளாமல் ஜனநாயகத் தன்மை நிறைந்தவர்களைப் போலத் தம்மைக் காட்டிக்கொண்டு உள்ளூர நடந்த சுதேசிய மதத்துக்கு எதிரான சூழ்ச்சிகளை எல்லாம் நாவலர் பேர்சிவல் பாதிரியாருடைய பாடசாலையில் அவர்களோடு மாணவனாகவும் ஆசிரியனாகவும் இருந்ததினால் அறிந்து கொண்டார். 1848ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அப்பாடசாலையில் கற்பித்து வந்த தனது ஆசிரியப்பணியைத் துறந்தார்.

## நாவலரின் சுற்றத்துறவு

ஆசிரிய பணியைத் துறந்த நாவலரின் நிலையை அறிந்த அவரின் சகோதரர்கள் நாவலரை வைதார்கள். நீ என்ன புத்தியீனம் செய்து கொண்டாய். இந்தச் சம்பளம் இனி நீ எங்கே பெறுவாய்? இனிமேல் உனக்கு உலகத்திலே என்ன மதிப்பு என்று அவரைக் கண்டித்தார்கள். நான் என்னுடைய சீவிய பரியந்தம் உங்களிடம் வந்து பொருளுதவி செய்யும்படி கேளாதிருக்க கண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி அவாகளை விட்டகன்றார்.

## நாவலரின் சைவப் பிரசங்கப் பணி

1847ஆம் ஆண்டு நாவலரின் வாழ்க்கைப் பருவத்தில் மிகமுக்கியமான காலமாகும். இருபத்தைந்து வயதுப் பருவம் ஒவ்வொரு மனிதருடைய வாழ்விலும் மிகமுக்கியமான காலமாகும். இவருடைய இளமைப் பருவம் இறையருளினால் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பணிக்கே அர்ப்பணமானது. 31-12-1847இல் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சைவத் திருவேடத்தோடு தோன்றி சைவப்பிரசங்கம் செய்யும் முறையை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் ஊதியம் எதுவும் பெறாமல் ஞானதானமாக தனது சமயப் பிரசங்கத்தை சிவன் கோயிலில் செய்து வந்தார்.

முன்னிருந்த எங்கள் சமயாசாரியர்கள் தாம் தரிசனஞ் செய்யப்போன தலங்களில் எல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம் போன இடங்களிலெல்லாம் லோபகாரமான சைவப்பிரசங்கள் செய்து வந்தார் (நாவலர் சரித்திரம் - கைலாசபிள்ளை).

இன்று நமது ஆலயங்களிலே நடைபெறுகின்ற சமயப்பிரசங்க மரபுக்கு வித்திட்டவர் நாவலரே ஆவார். சொற்பொழிவைக் கேட்கின்றபொழுது மாத்திரம் வயிறு குலுங்கச் சிரித்துவிட்டு வீட்டிற்குப் போகும்பொழுது வெறுமையோடு போகின்ற நிலை நாவலரின் சொற்பொழிவுகளைக் கேட்டவர்களுக்கு ஏற்படவில்லை. இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டு மதுமாமிசம் உண்டோர் மாக்கள் நிலை நீங்கி மக்களாயினர். காத்த, மனையாள் வீடுகள் எல்லாம் அலைந்து திரிந்த தாசிலோலர்கள் ஆத்த மனையாளோடு அகத்தே இருந்து இல்லற தர்மத்தை இனிதே நடத்தினர். பரசமயம் செல்ல இருந்தோர் சிவமதமே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தனர். இவருடைய நாவன்மைச் சிறப்பை உணர்ந்த திருவாவடுதுறை ஆதீனத்தார் இவருக்கு 1849ல் 'நாவலர்' பட்டமளித்துக் கௌரவித்தார்கள். 1847ல் ஆரம்பிக்கப்பட்ட சமயப் பிரசங்கம் செய்யும் பணியை இவர் இறந்த ஆண்டாகிய 1879ஆம் ஆண்டு வரை செய்து வந்தார். 1879ம் ஆண்டு சுந்தரருடைய குருபூசைத் தினத்தில் பேசிய சொற்பொழிவே அவருடைய இறுதிச் சொற்பொழிவாக அமைந்தது. இறுதிப் பிரசங்கத்தில் அவர் கூறிய வாக்கியம் இன்றும் நமது சமய நிலைக்கு பொருத்தமான ஆப்தவாக்கியமாகவே காணப்படுகிறது.

“நான் உங்களிடத்துக் கைமாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது 32 வருச காலம் உங்களுக்குச் சைவ சமயத் துண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயம் குன்றிப் போமென்று பாதிரிமார்கள் சொல்கிறார்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும்போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். இன்னும் என்னைப்போல படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவுகளைக் கேட்டுக் கைமாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போல ஒருவரும் வரார்” என்பதே நாவலர் பெருமானின் இறுதிப் பிரசங்கமாகும்.

## நாவலரின் கல்விப்பணி

சைவப் பிள்ளைகள் சைவசமயச் சூழலில் கல்வி கற்க வேண்டுமென்று விரும்பிய நாவலர் பெருமான் 1848ஆம் ஆண்டு ஆவணி மாதம் 5ம்திகதி யாழ்ப்பாணத்தில் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். இவ்வித்தியாசாலையில் ஏழு வகுப்புகள் தொடங்கப்பட்டன. தரத்தில் மிகக்கூடிய வகுப்பு முதலாம் வகுப்பு என்றும் தரத்தில் மிகக் குறைந்த வகுப்பு ஏழாம் வகுப்பு என்றும் வகுக்கப்பட்டன. டாக்டர் பெல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மேல் வகுப்பு மாணவர்கள் கீழ் வகுப்பு களுக்கு பாடம் கற்பிக்கும் சட்டாம்பிள்ளை முறை என்கிற Monitorial System ஐ இவர் தனது பாடசாலையிலே நடை முறைப்படுத்தினார். 1846ல் தனது வீட்டிலே நடைபெற்ற திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்த சதாசிவப்பிள்ளை, சுவாமிநாதையர், நடராசையர், விசுவநாத ஐயர், ஆறுமுகப்பிள்ளை, கந்தசுவாமிப் பிள்ளை, ஆறுமுகச் செட்டியார் ஆகிய ஏழு பேரையும் ஏழு வகுப்புகளுக்கும் வேதனமின்றிக் கற்பிக்கும் ஆசிரியராக நியமனம் செய்தார். நாவலர் மேலதிகாரியாகவும் ஆசிரியராகவும் கடமையாற்றி வந்தார். மாணவர்களுக்கு இலவசக் கல்வியே வழங்கப்பட்டது. 1870ஆம் ஆண்டில் அக்காலக் கல்வி இயக்குனராக கடமையாற்றி வந்த J.S. லாறி என்பாரின் சிபார்சினால் அரசாங்க உதவிப்பணம் கிடைக்கப்பெற்றது. 1872ஆம் ஆண்டிலேதான் இப்பாடசாலையில் மாணவிகளும் சேர்க்கப்பட்டார்கள். 1864ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மக்கள் உபகரித்த பொருளுடன் சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவினார். இவர் தனது பாடாசலையில் பெரிய

புராணம், திருவாதவூரர் புராணம் முதலிய சமய நூல்களையும் நாலடியார், திருக்குறள், நீதிநெறிவிளக்கம், வாக்குண்டாம், நல்வழி முதலிய நீதி நூல்களையும் பாடநூல்களாக்கினார்.

1871ம் ஆண்டில் வண்ணார்பண்ணையில் யோன் கில்னர் என்பவர் நடத்திய வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணாக்கர் விபூதியணிந்து சென்றமைக்காக பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். நாவலர் அப்பிள்ளைகளின் நன்மையினைக் கருதி ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையினை வண்ணார் பண்ணையில் 1872இல் நிறுவினார். போதிய பணமின்மையாலும் பிள்ளைகள் பலர் சேராமையாலும் இவ் ஆங்கிலப் பாடசாலை நான்கு ஆண்டுகளே நடைபெற்றது. கிறிஸ்தவ மதக் குழுக்களால் நடாத்தப்படும் பாடசாலைகளில்தான் ஆங்கிலக் கல்வி சீராகப் போதிக்கப்படுவதோடு மாணவர்களிடம் ஒழுக்கம் ஒழுங்கு ஆகியனவும் பேணப்படுகின்றன என்ற நினைப்பு அக்காலத்தில் நமது சமூகத்தில் வாழ்ந்த மேல்தட்டு வர்க்கத்தினரிடம் நிலவி வந்தது. மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதுபோல இன்றும் நமது சமூகத்தில் அச்சிந்தனையின் தாக்கம் நிலவி வருவதை நம்மால் காண முடிகிறது. எமது மக்களின் ஆதரவு போதாமையால் நாவலரின் ஆங்கிலப் பாடசாலை செயலிழந்தது. ஆனால் நல்லவர்களுடைய சிந்தனை என்றோ ஒருநாள் செயல்வடிவம் பெறும் என்பதை நாம் அனுபவநிலையில் கண்டிருக்கிறோம். நாவலருடைய ஞானவாரிசுகளாகத் திகழ்ந்த வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளையைத் தலைவராகவும், ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்களைச் செயலாளராகவும் மு. பசுபதிச்செட்டியார் அவர்களைத் தனாதிகாரியாகவும் கொண்டு 1888ஆம் ஆண்டு சித்திரை மாதம் மூன்றாம் திகதி சைவபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டது. நாவலருக்குப் பின் தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் பேணுவதற்கு ஒரு சபை இயங்க வேண்டும் என்று அவரது எண்ணத்துக்கு இவர்கள் செயல் வடிவம் கொடுத்தார்கள். வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து குத்துவிளக்கேற்றி அதன் தீபத்துடன் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு வருகை தந்து சைவபரிபாலன சபையை ஆரம்பித்தார்கள். குத்துவிளக்கேற்றிச் சபையைத் தாபித்ததன் நோக்கம் அச்சபை நமது நாட்டில் ஒரு சைவஞானதீபமாக விளங்க வேண்டும் என்பதற்காகவே எனப் பிற்காலத்தில் சைவபரிபாலன சபையின் பொருளாளராக இருந்த திரு. மு. மயில்வாகனம்

அவர்கள் திருக்கேதீஸ்வர கும்பாபிஷேக மலரிலே குறிப்பிட்டுள்ளார்.

சைவசமயச் சூழலிலே சைவப்பிள்ளைகள் கல்வி பயில வேண்டும் என்று விருப்பம் கொண்ட பல சைவப் பெரியார்களின் கூட்டு முயற்சியினால் 1890ஆம் ஆண்டு விஜயதசமி நாளில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து சில வருடகாலம் சைவபரிபாலன சபையாரால் பரிபாலிக்கப் பெற்ற இலங்கை வாழ் இந்துக்களின் உயர்கல்வி நிலையமாக இன்றுவரை மிளிர்ந்து கொண்டிருப்பதே யாழ். இந்துக்கல்லூரி ஆகும். தொடர்ந்து நமது நாட்டில் பல இந்துக் கல்லூரிகளும் சைவவித்தியா விருத்திச் சங்கத்தால் தாபிக்கப் பெற்ற பாடசாலைகளும் உருவாகுவதற்கு வித்திட்ட பெருமை நாவலர் பெருமானையே சாரும்.

## சைவசமயப் பிரசாரகர்களையும் ஆசிரியர்களையும் உருவாக்கும் திட்டம்

பாதிரிமார்கள் போதகர்களையும் உபாத்தியாயர்களையும் கருவியாகக் கொண்டு ஆலயங்கள் மூலமும் வித்தியாசாலைகள் மூலமும் தமது சமயத்தை விருத்தி செய்வது போலத் தாமும் கற்றுவல்ல உபாத்தியாயர்களையும் சைவப்பிரசாரகர்களையும் உருவாக்கி ஆலயங்கள், வித்தியாலயங்கள் வாயிலாகச் சைவசமயத்தை விருத்தி செய்ய எண்ணினார். ஆனால் அவருடைய ஐந்தாண்டுத் திட்டமாகிய அந்தச் சிந்தனை செயல் வடிவம் பெறவில்லை. சைவ ஆசிரியர்களை உருவாக்க வேண்டுமென்ற நாவலருடைய சிந்தனையைச் செயற்படுத்துவதில் காரைநகரைச் சேர்ந்த ஆசிரியர் திரு. ச. அருணாசலமும், திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையின் தந்தையாகிய இந்துபோட் இராஜஇரத்தினமும், பரமேஸ்வரா பண்டித ஆசிரியர் கலாசாலை, இராமநாதன் பெண்கள் ஆசிரிய கலாசாலை ஆகியவற்றை உருவாக்கிய சேர் பொன். இராமநாதனும் சைவத்தமிழ் மக்களுடைய நெஞ்சத்தாமரையில் என்றும் வீற்றிருக்கின்ற பரோபகாரிகளாவார்கள். சைவசமய வளர்ச்சிக்காகப் பல தருமவான்களால் உபகரிக்கப்பெற்ற பல சொத்துக்களையும் ஒன்று சேர்த்து நாவலரின் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க முடியாதா? என்பதைச் சைவத்தின் காவலர்களாக விளங்குகின்ற சமய நிறுவனங்கள் சீர்தூக்கிப் பார்த்துச் செயற்பட முன்வர வேண்டும்.

## அச்சியந்திரத்தின் அவசியம்

கற்பித்தலில் ஏட்டுச் சுவடிகளே பயன்பட்டு வந்தன. நாவலர் புத்தக முறையைக் கையாள விரும்பினார். பால பாடங்கள், சைவவினாவிடைகள், இலக்கணச் சுருக்கம், ஆகிய புத்தகங்களை வெளியிட விரும்பினார். ஆத்திசூடி முதலிய சைவநீதிச் செய்யுள்களுக்கும் உரை எழுதினார். கிறிஸ்தவர் செய்யும் சைவதூஷணங்களுக்கு உடனுக்குடன் மறுப்பு வெளியிட வேண்டும் என்று விரும்பினார். இவற்றை அச்சிடுவதற்கு அச்சு யந்திரம் வாங்க விரும்பிய நாவலர் 1849ஆம் ஆண்டு தமிழ் நாட்டிற்குச் சென்றார். வண்ணார் பண்ணையில் நிறுவிய தனது பாடசாலைக்கு அருகாமையில் 'வித்தியானுபாலன யந்திரசாலை' என்ற அச்சுக்கூடத்தை நிறுவினார். அழிந்து போகும் நிலையில் இருந்த பல புத்தகங்கள் அச்சுவாகனமேறின. இவரால் வெளியிடப்பட்ட புத்தகங்களில் எழுத்துப் பிழையோ வாக்கியப் பிழையோ இலக்கணப் பிழையோ ஏற்படாததோடு அச்சுப் பிழையும் ஏற்படாமல் இருப்பது மிகச் சிறந்த அம்சமாகும். தமிழ் வசன நடையிற் குறியீடுகளாட்சியும், சந்தி பிரித்தலும் இவர்களாற்றான் முதன்முதல் கையாளப் பெற்றன என்கிறார் தென் இந்தியப் பேரறிஞர்களில் ஒருவராகிய சே.வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள். பழைய நூல்களைப் பதிப்பிக்கும் துறையில் ஆறுமுகநாவலர் செய்த பணிக்கு ஈடு இணை கிடையாது. அரசாங்க உதவியின்றித் தாமாகவே பழைய இலக்கண இலக்கிய நூல்களைப் பதிப்பிக்க ஆரம்பித்த முதலாவது அறிஞர் ஆறுமுகநாவலர் அவர்களே என்கிறார் பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள்.

## நாவலரின் சமுதாயப் பணி (கஞ்சித் தொட்டித் தருமம்)

நாவலருடைய உள்ளத்திலே சான்றாண்மை வீரம் இருந்துபோல நெஞ்சிலே ஈரமும் இருந்தது. மக்கள் பட்டினியால் வாடியபொழுது இவருடைய உள்ளம் வேதனையால் வாடியது. 1876ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் மழை மிகக் குறைவாகப் பெய்தமையினால் பயிர் விளைவுகள் ஏற்படவில்லை. கோதாரி(Cholera) என்று அழைக்கப்படுகின்ற கொடிய நோய் மக்களை வருத்தியது. உணவுப் பொருள்களின் விலை நாம்

இன்று அனுபவிக்கும் நிலைபோல என்றுமில்லாதவாறு உயர்ந்தன. பஞ்சமும் கொலரா நோயும் மக்கள் பலரின் உயிரைப் பலிகொண்டன. இந்தத் துன்பச் சூழ்நிலையைக் கண்டும் காணாதவர்கள் போல அக்கால ஆட்சியாளர்கள் வாளாவிருந்தனர். மனிதாபிமானம் படைத்த நாவலர் அக்காலத்திற் சிறந்த சமூகத் தொண்டரானார். கஞ்சித் தொட்டித் தருமம் நடாத்தினார். வண்ணார்பண்ணையில் இந்தக் கஞ்சித் தொட்டித் தருமம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கஞ்சி அரிசி, தேங்காய், உப்பு முதலியவற்றைக்கொண்டு ஆக்கப்பட்டு பனையோலையினால் இழைக்கப்பட்ட தொன்னையில் மக்களுக்கு வழங்கப்பட்டது. 1877ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 3ம் திகதி தொடக்கம் நாடோறும் சிறாம்பியடியிற் கஞ்சித் தொட்டித் தருமம் நடத்தப்பட்டு வந்தது. கஞ்சித் தொட்டித் தருமத்தில் நாவலருடன் முன்னின்று உழைத்தவர் சி.பிறிறோ ஆவார். இக்கஞ்சித் தொட்டித் தருமத்தைப் பற்றி அக்காலப் பத்திரிகைகளான உதயதாரகை, இலங்கை நேசன், கத்தோலிக்க பாதுகாவலன் ஆகியன பிரசாரம் செய்து உதவின. நாளொன்றுக்கு 8000 மக்கள் இதனால் பயனடைந்தார்கள் என இலங்கை நேசன் பத்திரிகை எழுதியுள்ளது.

## நாவலருடைய வேளாண்மைப் பணி

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு மிகவும் அவசியம். கொடிய பஞ்சத்தின் தாக்கத்தினால் நாவலர் இதனை உணர்ந்தார். 1872இலிருந்து 1877வரை இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சேர் வில்லியம் கிறிகெறி என்பார் இந்நாட்டின் விவசாய உற்பத்தியிலும் அக்கறை செலுத்தினார். திருக்கோணமலைப் பகுதியில் உள்ள கந்தளாய் என்னும் குளத்திற்கு அண்மையில் உள்ள காட்டுப் பிரதேசத்தை சுதேசிகளின் உதவியுடன் பயிர் விளையும் நிலமாக விருத்தி செய்ய நினைத்தார். இவருடைய பேருக்கத்தினால் யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் என்ற பெயருடன் சங்கமொன்று நிறுவப்பட்டது. இச்சங்கம் அரசாங்கத்திடமிருந்து கந்தளாயில் இருக்கும் நிலத்தை பெற்று அபிவிருத்தி செய்வதில் முனைந்தது. பங்கு ஒன்று 10 ரூபா வீதம் 30000 பங்குகளை விற்கும் உரிமையை அரசிடமிருந்து பெற்றது. இச்சங்கத்தை உருவாக்கி வேளாண்மையை அபிவிருத்தி செய்யும் பணியில் நாவலரும் ஈடுபட்டார். பொதுமக்களை ஒன்று

கூட்டி இதன் நன்மையை எடுத்துக்கூறி பங்குகளை வாங்கச் செய்தார். தானும் 200 பங்குகளை வாங்கினார். வடக்கையும் கிழக்கையும் இணைப்பதோடு தன்னிறைவுப் பொருளாதாரம் உருவாக வேண்டும் என்பதிலும் நாவலர் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டார்.

## சமூக அநீதிகளைக் கண்டித்த நாவலர்

1876, 77இல் பஞ்சத்தால் வாடிய யாழ்ப்பாண மக்களுக்கு உதவிய அரசாங்கத்தின் நிவாரணம் ஏழைகளுக்கு கிடைப்பதை அக்கால அரசாங்க அதிபராக இருந்த துவைனம் துரையும் அவரின் கீழ் வேலை செய்த முதலியார் போன்ற உத்தியோகத்தரும் தடுத்து தமதாக்கிக் கொண்டார்கள். இதனைக் கண்ட நாவலர் சீறியெழுந்தார். நடைபெற்ற அநியாயத்தைக் கண்டித்து கவர்னருக்கு கடிதம் எழுதினார்.

யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கின்ற கலீசு(Cloodge), அதற்குத் தலைவர் துவைனந் துரை, உபாத்தியாயர்கள் “பாவந் தோன்றிய நாளையிற்றோன்றிய பதகன்” ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள். அவர்கள் படிப்பிக்கிற தாலுகாப் பள்ளிக்கூடங்கள் சில தலைமைக்காரர்களுடைய தானங்கள்.

1878ஆம் ஆண்டு இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சர்லோங் அவர்கள் யாழ்ப்பாணம் வந்தபோது துவையினந் துரையின் அநீதிகளையெல்லாம் விரிவாக ஒரு விண்ணப்பத்திலே எழுதி, தூதுக்குழு ஒன்றுக்குத் தலைமைதாங்கிச் சென்று அவரிடம் சமர்ப்பித்தார். மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு தளபதியாக நிற்கும் ஆற்றல் இவரிடமிருந்ததை நாம் இங்கே காணக்கூடியதாக உள்ளது. நாவலர் பெருமான் சிவபதம் எய்திய பிறகு அவரின் ஆத்மாவிற்கு பிரீதி செய்ய விரும்பிய துவைனம் திருக்கேதீச்சரத் திருத்தலம் இருக்கும் நிலத்தைச் சைவருக்காக்கி உதவினார்.

## யதார்த்தவாதி வெகுசன விரோதி

நாவலர் யதார்த்தவாதி ஆகையால், யாராக இருந்தாலும் செய்யும் அநீதிகளைக் கண்டிப்பதற்கு என்றுமே தயங்காதவர். இராமலிங்க சுவாமிகளின் அருட்கோலப் பொலிவின் சிறப்பை

அவருடைய சிஷ்யர்கள் சிலர் சிதைத்தார்கள். சிஷ்யர்கள் ஆடக் குரு ஆடத் தொடங்கினார். நிலமை பரிதாபகரமாகியது. "என் சீடர் மிகக் கொடியவர்" என்றொரு பாட்டைச் சுவாமிகளே பாடியிருக்கிறார். இவர் தனது சீடர்களைக் கடிந்து கூறிய வாசகம் 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. 'நீங்கள் நான் சொல்வதைக் கேட்பதில்லை'. எனது கருத்தின்படி நடக்கவுமில்லை. நான் சொல்வதைக் கவனிக்க மாட்டோம் என்று திடப்படுத்திக் கொண்டீர்கள் போலும்.

இராமலிங்க சுவாமிகளின் பாடல்களைத் திருவருட்பா என்றும், அவருடைய பாடல்கள் தேவார திருவாசகத்திற்கு சமமானவை யென்றும், நாயன்மார்களோடு ஒப்பிடக்கூடியவர் இவரென்றும் கூறப்பட்ட கருத்துக்களை மறுத்து இவருடைய பாடல்கள் அருட்பாவல்ல அவை மருட்பா எனக் கோட்டிலே வழக்குத் தாக்கல் செய்து வாதாடினார். சிவாகம விதிகளுக்கு மாறாகவும், அந்தணருக்குரிய கோலம் சீலம் ஆகியவை இல்லாமலும் இருந்த சிதம்பரம் தீட்சிதர்களின் செய்கைகளை நாவலர் கண்டித்தார். நாவலருடைய கண்டனத்துக்குள்ளானவர்கள் அனைவரும் ஒன்று பட்டார்கள். 1869ம் ஆண்டு ஆனி உத்தர தரிசனத்தினத்திலே தில்லை வாழ் அந்தணர்கள் இராமலிங்க சுவாமிகளையும் அவரது சீடர்களையும் வரவேற்று பேரம்பலத்திலே கூட்டம் ஒன்றைக் கூட்டி நாவலரை அவதூறாகப் பேசினார்கள். முதலில் இராமலிங்க சுவாமிகள் எழுந்து பேசினார். பேசினார் என்பதிலும் பார்க்க பேசுவித்தார்கள் என்பதே பொருத்தம் என்றார் பண்டிதமணி அவர்கள். நாவலர் என்ற வார்த்தையை எடுத்துக் கொண்டு 'நாவல்லாதவர்' நாவால் அவர் தூற்றுபவர், நாவால் வருத்த முறுவோர்" என முப்பால் விரித்தார் சுவாமி. அப்பொழுது தியாகேச முதலியாரின் குருவும், ஈசான சிவாசாரியாரின் பேரனுமாக இருந்தவர் "உந்தக் கருத்திலே தானோ திருவாவடுதுறையாதீனம் அவருக்கு நாவலர் பட்டம் வழங்கியது" என்று உரத்த குரலிலே சுவாமிகளை விழித்துக் கேட்டுவிட்டார். அவ்வளவிற் சுவாமிகள் கண்மூடி மௌனியாயிருந்தார். தொடர்ந்து சுவாமிகளின் சீடர்களும் தீட்சிதர்களும் நாவலரைத் தாக்கிப் பேசினார்கள். இவற்றை யெல்லாம் அறிந்த நாவலர் அடுத்தநாள் மஞ்சக்குப்பக் கோட்டிலே சுவாமி மீது மானநட்ட வழக்குத் தொடுத்தார். கோட்டிலே சுவாமிள் தாம் அப்படிப் பேசவில்லையென்று மறுத்தார். சுவாமி பேசவில்லை என்று மறுத்ததும் நாவலர் வழக்கை நிறுத்தினார். தீட்சிதர்கள்

நாவலர் மீது பொய்யானதொரு கிரிமினல் வழக்குத் தொடுத்தார்கள். அதில் தெய்வநீதி தீட்சிதர்களுக்கே தண்டனையைப் பெற்றுக் கொடுத்தது.

இந்த மஞ்சக் குப்பக் கோட்டிலே 1867ஆம் ஆண்டு வெள்ளந்தாங்கி ஆறுமுகம்பிள்ளை என்ற பிரபு நாவலர் மீது மானநட்ட வழக்குத் தொடுத்தார். இவர் சிவகாமி அம்மையின் நாற்பது வேலி சிவசொத்தை அனுபவித்தவர். சிவசொத்தை தீண்டிய இவர் நாவலரோடு தொடர்பு வைக்கப் பலமுறை முயன்றவர். இவரைத் தன்னிடம் வரக்கூடாது என்று நாவலர் ஏசிவிட்டார். இந்த வழக்கிலே நாவலரின் அருட்கோலத்தைக் கண்ட நீதிபதி அவர் அப்படி ஏசியிருக்கமாட்டாரென நினைத்தார். ஆனால் நாவலரோ இராமலிங்க சுவாமிகள் போலல்லாது தான் பேசியதை ஏற்றுக்கொண்டு அக்காலத்தில் 7ரூபா குற்றப் பணமும் கட்டியிருக்கிறார்.

## மருமகனுக்கு எதிராக நீதிமன்றத்திலே சாட்சி

மனுநீதி கண்ட சோழன் தனது ஒரேயொரு மகனைத் தேர்க்காலில் இட்டு நெரிக்க முற்பட்டதுபோல தன்னுடைய மருமகனும் பிரதம சிஷ்யனுமாகிய பொன்னம்பலபிள்ளை நொத்தாரிசாகக் கடமையாற்றியபொழுது சிக்கலான உறுதியொன்று எழுதுவதற்கு துணையாக இருந்துவிட்டார். பொன்னம்பல பிள்ளைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நாவலரைச் சாட்சியாகப் போட்டுவிட்டார்கள். நாவலர் கோட்டிலே கண்ணீர் சிந்தியபடியே உண்மையை உரைத்தார். ஐந்து வருடம் சிறைத்தண்டனையை பொன்னம்பலபிள்ளை அனுபவித்தார். இவர் சிறையிலிருந்த பொழுதே நாவலர் மறைந்து விட்டார்.

*"ஆறுமுக ஐயற்கே, ஆட்செய்யப் பெற்றனம் யாம்*
*வேறறங்கள் வேண்டா இனி"*

எனக் கவிமழையோடு கண்மழையும் பொழியக் கதறினார் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை அவர்கள்.

## நல்லைக் கந்தன் ஆலயமும் நாவலரும்

யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சைவமக்களின் உயிர்நாடியாக

விளங்கும் ஆன்மீக நிலையம் நல்லைக்கந்தன் ஆலயம் ஆகும். இங்கே சிவாகம விதிக்கும் குமார தந்திரத்திற்கும் மாறாக ஆலய அமைப்பு இருப்பதையும் கிரியைகள் நடைபெறுவதையும் பார்த்த நாவலர் இதனைக் கண்டித்தார். ஆலயத்திலே நடைபெற்று வந்த பலியிடுதல், தாசிகள் நடனம் ஆகியவற்றைக் கண்டித்தார். திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து ஓதுவார் மூர்த்திகளை அழைத்து தானும் சிவக் கோலத்தோடு அவர்களில் ஒருவராகி சுவாமிக்குப் பின்னால் திருமுறை ஓதும் மரபை நல்லூரிலே உருவாக்கி வைத்தார். கந்தபுராணத்தின் பிறந்தகம் பாரதம், அதன் புக்ககம் யாழ்ப்பாணம். நல்லைக் கந்தன் ஆலயத்திலே நாவலரே புராணபடனத்திற்கு பயன் சொல்லியிருக்கிறார். நல்லைக்கந்தன் ஆலயம் பொதுமக்களின் ஆலயமாக மாற வேண்டுமென்று இவர் விரும்பினார். கந்தைய மாப்பாணார் என்ற ஆலய முகாமையாளரின் சம்மதத்தோடு கோயிலிலே பொதுச் சபை ஒன்றைக் கூட்டி ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்வதற்காக தமிழ்நாட்டின் கருவூரிலிருந்து 3000 ரூபாவிற்கு கருங்கற்களும் எடுப்பித்துக் கொடுத்தார். ஆனால் இன்று வரை கோயில் பொதுச் சொத்தாகவு மில்லை. கருங்கற்கள் ஆலய தேவைக்கு பயன்படுத்தப்படவு மில்லை.

## சேர் பொன் இராமநாதனைச் சட்டசபைக்கு அனுப்பிய நாவலர் பெருமான்

பின்னாலே நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளை முன்னே உணர்ந்து செயலாற்றக்கூடிய ஒரு தீர்க்கதரிசியாக நாவலர் பெருமான் செயற்பட்டார். 1879ஆம் ஆண்டில் இலங்கை சட்டசபை பிரதிநிதித் தேர்தல் ஒன்று நடைபெற்றது. அத்தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படவிருந்த பிறிற்றோவை எதிர்த்து 27 வயதுடைய சேர் பொன் இராமநாதன் சட்டசபைக்குத் தெரிவாவதற்கு உதவியாக இருந்தார்.

நாவலர் அரசியலிலும் பெரிய மூளை. அக்காலம் அவர் அரசியலில் மேடையேறியிருந்தால் அவர் திலகர், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரப்பிள்ளை போல விளங்கியிருப்பார் எனச் சுத்தானந்த பாரதியார் குறிப்பிடுகிறார்.

சேர் பொன். இராமநாதனுக்கு முன்பு தமிழர் பிரதிநிதியாக நிரூபணசபையில் பணியாற்றிய அவரின் மாமனாராகிய திரு

முத்துக்குமாரசுவாமி அவர்கள் நாவலரின் மறுமலர்ச்சி முயற்சிகளை நயந்து அம்முயற்சிகளின் தேசிய முக்கியத்துவத்தினைச் சட்ட நிருபணசபையில் எடுத்துக்கூறி நாவலரைச் சைவச்சான்றோன் எனப் பாராட்டி அவரது பணிகளுக்கு தேசிய மதிப்புக் கிடைக்கச் செய்தார். சேர். பொன். இராமநாதனும் சட்டசபையில் நாவலரை "இந்துக்களின் சீர்திருத்தவீரர்" என வர்ணித்திருக்கிறார். நாவலரின் கனவை நனவாக்கும் பணியில் சேர் பொன். இராமநாதன் சட்டசபையில் சைவக் கல்வியின் வளர்ச்சிக்காக செய்த பணிகள் அனைவரும் அறிந்தவையாகும். தமிழர் வாழும் பிரதேசத்தின் மூலை முடுக்குகளெல்லாம் சைவப் பாடசாலைகளை நிறுவிய சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் தாபகர்களில் ஒருவராகவும், பரமேஸ்வராக் கல்லூரி (இன்றைய நமது பல்கலைக்கழகம்), இராமநாதன் கல்லூரி ஆகியவற்றை தனது சொந்தப் பணத்திலே தாபித்த வள்ளலாகவும், பல்லவ சோழ மன்னர்கள் செய்த பணிக்குச் சமமாக கொழும்பிலே கொட்டாஞ்சேனையிலே பொன்னம்பலவாணெஸ்வரத்தை தாபித்த சைவச் சான்றோனாகவும் பல பயன் கருதாப் பணிகளை சேர் பொன் இராமநாதன் ஆற்றுவதற்கு அவரை வழிப்படுத்திய பெருமை நாவலரையே சாரும். 'நாவலருடைய கல்விப் பணியைத் தொடர்ந்து வளர்த்து வலுவூட்டக்கூடிய இராமநாதன் அக்காலச் சூழ்நிலையில் நம்மவருக்கு கிடைத்த வரப்பிரசாதமாவார்' என நமது பல்கலைக்கழகக் கல்வியியல் துறைப் பேராசிரியர் திரு. வ. ஆறுமுகம் அவர்கள் இராமநாதன் கல்லூரிச் சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளார்.

## நாவலர் பாரம்பரியமும் இன்றைய சூழ்நிலையும்

நாவலர் இந்தப் பூமியிலே வாழ்ந்தது 57 ஆண்டுகள் மாத்திரமே ஆகும். ஆனால் தன்னுடைய வாழ்க்கைக் காலத்தில் செய்த பணிகள் அளப்பரியவை. அவருடைய எண்ணம், செயல், சொல் ஆகிய அனைத்தும் சைவத்தமிழ்ப் பணியையே மையமாகக் கொண்டு செயற்பட்டன. நாவலர் ஒரு மாணவப் பரம்பரையையே உருவாக்கி வைத்தார். இவருடைய மாணவர்களில் ஒருவராகிய காசிவாசி செந்திநாதையர் குப்பிழான் கிராமத்திலே பிறந்தவர். நாவலர் பாடசாலையின் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியவர். இவர் நாவலருடைய சிபார்சுக் கடிதத்துடன்

பாரத நாட்டிற்குச் சென்று காசியிலே பத்து வருடகாலம் தங்கி, வேத உபநிடத ஆகமக் கருத்துக்களையெல்லாம் கற்றுணர்ந்து, நீலகண்ட பாஷியம், தேவாரம் வேதசாரம் சைவவேதாந்தம், கந்தபுராண நவநீதம் போன்ற பல அரிய நூல்களையெல்லாம் எழுதி வெளியிட்டார். நாவலர் காலமான செய்தி கேட்டதும், "நன்னடைக்கப் பத்திரிகை நாவலனே-நீ அனுப்ப என்ன தவம்செய்தேன்" என்று அழுதழுது இரங்கற்பா பாடினார். வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை சதாசிவபிள்ளை, ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள், கைலாசபிள்ளை போன்ற பலர் அவருடைய மாணவர்களாக இருந்து சைவமும் தமிழும் வளர அரும்பணியாற்றினார்கள். இம்பரம்பரை வாழையடி வாழையாக வளர்ச்சி பெற்று வந்தது.

வித்துவ சிரோன்மணி சி. கணேசையர், சதாவதானம் திரு நா. கதிரவேற்பிள்ளை, சைவப்பெரியார் சிவபாதசுந்தரம், குமாரசுவாமிப் புல்வர், அண்மையில் காலம்சென்ற பண்டிதமணி கணபதிப்பிள்ளை என இப்பரம்பரை வளர்ந்து கொண்டே வந்தது. பண்டிதமணியுடன் நாவலர் பாரம்பரியம் அழிந்து விட்டதா? அல்லது அழிக்கப்படுகிறதா? என்றொரு வினா சைவப்பெருமக்கள் அனைவருடைய உள்ளத்தையும் உறுத்திக்கொண்டேயிருக்கிறது.

# இதயத்தைப் புனிதமாக்கும் எங்கள் சமயம்

உலகில் இன்று நிலவி வரும் பெரும் சமயங்களில் இந்து சமயமும் ஒன்றாகும். உலகின் பல பாகங்களிலும் கோடிக் கணக்கான மக்கள் இந்து சமயத்தைப் பின்பற்றி வருகின்றார்கள். ஒருவரால் ஒரு இடத்தில் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்படாத பழமையும் பெருமையும் மிக்க சமயமே இந்து சமயம் ஆகும். தொன்று தொட்டு வரும் வாழ்க்கை நெறி என்பதால் சனாதன தர்மம் என்ற பெயர் இந்து சமயத்திற்கு வழங்கப்படுகின்றது. இந்து சமயம் தத்துவத்தோடும் கலைகளோடும் பண்பாட்டோடும் வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்துள்ளது. தத்துவம் காட்டுகின்ற உண்மைப் பொருளும் சமயம் பேசுகின்ற மெய்ப்பொருளும் ஒன்று என இந்துமத சிந்தனையாளர்கள் நிறுவினார்கள். ஒவ்வொரு தனிமனிதனும் சரியாகச் சிந்திப்பதற்கு மட்டுமன்றி முறையாக வாழ்வதற்கும் இந்து மத தத்துவங்கள் வழிகாட்டுகின்றன. புற உலகை மட்டுமன்றி அகந்தையையும் சிறப்பாக ஆன்மாவையும் இந்து சமய தத்துவங்கள் ஆராய்கின்றன. தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த உயர் தத்துவமாகிய சைவ சித்தாந்தம். ஒவ்வொரு தனி மனிதனும் ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கான வழிவகைகளைத் தெளிவாக கூறுகிறது.

இந்து சமயம் கலைகள் அனைத்தையும் தெய்வீகமாகவே காண்கிறது. இந்தக் கலைகள் பெரும்பாலும் சமயச் சார்புடையனவாக தெய்வாம்சம் பொருந்தியவையாக மறைபொருள் கருத்துக்களை விளக்குபவையாக அமைந்துள்ளன. கலைகள் அனைத்தும் இறைவனிடமிருந்து தோன்றியவை என்றே இந்துக்கள் கருதுகிறார்கள். இந்துக் கோயில்கள் கலைக்கருவூலங்களாகத்

திகழ்கின்றன. இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம், என்பன இக்கோயில்களினூடாக மக்கள் வாழ்வினை செம்மைப்படுத்தி சிறப்படையச் செய்கின்றன. கலைஞர்களை அபரபிரமாக்கள் என்றே இந்து மதம் கூறுகிறது. ஒழுக்கமும் புலனடக்கமும் பக்தியும் கலைஞர்களுக்கு இன்றியமையாதன ஆகும். இந்து சமயத்தில் கோயில் என்பது ஆண்டவனின் அருள் சுரக்கும் நிலையமாக மட்டுமல்லாது அழகுக் கலைகளின் உறைவிடமாகவும் கலைவளர்க்கும் அரங்கமாகவும் கலைஞர் சமுதாயத்தின் மையமாகவும் இருந்து வந்துள்ளது.

ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவனை இசையால் இசைவிப்பது சுலபம் ஆகும். இராவணன் இசைத்த சாம கானம் நாத வடிவினனாகிய சிவலோகநாதனை மகிழ்வித்தது. 'வேதங்களில் யான் சாம வேதமாக உள்ளேன்' (வேதா நாம சாம வேதோ ஸ்மீ) எனக் கீதையிலே கிருஷ்ண பரமாத்மா கூறுகிறார். இசையின் பயன் இறைவனை வழிபடலும் அதே சமயம் ஆத்மானுபவம் பெறுதலுமாகும். வேதாத்தியனம், யோகம், தியானம், பூசை என்பவற்றினால் பெறுகின்ற இறையனுபவத்தை சங்கீதத்தின் மூலம் வெகு சுலபமாகப் பெற்று விடலாம் என யாக்கவல்லிய மகரிஷி தமது ஸ்மிருதியில் கூறியுள்ளார். ஆன்மாவை இறைவனோடு இணையவைக்கும் யோகக்கலையே நாட்டியக் கலை என இந்து சமயம் கூறுகிறது. மலர், நீர், தூபதீபம் ஆகிய எல்லாவிதமான உபசாரங்களிலும் நிருத்தியோபசாரத்தையே ஆண்டவன் பெரிதும் விரும்புகிறான் என்பதை நிருத்தியரத்னாவளி என்ற நூல் குறிப்பிடுகிறது. நாட்டியமானது இறைவனை வழிபடுவதற்கு உகந்ததோர் வேள்வியாக அமைகிறது என காளிதாச மகாகவி கூறுகிறார். வேதமோதி வேள்விகள் தானங்கள் செய்து அடையும் பயனை நாட்டியக் கலையும் மனிதனுக்குக் கொடுக்க வல்லது எனப் பரதமுனிவரும் தமது நாட்டிய சாஸ்திரம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

இந்து சமயத்தவர்களுடைய வழிபாட்டில் கோயில்கள் முக்கிய இடம்பெறுகின்றன. ஆன்மா இறைவனிடம் வயப்படும் இடம் ஆலயம் ஆகும். ஆலயத்தில் நடைபெறும் கிரியைகள் அங்கு வழிபடவரும் ஒவ்வொருவரையும் இறைவனிடம்

வழிப்படுத்தும் சாதனமாகக் காணப்படுகின்றன. ஆலயச் சூழலில் தெய்வீக மணம் கமழ வேண்டும். தெய்வீகத்திற்கு புறம்பான செயல்கள் எதுவும் ஆலயங்களில் இடம்பெறக்கூடாது. ஆலயத்தில் கிரியைகளைச் செய்யும் சிவாச்சாரியாரே அங்கு வழிபடவரும் அடியார்களிடம் தெய்வீக உணர்வை ஏற்படுத்துபவராகக் காணப்படுகிறார். அர்ச்சகருடைய பிரபாவத்தினால் தான் சிலை சிவனாகத் தெரிகிறது என காரணாகமம் குறிப்பிடுகிறது. (அர்ச்சகஸ்ஸ பிரபாவேன சிவா பவதி சங்கர.) ஆலயங்களில் பரார்த்த பூசையைச் செய்யும் சிவாச்சாரியார்களுக்கு இருக்க வேண்டிய தகுதிப்பாடுகளை காரணகமம் பின்வருமாறு தெளிவாகக் கூறுகிறது.

சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாணதீட்சை, ஆசார்யபிஷேகம் அனைத்தும் பெற்றவராய் சிவபூஜாதுரந்தராய், ஆகமக் கிரியா வல்லுனராய் குரு, சிவாக்கினி, கடவுள் ஆகிய மூன்றிலும் நீங்காத பற்றுடையவராய், புலன்களை வென்றவராய், பொது சனங்களில் விருப்புடையராய் இருப்பவரே சிவாச்சாரியாராக இருக்கத் தகுதியுடையவர்.'

இதேபோல் ஆலயத்தின் பரிபாலகர்களும் ஆசாரமும் ஒழுக்கமும் உடையவர்களாக இருக்க வேண்டும். வெறுமனே சமூக அந்தஸ்திற்காக ஆலய பரிபாலகர்களாகக் கடமையாற்றாமல் சமய உணர்வுடன் ஆலயங்களை நிர்வகிக்க வேண்டும்.

ஆலயங்களில் நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெறாவிட்டால் நாட்டுக்கும் மக்களுக்கும் பல்வேறு வகையான தீங்குகள் இடம்பெறும் என்பதனை

*முன்வரும் கோயில் பூசைகள் முட்டிடின்*
*மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்*
*கன்னம் களவு மிகுத்திடும் காசினி*
*என்னரும் நந்தி எடுத்துரைத்தானே*

எனத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரமும் எடுத்துக் கூறுகிறது. ஆலயங்களில் நடைபெறும் கிரியைகளை நித்தியக்கிரியைகள், நைமித்தியக் கிரியைகள், காமியக் கிரியைகள் என மூன்றாக வகுப்பர். நாள்தோறும் நடைபெறுவன நித்தியக் கிரியைகள் என்றும் விசேட காலங்களில் நடைபெறுவன நைமித்தியக் கிரியைகள்

என்றும் பயன்கருதிச் செயய்ப்படுவன காமியக் கிரியைகள் என்றும் அழைக்கப்படும். மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்ற கிரியைகள் நைமித்திய கிரியையினுள் அடங்கும். அபிஷேகம் அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், வாழ்த்து என்பன நித்தியக் கிரியையின் அங்கங்களாகும். மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்ற நிகழ்வுகளில் பல்வேறு விதமான கிரியைகள் இடம்பெறுகின்றன. சிவாகமங்களின் கிரியா பாதத்தை இலகுபடுத்தி எழுந்த நூல்களாகிய பத்ததிகளில் கிரியைகளின் ஒழுங்குமுறைகள் எல்லாம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆனால் இன்று நமது ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் பல குறைத்தும் கூட்டியும் செய்யப்படுகின்றன. ஒப்பந்த அடிப்படையில் இடம்பெறும் வேலைத்திட்டங்களாகவும் ஆலய கும்பாபிஷேகக் கிரியைகள் நமது நாட்டில் இன்று இடம்பெற்று வருகின்றன. ஆலயத்தில் கிரியைகளை நடத்தும் சிவாச்சாரியாரே பக்தி எனும் ரசத்தை ஆலயத்தில் வழிபடுவதற்காக குழுமியுள்ளோரிடம் தோற்றுவிப்பவர் ஆவார் (மந்த்ர தந்திர க்ரியா முத்ரா பாவநா பாவகாடபித).

சைவ சமயத்தவர் ஒவ்வொருவரும் சமயதீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும். நாளாந்தம் தனது உடலை சிவபோகமாக மாற்றி திரிபுண்டரமாக உடலின் பதினாறு இடங்களில் சிவமூலமந்திரத்தை உச்சரித்து திருநீற்றுறை அணிய வேண்டும். திருநீறு அணியாதவனுடைய முகம் சுடலைக்குச் சமம் எனச் சூதசங்கிதை என்ற நூல் குறிப்பிடுகிறது. திருநீறு அணிகிலாதவரைக் கண்டால் நாம் அச்சம் கொள்ள வேண்டும் என்பதை “வெண்ணீறணிகிலாதவரைக் காணில் அம்ம நாம் அஞ்சு மாறே” என மணிவார்த்தையாகிய திருவாசகம் குறிப்பிடுகிறது. ஒவ்வொருவரும் தன்னுடைய ஆத்ம ஈடேற்றத்துக்காக நாளாந்தம் ஆத்மார்த்த வழிபாடு செய்ய வேண்டும். இந்த வழிபாட்டிற்கு பூவும் நீரும் போதுமானது ஆகும். இதனைப் ‘புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு’ எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனை இந்தப் பிண்டமாகிய உடலிலே ஞானிகள் கண்டார்கள். மறையருள் பெற்று ஆன்மீக ஞானிகளாக வாழ்கின்ற அன்பர்களின் சுகம் முழுவதும் சிவமணம் கமழும் என்பதை “பூவினிற் கந்தம்

பொருந்தியவாறு போல் சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. இறைவன் வீற்றிருந்து திருவருள் புரியும் இந்தப் புனித உடலினை நம்மவர்களில் சிலர் சுடுகாடாக மாற்றிப் பேய் பிசாசுகளைக் குடிபுகச் செய்து விடுகிறார்கள். மது மாமிசத்தால் வயிற்றை நிரப்புவதுடன் போதை வஸ்த்துக்களையும் உள்ளே விடுகிறார்கள். பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயக்கம், வீண்புழுக்கம், அச்சம் என்னும் அட்டமத்துப் பசாசும் அகத்திலே குடிகொண்டு விடுகிறது. தெய்வீக உணர்வு செயலற்றுப் போக மிருக உணர்வு தலையெடுத்து தாண்டவம் ஆடுகிறது. புற ஒழுக்கம் உடம்பிற்கு தூய்மை தரும். அக ஒழுக்கம் ஆன்மாவைப் பரிசுத்தமாக்கும். உண்ணாது பட்டினி கிடந்தால் உயிர் உடலை விட்டு நீங்குமேயன்றி ஆன்மலயம் கிட்டாது. ஆகையால் உடம்பை ஓம்ப வேண்டும் என்கிறார் திருமூலர். உடம்பை ஓம்புவதன் ஊடாகத் தான் உடம்பிற்குள்ளே இருந்து நம்மை இயக்குகின்ற இறைவனைக் காணமுடியும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது:

*உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்*
*உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்*
*உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று*
*உடம்பினை யானிருந்தோம்புகின்றேனே*

தனிமனித வாழ்வில் ஒழுக்கம் இல்லாதவர்கள் சமயக் கோயிலுக்குள்ளே நுழைய முடியாது என்று இந்து சமயம் கூறுகிறது. ஆன்மீக வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பது ஒழுக்கம் என்பதே ஞானிகள் அனைவரினதும் ஏகோபித்த கருத்தாகும். கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய் ஆகிய ஐந்து குற்றங்களைப் பஞ்சமா பாதகங்கள் என நமது சமய நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. சமநிலை தளம்பாத மனநிலை பெற்றவர்களே ஞானத்தினால் இறைவனை அடைய முடியும். "எவன் கெட்ட காரியங்களிலிருந்து விலகவில்லையோ, எவனுக்குச் சாந்தி ஏற்படவில்லையோ, எவனுக்குச் சமாதி நிலைக்கவில்லையோ எவனுடைய மனம் அமைதியைப் பெறவில்லையோ, அவனால் ஞானத்தினால் கூட பரமாத்மாவை அடைய முடியாது" என உபநிடதங்கள் கூறுகின்றன.

இந்து சமயத்தவர் ஒருவருடைய உயர் இலட்சியம்

பரமபுருஷார்த்தமாகிய வீடுபேறு அடைதல் ஆகும். 'நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்' என்பதே நாவலர் பெருமானின் வாக்கும் ஆகும். இந்து சமயத்தவர்களின் பார்வையில் மனித வாழ்க்கை வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறதே ஒழிய தண்டனையாகவோ சாபக்கேடாகவோ கொள்ளப்படவில்லை. 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்றே ஞானக் குழந்தையாகிய சம்பந்தரும் குறிப்பிடுகிறார். இந்து சமயத்தவர் அடைய வேண்டிய உறுதிப் பொருட்களாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகைப் புருடார்த்தங்களும் கூறப்பட்டுள்ளது. மனம், வாக்கு, காயம், ஆகிய திரிகரணங்களாலும் ஒவ்வொருவரும் அறமுடையவர்களாக வாழ வேண்டுமென்றே இந்து சமயத் திருநூல்கள் அனைத்தும் குறிப் பிடுகின்றன. தர்மத்தைக் காத்தவனை அது காக்கும். கொன்றவனை, அது கொல்லும் என்றே தரும சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. அறவாழ்வு வாழ்பவர்களின் மனச்சான்று என்றுமே மகிழ்ச்சியாக இருக்கும். மறந்தும் பிறருக்கு நாம் தீமையை நினைக்கக் கூடாது. தீமையை நினைப்பவர்களின் வாழ்வையே அந்நினைவு பாதிக்கச் செய்யும். இதனை "மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின் அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு" எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது.

உலகியல் வாழ்க்கைக்கு பொருள்வளம் மிகவும் அவசியம் ஆகும். நேர்மையான உழைப்பும் நாணயமான சம்பாதிப்பும் ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்விற்கும் அவசியம் என்றே வேதமும் கூறுகிறது. முயற்சி உள்ளவர்களுக்கே இலக்குமி கடாச்சம் கிடைக்கும் என்பதை முயற்சியுள்ள மானிடரில் சிங்கம் போன்றவனையே திருமகளும் அணைவாள் எனப் பஞ்சதந்திரமும் கூறுகிறது. பொருள் இல்லாதவர்களை எல்லோரும் எள்ளி நகையாடுவார்கள். பொருள்வளம் உள்ளவர்களை எல்லோரும் சிறப்புச் செய்வார்கள்.

*இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை*
*எல்லோரும் செய்வர் சிறப்பு*


எனத் திருக்குறளும் செப்புகிறது.

இன்பம் சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும்.

உலகியல் இன்பங்களை அனுபவிக்கும்போது ஏற்படும் இன்பம் சிற்றின்பம் என்றும் இறைவனோடு இணைந்திருக்கும் இன்பம் பேரின்பம் என்றும் அழைக்கப்படும். உலகியல் தொடர்ந்து நடைபெறுவதற்கு இல்லற இன்பம் இன்றியமையாததாகும். தர்ம சாஸ்திரங்கள் இந்த இன்பத்தை இல்லற வழியில் அனுபவிக்க வேண்டும் என்று கூறுகின்றன. அறத்துக்குப் புறம்பான வழிகளில் அனுபவிக்கின்ற இன்பங்கள் இறுதியில் துன்பத்தையே தரும். சந்ததித் தொடர்பு அற்றுப் போகாமல் இருப்பதற்காக நீ கிருஹஸ்த தர்மத்தை மேற்கொள்வாயாக என்று பிரமச்சாரியப் பருவத்தை முடித்து வெளியேறும் மாணவனைக் குரு ஆசீர்வதித்து விடுவதைக் குருகுல கல்வியின் வரலாற்றில் இருந்து அறிய முடிகிறது. இல் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பது அன்பும் அறமுமே ஆகும். இல்வாழ்க்கையின் பண்பு அன்பு என்றால் பயன் அறமாகக் காணப்படுகிறது.

இந்து சமயத்தில் இல்லறம் என்பது ஆச்சிரம தர்மத்தின் அச்சாணியாகக் கருதப்படுகிறது. தர்மசாஸ்திரங்கள் இல்வாழ்வானை காற்றுக்கு ஒப்பிடுகின்றன. அறவழியில் நின்று பழி பாவத்துக்கு அஞ்சிப் பொருளை ஈட்டி நேரிய வழியில் இன்பத்தை அனுபவித்தால் வீடுபேற்றை அடைய முடியும். துன்பங்களில் இருந்து விடுபடுவது மட்டுமன்றி ஈடு இணையற்ற இன்பத்தை அனுபவிப்பதே மோட்சம் என்பதே இந்து சமயம் கூறும் முடிவாகும்.

*பேராதனை பல்கலைக்கழகம்,*
*இந்துதர்மம் வெளியீடு, 2001*



## சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ மகாலிங்கம்

இவர் சித்தாந்த கலாநிதி காசிவாசி செந்திநாதையர் அவதரித்த குப்பிழான் பதியில் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அன்னபூரணம் தம்பதிகளுக்கு இரண்டாவது புதல்வராகப் பிறந்தவர். குப்பிழான் முழுமையானதொரு சைவக் கிராமம். இவரது குடும்பமும் சிவனடியே சிந்தித்து வாழ்ந்த குடும்பம். இந்தப் பின்னணிகளோடு இவர் கல்வி கற்ற பாடசாலைகளும் சைவத்திருவமுதை இவருக்கு ஊட்டின. சைவநன்நெறியின் மேன்மையை எடுத்துக்காட்டி அதன்வழி நடந்து தாமாகவும் தமது அறிவைப் பெருக்கி கொண்டு ஒரு தலை சிறந்த சமயப் பேச்சாளராக இன்று பவனி வருகின்றார். திரு .சிவ மகாலிங்கம் அவர்கள் இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலயம், 1991ல் இவரது சொறிபொழிவுத் தொண்டைப் பாராட்டிச் "**சிவத்தமிழ் வித்தகர்**" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

இவரது நாவன்மையால் இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளில் வாழும் தமிழரும் பயன்பெற்றுள்ளனர்.

ஆசிரியராகவும் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும், உப அதிபராகவும் பணியாற்றிய **சிவத்தமிழ் வித்தகர்** 2002 முதல் இந்து சமயவிவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளராகச் சேவையாற்றி வருகின்றார்.

'**ஞான விளக்கு**' என்ற இந்நூலும் தமிழ் ஈழத்தில் 1999ல் வெளிவந்து பின்னர் கனடாவிலும் 2001ல் மறுபதிப்புக் கண்ட '**திருமுறைச்செல்வம்**' என்ற நூலும் இவரைச் சிந்தனைத் தெளிவுபெற்றவொரு எழுத்தாளராகவும் காட்டிநிற்கின்றன.

நல்ல எழுத்தாளராக, வல்ல பேச்சாளராக, சிறந்த கல்விமானாக, நிறைந்த பண்பாளராக, பெரிய சமூகசேவையாளராக, அரிய ஆலோசகராகப் பல்லோரும் போற்றப் பவனிவரும் இப்பெருமகனின் தொண்டுகளில் தமிழ்கூறும் நல்லுலகம் தொடர்ந்தும் நன்மைபெற எல்லாம் வல்ல சிவபெருமான் அருள்பாலிக்க வேண்டுமென்று இறைஞ்சுகின்றேன்.

சைவதுரந்தரர்
கவிஞர் வி. கந்தவனம்